விலை ரூ. 3-00 LICENCE No.WPr -136

# ஈழ சுதந்திரன்
ELASUTHANTIRAN

திருவள்ளுவராண்டு
உ0௩௨
புரட்டாசி-ஐப்பசி

அக்டோபர்-2001

புத்தகம் : 14 இதழ்: 10



∴ பயங்கரவாதத் தாக்குதலால் அமெரிக்கப் பொருளாதாரமே பாழாகியிருப்பதை இலங்கை எண்ணிப் பார்க்குமா? ∴ இலட்சக்கணக்கில் அமெரிக்கர் வேலையிழப்பதை சுற்றுலாவையே நம்பியிருக்கும் சிறீலங்கா நினைவில் கொள்ளுமா?

∴ சமாதானம் வராமல் தமிழ்மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் எதிர்காலமில்லை என்பதை புலிகளும்-சிறிலங்கா அரசும் கவனத்தில் கொள்ள வேண்டும்

# ஜே. வி. பி. ஆதரவுக்காக இலங்கையை அழிப்பாரா சந்திரிகா

## ஈழத்தமிழர் பாதுகாப்புக்கழகம் அறிக்கை

பயங்கரவாதத் தாக்குதலால் அமெரிக்கப் பொருளாதாரமே பாழாகியிருப்பதையும், இலட்சக்கணக்கான அமெரிக்கர் வேலையிழக்கும் அபாயத்தையும் எண்ணிப்பார்த்து சிறீலங்கா அரசு போரை உடனே நிறுத்த முன்வர வேண்டும். சமாதானம் வராமல் சனநாயக நெறிகளைப் பேணாமல் தமிழ் மக்களுக்கு எதிர்காலமில்லைமில்லை என்பதைப் புலிகளும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஜே.வி.பி. ஆதரவுக்காக நார்வே நாட்டு மத்தியஸ்தத்தைக் கூடப் பின்னுக்குத் தள்ளிய சந்திரிகா, அரசியல் இலாபத்திற்காக இலங்கையில் அழிவுக்கு வழிவிடக்கூடாது.

இவ்வாறு, ஈழத்தமிழர் பாதுகாப்புக்கழகம் ஒரு அறிக்கையில் கூறி உள்ளது. அந்த அறிக்கை வருமாறு:

இனப்பூசலால் யுத்த களமாகி, இரத்த வெள்ளத்தில் மூழ்கி வரும் இலங்கையைக் காப்பாற்றுவார் சந்திரிகா என்று, அவருடைய, அவரால் அவ்வப்போது வெளியிடப் படும் சமாதானப் பேச்சு வார்த்தை ஆர்வத்தைக் கண்டு உலகம் எதிர்பார்த்தால், அவர் தன்னுடைய ஆட்சியை மட்டும் காப்பாற்றிக் கொள்வதில் குறியாக இருக்கிறாரே தவிர, நாட்டைப் பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

இன்னும் சொல்லப் போனால் தனது அரசைக் கவிழாமல் காக்கவேண்டும் என்ற ஒரே அரசியல் ஆதாயத்திற்காக இந்தியப் பகைவர்களிடம் சரணடையவும் துணிந்து விட்டார் சந்திரிகா.

ஆம்; 'ஜனதா விமுக்திப் பெரமுனா' என்னும் ஜே.வி.பி. அமைப்பினர் இந்தியத் துவேசத்தைப் பரப்புவதன் மூலமே இலங்கையில் பயங்கரவாதத்தைக் கட்டியெழுப்பி தங்களை வளர்த்துக் கொண்டவர்கள் ஆவார்கள்.

கொலை

கொள்ளை

தீ வைப்பு

ஆள்கடத்தல்

பொதுச் சொத்துக்களுக்குச் சேதம்

சட்டத்தைத் தம் கையிலெடுத்துக் கொள்ளல்

வன்முறை வழிபாடு

இவற்றின் மூலமே இலங்கையில் ஆட்சியைப் பிடிக்க, 'இடது சாரிகள்' என்ற போர்வையில் எத்தனித்தவர்கள் அவர்களாகும்.

தமிழ்ப் போராளிகளிடையே பயங்கரவாதம் வடிவு கொண்டதே கூட அவர்களை பார்த்த பிறகு தான். அதற்கு முன்பு தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கு மட்டுமே ஆயுதமேந்திய அவர்கள், ஜே.வி.பி.யினரைப் பார்த்துத்தான் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களைத் தீர்த்துக் கட்டத் தொடங்கினர்.

இன்னும் சொன்னால் இடதுசாரி வாதம், பொதுவுடைமைத் தத்துவம் பேசிக் கொண்டே இனவாத அடிப்படையில் தமிழ்ப் பாட்டாளி மக்களை அவர்கள் தாக்கத் தொடங்கியதைக் கண்டும், ஆயுதங்களைக் காட்டிப் பொதுமக்களை அச்சுறுத்தி, தங்கள் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டதைப் பார்த்தும்தான் தமிழ் ஆயுதக்குழுக்களும் அத்தகைய பாதையில் நடைபோட தொடங்கினார்கள்.

அதற்குமுன் தமிழ்ப் பொதுமக்களுக்கு எதிராக மட்டுமல்ல, சிங்களப் பொது மக்களுக்கு எதிராகக்கூட தமிழ்ப் போராளிகள் தாக்குதல்களை நடத்தியதில்லை. அவர்களுடைய போராட்டமெல்லாம் சிங்கள இனவாத அரச படைகளிடமிருந்து தமிழ்மக்களைப் பாதுகாக்கும் அடிப்படையிலேயே அமைந்திருந்தன.

ஜே.வி.பி.யினர் தங்கள் செல்வாக்குக்குட்பட்ட பகுதிகளில் அரச நிர்வாகமோ, மாற்றுக் கருத்துள்ளவர்களின் நடவடிக்கைகளோ இருக்க முடியாது என்கிற நிலையை ஏற்படுத்தியதைக் கண்ட பிறகுதான், தமிழ் ஆயுதப் போராளிக் குழுக்களும் அத்தகைய நிலையைத் தமிழ்ப் பகுதிகளில் ஏற்படுத்த முற்பட்டன என்பதை இங்கே நினைத்துப் பார்க்க வேண்டும்.

அன்று இந்தியா தலையிட்டிருக்கவில்லையென்றால் இந்தியப் படைகள் துணைக்கு வந்து ஜே.வி.பி.யினரின் பயங்கரவாதத்தை முறியடித்திருக்கவில்லை என்றால், அவர்கள் அப்போதே இலங்கை அரசைக் கைப்பற்றியிருந்திருப்பார்கள். சந்திரிகா ஆட்சிக்கு வந்திருக்க முடியாது. சிறீலங்காவை இன்னொரு ஆப்கானிஸ்தானாகவே ஜே.வி.பி.யினர் ஆக்கியிருப்பார்கள்

அதை முறியடித்து, இலங்கையில் மக்கள் வாக்களிக்கும் தேர்தல் முறை மூலம் அமையும் ஆட்சிமுறை தொடர்ந்து நடைபெற உதவி செய்ததே இந்தியாதான்.

(16-ம் பக்கம் பார்க்க)

## நேரிய வழிகாட்டும் சூரியகுமாரி வாழி!

தொகையறா

அக்கினிக் குழம்பினில் அவிகின்ற தமிழரைக்கண்டு
அந்நிய தேசத்தில் தவிக்கின்ற உறவுகள் கண்டு
பொங்கி எழுந்திட்ட பூமகள் தேவியின்
பிறந்தநாள் வாழ்த்தினை வாயாரப் பாடுவோம்!

பல்லவி

கவிதைகள் தருகின்ற பூக்களே
பூவுக்கும் கவிதைகள் வேண்டுமோ?!
மழைமேகம் தருகின்ற நீரிலே
விழிநீரின் கதை சொல்ல வேண்டுமோ?

தண்ணீரில் தாமரைகள் சாகுமோ?
தன்மானத் தாமரையைப் பாடவோ?
தமிழுக்காய்ப் பூத்த இந்தத் தாமரை!
தமிழர்க்காய்த் தந்த திந்த வாழ்வினை!

சரணம்-1

கழக வளர்ச்சியில் ஆறு ஆண்டு
கனிவோடு பணிகளில் மூழ்கி னீரே!
பதினொரு ஆண்டுகள் ஆகியும் இன்றும்
தளராத செயலரைப் போற்றுவோமே!

பன்னீரில் புஷ்பங்களைக் கையில் ஏந்தி
ஈரோடு தொண்டர் நாங்கள் வாழ்த்துவோமே!
சந்தனக் காற்று வந்து வீசும் நேரம்
சந்தோஷக் காற்று மட்டும் இல்லையோ!
வழிகாட்டி எதிலியர் நெஞ்சமாற்றும் பூவேவாழ்க!

சரணம்-2

கொதிக்கும் குழம்பினில் ஈழபூமி
வெடித்துக் கிளம்பிய துண்டுதானே!
அதனில் பிறந்திட்ட சின்னத்தம்பித்
தீயிடை ஏந்திய குஞ்சு நீரே!

சூரிய நாமம் கொண்ட குமாரியே!
சூரியக் கதிர்க் கண்கள் வீசுமே!
ஏதிலிக் குடிசைகள் சிரித்திட நாளும்
திட்டங்கள் வகுத்திங்கு தாருமே
தமிழுக்காய்சிரிக்கின்ற செம்பருத்திப் பூவேவாழ்க!

-கவி. தமிழமுதன்

(ஈ.எ.ம.க. செயலாளர் செல்வி சூரியகுமாரியை வாழ்த்தி ஈரோடு மண்டல அலுவலகத் தொண்டர்கள் சார்பாக அவருடைய பிறந்தநாளுக்கு அனுப்பிய கவிதை)

''முன்னே ஒருவன் முடித்தான்தன் துப்புளலாம்
என்னே ஒருவன் இகழ்ந்திருத்தல்!-முன்னே
முடித்த படிஅறிந்து, முன்முன் அறத்தைப்
பிடிக்கப் பெரிதாய் விரைந்து''

-அறநெறிச்சாரம்

(ஒருவன் தன் முன்னாலேயே தான் நுகரும் பொருள்களையெல்லாம் அழித்துச் சென்றான். அதனைப் பார்த்திருந்தவன் அறச் செயல்களைச் செய்யாமல் இகழ்ந்திருத்தல் அறியாமையே ஆகும். முன்னே சான்றோர்கள் ஓம்பிய அறநெறிவழியை அறிந்து மேன்மேலும் அறச் செயல்களை விரைந்து செய்ய வேண்டும். அதாவது கொடுமை இழைத்தவனை வெறுமனே தூற்றிக் கொண்டிராமல் அறவினையை விரைந்து மேற்கொள்வதே அறிவுடைமை.)

# தெளிவு

## பாரையே குலுக்கிய பயங்கரவாத நெருப்பு

150 மாடிகளைக் கொண்டதும், உலகத்திலேயே உயர்ந்த கட்டடங்களில் முதல்வரிசையில் நின்றதும், அமெரிக்காவின் நியூயார்க் நகரில் அமைந்திருந்ததுமான உலக வர்த்தக மையத்தின் இரட்டை அடுக்ககங்களை கடந்த 11-9-2001 செவ்வாயன்று, பயங்கரவாதிகள் கடத்தல் விமானங்களைக் கொண்டு மோதித் தகர்த்து 10 ஆயிரத்திற்கும் மேலான அப்பாவி மக்களைப் பலி கொண்டிருப்பது உலக வரலாறு காணாத கொடுமையாகும்.

அதே தினத்தில் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் உள்ள அமெரிக்க இராணுவத் தலைமையகமான 'பெண்டகன்' கட்டடத்தின் மீதும் பயங்கரவாதிகள் தாக்குதல் மேற்கொண்டு பெருஞ்சேதத்தை உண்டுபண்ணியிருப்பது வியப்புக்குரியதாகும்.

ஏனெனில், உலகத்தின் எந்த நாட்டுத் தலைநகரில் என்ன அரசியல் காய்நகர்த்தல் நடைபெற்றாலும், மேசையிலிருந்து ஒரு குண்டூசி கீழே விழுந்தாலும் தன்னையறியாமல் நடக்க முடியாது என்கிற சக்திவாய்ந்த சி.ஐ.ஏ. உளவு நிறுவனம் அங்குதான் செயல்படுகிறது.

இந்தத் தாக்குதல்களை அமெரிக்காவுக்கு வெளியிலிருந்து கூட விமானங்களைக் கடத்தி வராமல், அங்கேயே அமெரிக்க விமானங்களையே கடத்திப் பயங்கரவாதிகள் நடத்தியிருப்பது, பயங்கரவாதிகளின் வீச்சுக்கு எதுவும் விலகியிருக்கவில்லை என்பதையே புலப்படுத்துகிறது.

அவர்களின் பழிவாங்கலுக்கு எவ்விதக் காரணமுமில்லாத அப்பாவி மக்களின் உயிர்களை அனாவசியமாகப் பலியிட்டு, அவர்களை மனிதர்கள் என்றே கணக்கிலெடுத்துக் கொள்ளாமல், இத்தகைய காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல்களை நடத்தியிருக்கும் பயங்கரவாதிகள், இப்படியே விட்டால் நாளை உலகத்தையே அழிக்க முனைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை

ஆம்; சுவாசிக்கின்ற காற்றிலே நஞ்சைக் கலந்தும், குடிக்கின்ற நீரிலே-உண்ணுகின்ற உணவிலே விஷத்தைக் கலந்தும் உக்கிரதாண்டவமாட மாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதமில்லை. நவீன அறிவியல் அதற்கான ஆயுதங்களை, செயல்முறைகளைப் படைத்துக் கொடுத்துவிட்டது.

அதே நேரம் அரச பயங்கரவாதம்தான் இதை வளர்த்துவிட்டதென்பதையும், இதற்கு வழி வகுத்தது என்பதையும் சொல்லித்தான் ஆகவேண்டும்.

ஆமாம்; காவல் துறையையும், இராணுவத்தையும் தம் கையிலே வைத்துக் கொண்டு, ஆட்சியிலிருப்பவர்கள் அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுகிறபோது அதனால் பாதிக்கப்படுகிற தனி நபர்களோ, இயக்கங்களோ அதே பயங்கரவாத முறைகளை, தற்கொலைத் திட்டங்கள் மூலம் நிறைவேற்றிக் கொள்ளப் புகுகிறபோதுதான் இதுபோன்ற விவரிக்கவொண்ணா விபரீதங்கள் நிகழ்கின்றன.

அதுவும் வல்லரிசியங்கள் மற்ற நாடுகளை ஆட்டிவைக்க வேண்டும் என்ற நோக்கில் புதுப்புது ஆயுதங்களைச் செய்து குவிப்பதும், தமக்கு உகப்பில்லா அரசுகளுக்கு எதிராகச் செயல்படுகிறவர்களுக்கு அந்த ஆயுதங்கள் கள்ளச் சந்தை மூலம் கிடைக்க வழி செய்திருப்பதும் ''தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரனாகி விடலாம்'' என்ற இழிநிலையைத் தோற்றுவித்திருக்கிறது என்றால் மிகையாகாது.

இதில் அமெரிக்காவுக்குப் பெரும்பங்கு உண்டு என்பதைச் சொல்லத் தேவையில்லை. அதற்காக இன்று அமெரிக்காவில் பயங்கரவாதிகள் நடத்திய படுபாதகத்தை நாம் நியாயப்படுத்தவில்லை. வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இதற்கு ஒசாமா பின்லேடனும், இஸ்லாமிய மதப் பழமைவாதமும் காரணம் என்று கூறப்படுகிறது. ஆனால் பமங்கரவாதக் கொடுமைகளுக்கு குறிப்பிட்ட ஒரு மதத்தையோ, மொழியையோ, தேசிய விடுதலைப்போரையோ குற்றம் சாட்டுவது பொருத்தமாகாது.

தனி நபர் பயங்கரவாதமாயினும், இயக்க பயங்கரவாதமாயினும், அரச பயங்கரவாதமாயினும், அப்பயங்கரவாதிகளைத் தனியே பிரித்து, இனங்கண்டு, ஒதுக்க-ஒடுக்க முற்பட வேண்டுமேயொழிய ''எடுத்தேன் கவிழ்த்தேன்'' என்று குற்றம் சாட்டுவது முறையல்ல.

இங்கே ''கோரிக்கை நியாயமாக இருந்தால் மட்டும் போதாது. அதை எழுப்புகிற முறையும், அதற்காக மேற்கொள்கிற செயல்பாடும் நியாயமானதாக இருக்க வேண்டும்'' என்றும், ''அற நெறியில்-அகிம்சை-முறையில்-சத்தியாக்கிரக வழியில் தான் கொள்கைகளை வென்றெடுக்க முயல வேண்டும்'' என்றும் காந்தியார் சொன்னதையும், கடைப்பிடித்து வெற்றி பெற்றுக் காட்டியதையும் அனைவரும் கருத்தில் கொண்டாக வேண்டும்.

புத்தர், மகாவீரர், ஏசு, சாக்ரடீஸ் போன்ற உலகைத் திருத்திய உத்தமர்கள் யாவரும் அந்த வழியில்தான் மனிதகுலத்தை அழிவிலிருந்து மீட்டெடுத்துள்ளனர்.

ஜனநாயகம், சமத்துவம், சகோதரத்துவம் என்கிற பாட்டைகளில் புத்துலகைப் படைத்த சிந்தனைச் சிற்பிகளில் ஒருவராகிய வால்டேர் ''நீ சொல்வதை என்னால் எற்க முடியாவிட்டாலும், அதைச் சொல்லும் உன் உரிமையைக் காப்பதற்குப் போராடுவேன்'' என்று சொன்னாரே அந்த ஜனநாயக உரிமையை-மாற்றுக் கருத்தை மதிக்கின்ற தன்மையை வளர்ப்பதன் மூலம்தான் பயங்கரவாதத்தை முறியடிக்க முடியும்.

எப்படிப் பார்த்தாலும் பயங்கரவாதம் உலகத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டியதே என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. அதே நேரம் ஜனநாயக நெறிமுறைகளை வளர்க்காமல், அமைதியாக முன்னெடுக்கும் கோரிக்கைகளுக்குக் காது கொடுக்காமல், அக் கோரிக்கைகளையும் அவற்றின் நியாயத்தைக் கருதி ஏற்க முன்வராமல், அவற்றின் பின்னால் இருப்பவர்களின் பலம்-பலவீனம், பெரும்பான்மையா? சிறுபான்மையா? என்றெல்லாம் பார்க்கும் கண்ணோட்டம் மாறாமல் பயங்கரவாதத்தை முற்றிலும் ஒழித்துவிட முடியாது.

அமெரிக்காவின் இந்தப் படிப்பினை அறநெறியே முதன்மையானது என்ற துடிப்பினை உலகத்திற்குத் தர வேண்டும். சமாதான-சமரச-சன்மார்க்க-சாத்வீகப் புத்துலகு வர வேண்டும். இதுவே நம் பிரார்த்தனை.

ஆணைக்குழுக்கள் அமைக்கும் யோசனை அவசியமில்லை!

## யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதே கட்டாய தேவை

### களனி பல்கலைக்கழக விரிவுரையாளர் ஜயந்தசெனவிரத்ன கோரிக்கை

சர்வஜன வாக்கெடுப்பு, அரசியல் குற்றப் பிரேரணை, நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆகியவற்றை ஒருபுறம் தள்ளி வைத்து விட்டு சகல அரசியல் வாதிகளும் இன்று செய்ய வேண்டிய முதல்வேலை நாட்டின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தடையாக உள்ள யுத்தத்தை நிறுத்தி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான பேச்சு வார்த்தைகளை உடனடியாகஆரம்பிப்பதாகும் என களனி பங்கலைக்கழக விரிவுரையாளர் ஜயந்தசெனவிரத்ன கருத்து வெளியிட்டுள்ளார்.

இன்று நாடு முகம் கொடுத்திருப்பது அரசியல் யாப்பு சம்பந்தமான பிரச்சினைக்கு மேலாக அரசியல் பிரச்சினையாகுமென குறிப்பிட்ட விரிவுரையாளர் செனவிரத்ன மேலும் தெரிவித்ததாவது:-

1978ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு ஜன நாயகத்திற்கும் சுதந்திரத்திற்கும் பாதகமாக இருப்பதால் அதனை மாற்றியமைக்க வேண்டுமென்பதை சகலரும் இன்று எதிர்பார்க்கிறார்கள். அந்த அரசியல் யாப்பில் குறிப்பிட்டுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்குதல், விகிதாசாரப் தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வருதல் ஆகிய பல அம்சங்களை உள்ளடக்கிய விடயங்களில் கருத்து வேறுபாடு இல்லையெனில், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறுவதில் உள்ள சிக்கலுக்கானமூல காரணம் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஏற்படும் தடையாகும்.

பலகோடி ரூபாய்களை யுத்தத்திற்காகச் செலவிடுவதால் நாட்டின் அபிவிருத்தியும், பொருளாதாரமும் வீழ்ச்சியுற்று வேலையில்லாப் பிரச்சினை உட்பட மேலும் பல பிரச்சினைகள் உருவாகி நாட்டில் அராஜகம் நிகழ்வதைத் தவிர்க்க முடியாத நிலை ஏற்படும்.

ஆணைக்குழுக்களை நியமிப்பது சம்பந்தமான ஆலோசனைகள் ஜனநாயகத்தை ஸ்திரப்படுத்துவதற்கு மிகவும் அவசியமெனினும், இன்றைய காலகட்டத்தில் அவற்றை பின்னர் யோசிப்பதே சிறந்த முறையாகும். செய்ய வேண்டியது சமாதான பேச்சு வார்த்தைகளை உடனடியாக ஆரம்பிப்பதாகும். அவ்வாறு செய்வதால் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய சிறுபான்மைக் கட்சிகளுக்கு அவர்களின் எண்ணங்களுக்கேற்ப செயல்பட முடியும்.

சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதன் பலனாக யுத்த நிறுத்தம்மேற்கொள்ளப்பட்டு நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றமடைந்து அபிவிருத்திகளை மேற்கொள்ள வழியேற்படுவதோடு உல்லாசப் பிரயாணத் துறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியும் நிவர்த்திக்கப்பட்டு நாடு அராஜகத்தை நோக்கிச் செல்வதில் நின்றும் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றார்.

## உவர்மலையில் உப தபால் நிலையம் வேண்டும்

திருகோணமலை உவர்மலைப்பகுதியில் உபதபால் நிலையம் ஒன்றினை அமைக்குமாறு இப்பகுதி வாசிகள் கோரி வருகின்றனர்.

உவர்மலை பகுதியைப் பொறுத்தவரை தற்போது ஐயாயிரத்திறகும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். மிக நீண்ட தூரம் சென்றே இவர்கள் காசுக்கட்டளை போன்றவைகளைப் பெறவும் பொதிகளை அனுப்பவும் வேண்டிய நிலையில் உள்ளனர். இந்த நிலையில் இப்பகுதியில் உப தபால் நிலையம் ஒன்று விரைவில் அமைக்கப்பட வேண்டும் என்று இவர்கள் கோரி வருகின்றனர்.

## வாசகர் நெஞ்சம்

ஆசிரியரே,

''அரச பயங்கரவாதமும், இயக்க பயங்கரவாதமும், இலங்கையை அழிவின் விளிம்புக்கே துரத்திவிட்டன. நாளை என்ன நடக்குமோ என, அனைத்து மக்களும் நடுங்க வேண்டிய நிலை, ஆயுதக் கொள்முதல் கமிஷனுக்காகவும், அடுத்த இயக்கம் தலைதூக்கக் கூடாது என்பதற்காகவும் அரசும்-புலிகளும் மக்களை மறக்கின்றனர். எனவே, சர்வதேச சமுதாயமே, இந்தியாவே இலங்கையை அழிவிலிருந்து காப்பாற்றுக'' என்று கோரிக்கை விடுத்து ஈழத்தமிழர் பாதுகாப்புக்கழகம் விடுத்திருந்த அறிக்கை காலத்தின் குரல். கேட்க வேண்டிய காதுகளுக்கு அக்குரல் எட்டுமா என்பதே கேள்விக்குறி.

மு. அ. அருணாசலம்; விருத்தாசலம்.

''தேசிய மொழிகள் இரண்டாக இருந்தால் நாடு ஒன்றாக இருக்கும். சிங்களம் ஒரு மொழிதான் என்றால் நாடு இரண்டாகும்'' என்று, சிங்களம் மட்டும் சட்டம் வந்த போதே சிங்கள இடது சாரித் தலைவர்கள் எச்சரித்திருந்ததை எடுத்துக்காட்டியிருந்தீர்கள். அது அந்தக் காலம். இன்றோ தீவிர இடதுசாரிகள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் ஜே.வி.பி.யினர் தமிழ் மக்களுக்கு எதுவும் கொடுக்கக் கூடாது; சமரசப் பேச்சுக்குப் போகக் கூடாது என்ற நிபந்தனையின் பேரில் அரசுக்கு ஆதரவு கொடுக்கின்றனர்.

ஒய்.பி. சர்வோத்தமன், சென்னை-44.

'இடது சாரியா? இனவாதியா?' என்கிற தலைப்பில் இடம் பெற்ற ஆசிரியத் தலையங்கம் அபாரம். இடதுசாரியாயினும், வலது சாரியானாலும் சிங்களவர் எல்லாரிடமும் இனவாதந்தான் தலைதூக்கி நிற்கிறது என்பதே உண்மை.

அ.ரா. மார்த்தாண்டன், கோவை-8.

சி.வை. தாமோதரம் பிள்ளை பற்றி சுந்தரபாண்டியன் எழுதியிருந்தது கொஞ்சம். எழுதாமல் விட்டது அதிகம். தமிழுலகத்தில் அவரையொத்த திறமை படைத்தவர்கள் ஒரு சிலரே. ஈழத் தமிழ் மேதைகளில் பல வகையில் முன்னோடி அவரே.

வே. இரா. திருஞானசம்பந்தம், சென்னை-1.

யாழ் மாவட்டத்தின் கல்வித்தரம் குறைந்து விட்டதாக 'ஈழசுதந்திரனில்' செய்தி பார்த்து இரத்தக்கண்ணீர் வடித்தேன். ஏனெனில், வரலாறறிந்த காலம் தொட்டு இலங்கையிலேயே கல்வியில் முதலிடத்தைப்பெற்று வந்தது யாழ் மாவட்டமாகும். சிறீலங்கா அரசு தரப்படுத்தல் திட்டத்தைக் கொண்டு வந்ததே யாழ் மாவட்டத்தின் வேகத்திற்கு மற்ற மாவட்டங்கள் ஈடு கொடுக்க முடியவில்லை என்பதற்காகத்தான். அந்த யாழ் மாவட்டமே கல்வித்தரத்தில் இறங்கி விட்டதென்றால், தமிழரின் கல்வித்தரம் படுபாதாளத்தில் விழுந்து விட்டது என்பதையே அது குறிப்பதாகும்.

பொ. இராமநாதன், திருச்சி-8.

'விட்டில் பூச்சிகள்' தமிழ்ச்செல்வியின் சிறுகதை இன்றைய முகாம் வாழ்க்கையை அப்படியே படம்பிடித்துக் காட்டியது. 'கலையுலகத் தலைமகன்' என்ற தலைப்பில் சிவாஜிகணேசன் பற்றி எழுதியிருந்தது நெஞ்சத்தைத் தொட்டது.

40வயதுக்கு மேல் செய்து கொள்ள வேண்டியமருத்துவப் பரிசோதனைகள் பற்றி அறிவியல் பகுதியில் குறிப்பிட்டிருந்தது அருமை. 'யாழ்ப்பாண இராச்சியம்' கட்டுரையில் ஆனைக் கோட்டை குறித்து சி.க. சிற்றம்பலம் தந்திருந்த விவரங்கள் ஏராளம். கவிதைச்சரத்தில் 'அம்மா' என்ற தலைப்பில் கஸ்தம்பாடி சந்திரலேகா வடித்திருந்த கவிதை உள்ளத்தை உருக்கியது. 'தந்தை செல்வா' தொடரில் பண்டாரநாயகா கொலை பற்றிய சபாரத்தினத்தின் வருணனை நேரில் பார்ப்பது போல அமைந்திருந்தது. பாராட்டுக்கள்,

இரா. முத்து, கோவை-3

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்தின் செய்திகள் இப்போதெல்லாம் நிறையவே இடம் பெறுகின்றன. அதற்காக ஈழத்துச் செய்திகளைக் குறைத்துவிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

S. மோகன், சென்னை-78.

# புலிகள் என்ற சந்தேகத்தில் 1700 பேர் அரச சிறைகளில் 10 படையினர் புலிகளின் பாதுகாப்பில்

### செஞ்சிலுவைச் சங்க அதிகாரி தகவல்

இலங்கையில் தற்போதைய போர்ச்சூழலில் இருதரப்பிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளிலும் பார்க்க இருதரப்பிலும் கொல்லப்படுவோரின் சடலங்களையே நாம் அதிகமாகப் பார்வையிடுகிறோம். இது கவலையளிக்கும் விடயமாகும் 'என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்பு இணைப்பாளர் பியர் பராஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கொழும்பு ஹொலிடே இன் ஹோட்டலில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவினரின் கருத்தரங்கொன்று நடத்தப்பட்டது. ''இலங்கையில் செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு'' என்ற தலைப்பில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் உரையாற்றும்போதே குழுவின் இணைப்பதிகாரி மேற்கண்ட கருத்தினைத் தெரிவித்தார்.

அரசாங்கத் தரப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 1700 தமிழ்க் கைதிகளையும் விடுதலைப் புலிகள் வசம் தடுத்து வைக்கப்பட்டுள்ள 17 கைதிகளையும் நாம் தற்போது பார்வையிட்டு வருகின்றோம். புலிகள் வசம் 9 இராணுவத்தினரும் 1 கடற்படை வீரரும் 7 கப்பல் சிப்பந்திகளும் உள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

1990ம் ஆண்டு முதல் நாட்டில் காணாமல் போனோர் தொடர்பாக நாம் தேடுதல் நடத்தி வருகின்றோம். யுத்தத்தில் பெருமளவான படைவீரர்கள் காணாமல் போயுள்ளனர். அவர்களது நிலையினை அறிய குடும்பத்தினர் பெரும் ஆர்வம் கொண்டுள்ளனர். பாதுகாப்பு அமைச்சும் இவர்கள் தொடர்பான விபரங்களை எமக்கு வழங்கியுள்ளது இவை குறித்த விபரங்களை நாம் எதிர்த் தரப்பினரிடம் சமர்ப்பித்துள்ளோம் என்றும் கூறிய குழுவின் இணைப்பதிகாரி பராஸ் மேலும் தெரிவித்ததாவது:-

காணாமல் போனவர்கள் தொடர்பாக உறவினர்கள் எம்மிடம் முறைப்பாடுகளை செய்ததும், நாம் சம்பந்தப்பட்ட தரப்பு அதிகாரிகளை அணுகுகின்றோம். ஆனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் பதில் தருவதில்லை. பதில் தராவிட்டால் நாம் மீண்டும் மீண்டும் அதிகாரிகளை அணுகுகின்றோம்.

யுத்தத்தில் ஈடுபடும் இரு தரப்பினராலும் பல யுத்த மீறல்கள் நடைபெற்றுள்ளன. இது குறித்து நாம் இரு தரப்புக்கும் சமமான அளவு அறிவுறுத்தல்களை சமர்ப்பித்துள்ளோம். இதனை முறைப்பாடு என்று கூறமுடியாது. இருதரப்பினருடனும் ஆலோசித்துள்ளோம் என்றே கூற முடியும்.

அரசாங்கத்தரப்பினரிடம் யுத்தத்தின் போது கைது செய்யப்பட்ட 32 புலிகள் இயக்க சந்தேக நபர்கள் உள்ளனர். இவர்களையும் நாம் பார்வையிட்டு வருகிறோம்.

1995ம் ஆண்டு பேச்சு வார்த்தையின் போது ஜனாதிபதிக்கும் புலிகள் இயக்கத் தலைவருக்கும் இடையில் நாம் கடிதங்களைப் பரிமாறினோம். இலங்கையில் 52 வெளிநாட்டு உத்தியோகத்தர்களும் 300 உள்நாட்டு உத்தியோகத்தினரும் பணியாற்றி வருகின்றனர் என்று எமது செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் பேச்சாளர் ஹர்சா குணவர்த்தன இங்கு தெரிவித்தார்.

கடந்த வருடம் காணாமல் போனவர்களைக் கண்டு பிடித்துத் தருமாறு கோரும் 979 மனுக்கள் கிடைக்கப் பெற்றன. இதில் 273 பேர் எங்கிருக்கிள்றனர் என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மோதலில் கொல்லப்பட்ட 436 சடலங்களை நாம் இரு தரப்பினரிடமும் பரிமாற்றம் செய்துள்ளோம். 1600 நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக கப்பல் மூலம் யாழ்ப்பாணத்தில் இருந்து தென்பகுதிக்குக்கொண்டு வந்துள்ளோம். கடந்த வருடம் 3290 கைதிகளை பார்வையிட்டுள்ளோம் என்றும் ஹர்ஷா குணவர்த்தன தெரிவித்தார்.

செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் பணிகள் தற்போது வடகிழக்கில் மட்டும் நடைபெற்று வருவதனால் புலிகளுக்கு எமது குழு உதவுவதாகச்சிங்கள மக்கள் எண்ணுகின்றனர். 1989ம் ஆண்டு ஜே வி.பி.யின் கிளர்ச்சியின் போது எமது குழு தென் பகுதியில் மட்டுமே செயற்பட்டது என்பதை சிங்கள மக்கள் மறந்து விடக்கூடாது என்று அவர் மேலும் கூறினார்.

யுத்தத்தின்போது கடைப்பிடிக்க வேண்டிய ஜெனீவா சாசன விதிகளை தமது இயக்கம் பின்பற்றும் என்று கூறி 1988ம் ஆண்டு புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவுக்கும் ஐ.நா. சபைக்கும் கடிதம் சமர்ப்பித்துள்ளார் என்று இங்கு கருத்துத் தெரிவித்த குழுவின் பிரசாரப்பிரிவு அதிகாரி வி.ரி, ஆர். மோகன் தெரிவித்தார்.

நிரந்தர சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உருவாக்குவதற்கான வாய்ப்பு கடந்த 1998ம் ஆண்டு எழுதப்பட்டு விட்டது. இதில் 35 நாடுகள் கையொப்பம் இட்டுவிட்டன. இன்னமும் 5, 6 நாடுகள் கையெழுத்திட்டால் இந்த நீதிமன்றம் செயற்பட ஆரம்பித்துவிடும் என்றும் அவர் மேலும் சொன்னார்.

### இனவெறி எதிர்ப்பு மாநாட்டில்

# மலையகத் தமிழர் பிரதிநிதிகள் பங்கேற்பு

தென் ஆப்பிரிக்காவில் நடந்துவரும் சர்வதேச இனவெறி எதிர்ப்பு மாநாட்டில் இலங்கையைச் சேர்ந்த மலையகத் தமிழர்கள் பங்கேற்றனர். தங்களுக்கு நீதி வழங்கக்கோரி அவர்கள் குரல் எழுப்பியுள்ளனர். மலையகத்திலிருந்து எட்டுப்பேர் இதில் பங்கேற்றுள்ளனர். அரசுசாரா அமைப்பாக பங்கேற்ற அவர்கள் இலங்கை அரசின் அடக்குமுறையை எதிர்ந்து ஆதரவு திரட்டினார்கள். இது குறித்து அந்த 8 பேரில் ஒருவரான விஜயசந்திரன் சாரங்கன் கூறியதாவது:-

மலையகத் தமிழர்களில் இன்னும் 3 லட்சம் பேர் நாடற்றவர்களாக தவித்து வருகிறார்கள். இலங்கை அரசு அவர்களுக்கு குடியுரிமை தர மறுக்கிறது. நாடற்ற எங்களுக்கு கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி போன்ற அனைத்து உரிமைகளுமே மறுக்கப்படுகின்றன. மலையகத் தமிழர்கள் ஓலைக் குடிசைகளில் மிகவும் ஏழ்மை நிலைமையில் பரிதவிக்கிறார்கள்.

இலங்கையின் மத்திய பகுதியில்(கண்டிப் பகுதியில்) மலையகத் தமிழர்கள் இருப்பதால் சிங்களவர் தமிழர் கலவரம்மூளும்போது முதலில் மலையகத் தமிழர்கள்தான் தாக்கப்படுகிறார்கள். ஐக்கிய நாடுகள் சபை தலையிட்டு எங்களுக்கு குடியுரிமை வாங்கித்தர வேண்டும்.

# போரை நிறுத்திட அகதிகளின் பொதுக் குரல்

உலக நாடுகளில், பல நகரங்களில் ஈழத் தமிழ் அகதி மக்கள் கூடிப் பல பேரணிகள் நடத்துகிறார்கள். பல தீர்மானங்களை நிறைவேற்றுகிறார்கள். பத்திரிகைகள் பலவும் படம் போட்டுச் செய்திகன் வெளியிடுகின்றன; தொலைக்காட்சிகளிலும் காண்பிக்கிறார்கள்.

ஆனால் இவர்களை விடவும் பல வழிகளில் பாதிப்படைந்த உண்மையான அகதிகள் இலட்சம் பேர் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். இவர்கள் ''அமைதி எப்போது வரும், தாய் நாட்டிற்கு எப்போது போகலாம்?'' என்று இரவும் பகலும் நினைத்து நினைத்து வேதனையோடு வாழ்கிறார்கள்.

தாய்நாட்டில் சொந்தத் தொழில் விவசாயம், சொந்தமாக வீடு, நிலம், ஆடு, மாடு, வாகனம், வங்கியில் பணம் என்று மதிப்போடு வாழ்ந்த ஈழத்தமிழ் மக்கள் தம்மீது திணிக்கப்பட்ட போரின் காரணமாக அகதிகளாகத் தமிழ் நாட்டுக்கு அடைக்கலம் தேடிவந்து முகாம்களில் அவல நிலையில்!

சிங்கள இராணுவத்தின் விமானத் தாக்குதலில் வீடுகளை இழந்தவர்கள், பீரங்கித் தாக்குதலில் பெற்றோரை பிள்ளைகளை இழந்தவர்கள், துப்பாக்கிச்சூட்டின் துயரங்களை அனுபவிப்பவர்கள் என்று அவர்களின் கண்ணீர்க் கதை தொடர்கிறது.

கண்ணிருந்தும் குருடர்களாய், வாயிருந்தும் ஊமைகளாய்-இவர்களது பிரச்சினைகள் கண்டு கொள்ளப்படாத நிலை!

அகதி முகாம்களின் குறைபாடுகளையோ, அரசுத் துறை அல்லது காவல் துறைக் கெடுபிடிகள் குறித்தோ இந்திய அரசியலைப் பற்றியோ இவர்கள் வாய் திறப்பதே இல்லை.

தஞ்சமடைந்த பூமியில் தங்குவதற்கு ஓர் இடம், மாதக் கொடுப்பனவு, பிள்ளைகளுக்குப் படிப்பு- இவ்வளவாவது கிடைக்கிறதே என்று திருப்திப் பட்டுக் கொள்கிறார்கள்.

ஆனால் போருக்கு அஞ்சி ஓடிவந்து விட்டவர்கள் அகதிகள் என்ற அவப்பெயரைச் சுமந்து கொண்டு இன்னும் எவ்வளவு காலத்திற்கு வாழ்வது?

1983 முதல் இருபது ஆண்டுகளாக இவர்கள் அனுபவிக்கும் துயரத்திற்கு முடிவே இல்லையா?

ஊரைப்பிரிந்து, உற்றாரை இழந்து சமூக அந்தஸ்தும் பறிபோய் கிட்டத்தட்ட சிறைக் கைதிகள் போன்று அகதி முகாம்களில் முடங்கிக் கிடக்கும் இந்த நிலை எப்போது மாறும்?

சொந்த நாட்டைப்பற்றி, தன்னுடைய சொந்த வீட்டைப் பற்றி, தான் பிறந்து வளர்ந்த அழகிய கிராமத்தைப் பற்றிக் கனவு காணும் அகதிகள் அதைப்பற்றி வெளியில் பேசக்கூடாதா? ஏன்? ஈழப்போரில் இருபது இராணுவத்தினர் செத்தனர். பத்துப்புலிகள் இறந்தார்கள் என்று மேலோட்டச் செய்திகளை மட்டும் பார்த்துக் கொண்டு, ஊமையாக இருக்கத்தான் வேண்டுமா?

விடுதலைப் புலிகளின் வீரசாகசங்களை வியந்தும் அவர்களின் உயிர்த் தியாகத்தால் இழந்த நாட்டைத் திரும்பப் பெறலாம் என எண்ணிக்கொண்டும் எவ்வளவு காலத்திற்கு இங்கே இருக்கப் போகிறோம்?

சிங்கள இராணுவமும், தமிழ்ப் புலிகளும் மாறி மாறி வெற்றி பெறுவதும் பின்வாங்குவதும் எவ்வளவு காலம்?

போரினால் தீர்வு இல்லை என்பதை உணர்ந்தாலும் சிங்கள அரசுக்கு பௌத்த பிக்குகளினதும், சிங்கள இனவாதிகளதும் தேவைக்காக யுத்தத்தை தொடர வேண்டிய நிலை! அவர்களை எதிர்த்துப் போரிட வேண்டிய நிலை புலிகளுக்கு!

போரின் விளைவைப் பார்த்து யுத்தம் போதும் என்ற நிலைக்குப் பொது மக்கள் வந்து விட்டார்கள். ஏன்; சமாதானத்திற்கு எதிரானவர்கள் என வருணிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் கூட, பேச்சுவார்த்தைக்கு ஏதுவாக ஐந்து மாதங்கள் போர் நிறுத்தம் செய்தனர். இருந்தும் சிங்கள இராணுவத்தின் இடைவிடாத தாக்குதல் காரணமாக-புலிகள் மீண்டும் பதிலடி கொடுக்க வேண்டிய நிலை உருவானது.

இந்த நிலை இன்னும் நீடிக்கத்தான் வேண்டுமா?

இதில் நமது பங்கு என்ன?

பயங்கரப் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் நாம்; ''போரை நிறுத்துங்கள்! எங்களையும் வாழவிடுங்கள்'' என்று குரல் எழுப்பும் தகுதியும் நமக்குத் தான் இருக்கிறது.

ஆகவே அகதிகள் அனைவரும் ஒன்றிணைந்து-ஆரம்பக் கட்டமாக, ''போரை நிறுத்துங்கள்! எங்களையும் வாழவிடுங்கள்'' என்று ஒருமித்துக் குரல் எழுப்புவோம்! ஓரணி திரள்வோம்!

சிவசக்தி

# விடுதலைப் போராட்டத்தை காட்டிக் கொடுத்து அரசு அதிகாரப் பஞ்சு மெத்தையில் தூங்கத் தயாரில்லை

### சம்மாந்துறையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரஊப் ஹக்கீம் பேச்சு

மெழுகு வத்தியாக இருந்து எம்மை இழந்தாவது எமது மக்களுக்கு வெளிச்சத்தை வழங்க வேண்டும் என்ற புடம்போட்டு வளர்க்கப்பட்ட தலைமைத்துவத்தில் இருந்து வந்தவர்கள் நாங்கள் சலசலப்புக்களுக்கு அஞ்சப் போவதுமில்லை கெஞ்சப் போவதுமில்லை. இன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இந்த நாட்டில் எடுத்திருக்கும் அரசியல் நிலைப்பாட்டை நாளை நமது இளைய சமுதாயம் ஒரு வரலாறாகப் படிக்கப் போவதை யாரும் தடுத்து நிறுத்த முடியாது என, மக்கள் நீதிமன்றத்தின் முன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் தலைப்பில் சம்மாந்துறையில் நடைபெற்ற விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் ரஊப் ஹக்கீம் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இன்று சம்மாந்துறையில் நடைபெறும் எழுச்சிக்கூட்டம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில் எவ்வாறு கல்முனை பிரதேச முஸ்லிம் மக்கள் முஸ்லிம்காங்கிரஸின் தலைமைத்துவம் மீது கொண்டிருந்த நம்பிக்கையை நிரூபித்தார்களோ, அவ்வாறே சம்மாந்துறை முஸ்லிம் மக்களும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைமைத்துவத்தின் மீதான நம்பிக்கையை இன்று நிரூபித்தார்கள்.

இன்று ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் புதிய போராட்டப் பாதையில் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது. இந்தப்பயணம் எமது மரணம் வரையான பயணமாகும். மறைந்த எமது தலைவர் எத்தகைய சவால்களை எதிர்கொண்டு இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றாரோ அதற்கு ஒருபடி மேலே சென்று முஸ்லிம்களுக்கு எதிரான பேரினவாத சக்திகளின் எதிர்ப்புகளையும் கட்சிக்குள்ளேயே இருந்து குழிபறிக்கும் கூட்டத்தினரின் சவால்களையும்எதிர்கொண்டு இப்போராட்டத்தை முன்னெடுத்துச்செல்கிறேன். சத்தியம் வந்தால் அசத்தியம் அழிந்தே தீரும். அவ்வாறே அவர்கள் அழியப் போகும் நாட்கள் வெகுதூரத்தில் இல்லை. சந்திரிகாவின் ஆட்சியின் அந்திம கால நாட்களை வருடக்கணக்கில் அல்ல. நாட்கணக்கில் எண்ணிக் கொண்டு இருக்கும் இவர்களது அரசியல் அதிகாரம்ஒரு பாராளுமன்ற பொதுத் தேர்தல் வரையில் தான்.

இன்று ஆட்டம் கண்டு கொண்டிருக்கும் அரசை தக்க வைத்துக் கொள்வதற்காக பல சிரேஷ்ட அமைச்சர்கள் தொடர்ந்தும் எம்மோடு தொடர்புகொண்டு வருகிறார்கள். எது எவ்வாறு இருப்பினும் முஸ்லிம் சமுதாயத்தின் விடுதலைப் போராட்டத்தை காட்டிக் கொடுத்தோ அல்லது கைவிட்டோ அரச அதிகாரம் எனும் பஞ்சு மெத்தையில் தூங்குவதற்கு நாங்கள் தயாரில்லை என்ற செய்தியை சந்திரிகா அம்மையாரின் அரசிடமும் அவருக்கு துணைபோகும் கைக்கூலிகளுக்கும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏறத்தாழ 20க்கும் மேற்பட்ட சமூகசேவை நிறுவனங்கள், நம்பிக்கையாளர்கள் சபை, உலமா சபை என்பன தேசியத் தலைவருக்குப் பொன்னாடைகள் போர்த்தி கௌரவித்தன.

அன்றைய தினம் சம்மாந்துறை நகரெங்கும் அலங்காரம் செய்யப்பட்டதோடுபல பதாகைகளும் தொங்கவிடப் பட்டன. அப்பதாகைகளில் காணப்பட்ட சில வாசகங்கள் வருமாறு;

''முஸ்லிம்களின் மானங் காத்த தலைவரே வருக!'' பதவிக்கு விலை போகாத எமது பாராளுமன்ற உறுப்பினர்களே வருக!'', ''முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை வென்றெடுக்கவும் அதனைப் பேணிப் பாதுகாக்கவும் முஸ்லிம் காங்கிரஸால் மட்டுமே முடியும்'', ''எமது சமுதாயத்தின் தன்மானம், சுயகௌரவம், தனித்துவம், சுயநிர்ணயத்தை வென்றெடுக்கும் தானைத் தளபதிகளே வருக!''

# இப்படியும் நடக்கிறது

இறந்த ஒருவரின் சடலத்தின் விலை என்ன? ரூபா 14½ இலட்சம் ஆச்சரியம் இல்லை உண்மை. இதோ கதை.

கனேமுல்லை கந்தலியத்தையைச் சேர்ந்த தனியார் துறை ஊழியர் ஒருவர் பெயர் பாலிதகருணாஜீவ.

கடந்த மாதம் கத்திக் குத்து சம்பவம் ஒன்றுக்கு இலக்காகி காயத்திற்குள்ளான இவரை அவரது குடும்பத்தினர் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரிக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டு வந்தனர்.

அங்கு தங்கிச் சிகிச்சை பெறக் கட்டில் இல்லை. இதனால் அவரது குடும்பத்தினர்அவரது உயிரைஎப்படியும் காப்பாற்ற வேண்டும் என்ற ஆர்வத்தில் கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையொன்றில் சேர்த்தனர்.

அந்த மருத்துவமனையில் 11, 12 மாதங்களாக அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. பலன் அளிக்காத நிலையில் சில தினங்களுக்கு முன் அவர் இறந்து விட்டார்.

அவரின் சடலத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அவரின் குடும்பத்தினர் மருத்துவமனை அதிகாரிகளை நாடியபோது அவர்கள் 14½ லட்சம் ரூபாவுக்கான பில்லை கையில் கொடுத்திருக்கின்றனர்.

இந்த பணத்தை செலுத்தினால்தான் சடலம்கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டது.

ஈற்றில்சடலத்தைப் பெற்றுக் கொள்வதற்காக மரணமடைந்த கருணாஜீவவுக்கு சொந்தமான வேனையும் வீட்டையும் விற்க வேண்டிய நிலை அவரது பெற்றோருக்கு ஏற்பட்டது.

உடமைகளை விற்று14½ லட்சம் ரூபாயையும் கொண்டு வந்து தனியார் மருத்துவமனைக்கு கொடுத்த பின்னர் தான் இறந்தவரின் சடலம் குடும்பத்தினரிடம் கையளிக்கப்பட்டதாம்.

இறந்தவரின் மரணம் தொடர்பாக நடைபெற்ற பிரேத பரிசோதனையின் போது கருணாஜீவவின் தந்தையான சோலங்க ஆரச்சிகே கருணாசேன இந்த பரிதாப நிலையை மரண விசாரணை அதிகாரியான கொழும்பு மாநகர மேலதிக மரண விசாரணை அதிகாரி எட்வட் அஹங்கமவிடம் தெரிவித்துள்ளார்.

# மொட்டு மலரும்

'யாரோ'

இரவு 12 மணியாகுது இன்னும் தூக்கம் வரவில்லை என்ன காரணம் ஒரே குழப்பமாக இருக்கே.

நாளைக் காலையில் பரீட்சை. படிக்க வேண்டும் படிக்க பிடிக்கவில்லை.

அவன் வெளிநாடு போனால் எனக்கேன்ன உறவா இல்லை. அகத்தி ஆயிரம் காய் காய்த்தாலும் பிறத்தி பிறத்திதான்.

என் மனது ஏன் இப்படி குழப்பமாக இருக்கிறது?

அசதியில் உறங்கி இருந்தாள்.

''ஏய் கனிபா மணி 8 ஆகுது இன்று ரீயூசன்இல்லை யாடி எழும்பிக், குளித்து சாப்பிட்டுபோ, பரீட்சை அல்லவா இன்று மட்டும் என் இப்படி தூங்குறே? நான்கு மணிக்கு எழுந்து படிக்கிற பிள்ளை. என்ன, உடம்புக்கு முடியவில்லையா?''

''இல்லை அம்மா உடம்பிற்கு அசதியாக இருந்தது தூங்கி விட்டேன்.''

எழுந்து குளித்து கிளம்பி ரியூசனுக்கு போவமா விடுவமா? அம்மாபாவம் படிப்பிற்காக ரியூசனுக்கு எவ்வளவு கஸ்ரப்படுகிறார்?

ஏய் இன்னும் கனிபா வரவில்லையடி 9-30 மணிக்கு வண்டி போய்விட்டது, ஏய் வசந்தி அதோ வருகிறா, பார் சுகந்தி இப்ப தான் வருகிறாள். படிக்க வீட்டில் வேண்டாம் என்கிறார்களோ முகம் ஒரு மாதிரியாக இருக்கு?

வினிதா பாவம் படிப்பிற்கு அவங்க வீட்டில் தடை இல்லை கிட்ட வரட்டும் கேட்டு என்ன பிரச்சினை என்று அறிவோம்.

கிண்டலாக, பாருங்கடி அவ நல்ல சந்தோசமா வருகிறா.

ஏய் உனக்கு விசேசமா? ஆமாண்டி விசேசம்தான் கிண்டல் தான்.

எப்ப பார்த்தாலும் சந்தோசமாகத்தான் இருப்ப. இன்றுமட்டும் ஏன் டல்லாக இருக்கிறாய். பெரிய கப்பல் கவுந்த மாதிரி இருக்க முகத்தில். சொல்.

ஏய் இவவ விடக்கூடாது என்ன என்று அறிய வேண்டும்.

பாவம் அவவை எதுவும் கேட்காதீர்கள். பரீட்சைக்கு போவோம் பரீட்சை முடியட்டும் கேட்போம்.

நல்லா எல்லாப் பாடத்திலும் படிக்கிறவா எல்லா கேள்விகளுக்கும் எழுதி உடனே கொடுத்து விடுவா. கணக்கு என்றால் அவளுக்கு ரொம்ப பிடித்த பாடம்.

சா மார்கள் எல்லோருமே அவளை பாராட்டுகின்றனர். டல்லா இருந்தும் செய்து கொடுத்துட்டு போயிட்டா.

## சிறுகதை

வாங்கடி நாம போய் என்ன செய்கிறா என்று பார்ப்போம். இன்றுமட்டும் நம்மை விலகிப் போய் விடுகிறாளே, சக்தி அண்ணன் இவளின் மனதைக் குழப்பி விட்டாரோ.

ஆமடி இவ எனக்கு சொன்னா இந்த அண்ணா I love you என்றாராம். இவளுக்கு அதற்கு பிறகு அவரை பிடிக்காது. இருந்தாலும் அவர் அவளுக்கு பின்னாலே வருகிறார்.

வண்டிக்கு சீட்டு எடுக்கிறான். இதை நான் பார்க்கிறேன். எடுத்தாலும் அவ நான்கு சீட்டு எடுக்கிறா அவ என்னதான் செய்வா அவளிடம் இன்று எல்லாத்தையும் கேட்டு அறிந்துதான் வீட்டுக்கு போறது.

கிட்ட உட்கார்ந்து ''ஏய் உன் மனதில் உள்ளதை எங்களுக்குச் சொல்லக்கூடாதா?

ஒன்றும் வைத்திருக்கவில்லையடி.

அப்ப சொல்லண்டி. ஏன் டல்லாக இருக்கிறாய்?

சொல்கிறேன் நேரம் வரும்போது. தயவு செய்து இந்தக் கிழமை பரீட்சை முடியும்வரை குழப்பாதீர்கள். பிரீயா விடுங்கள்.

சரி விடுங்கடி. ஆமாண்டி பரீட்சை முடியட்டும்.

சார், இம்மாத பரீட்சையில் கனிபாவைவிட யார் நல்ல மதிப்பெண்கள் எடுத்துள்ளார்கள்?

மிஸ் கனிபா இம்முறை 60 to 70க்குள்தான் எல்லா பாடமும்எடுத்திருக்கிறா.

ஆ என்ன 90 to 98க்குள் எடுக்கிற மாணவியோ! நீங்கள் படிப்பித்தது புரியவில்லை.

கணேசன் சார் இந்தக் கிழமை முழுக்க கலகலப்பா பேசவில்லை. கனிபா என்ன சார் உடம்பிற்கு முடியவில்லையா?

உடம்பு நன்றாக இருக்கு வீட்டில் யாருக்காவது முடியவில்லையா.

இல்லை சார்.

படிக்கவில்லையா பரீட்சையில் மார்க்குகள் குறைவாக இருக்கு. வீட்டில் புகழ்ந்தார்கள். நாங்கள் புகழ்ந்தோம். என்ன இப்படி எடுத்திருக்கிறீங்க? என்ன மனசில? மேல இருந்து கீழ இறங்கக் கூடாதுமேலதான் போவாங்க

என்ன இனிமே நல்ல படிக்க வேண்டும். பாடங்களில் கூட குறைவாக எடுக்கிறதிற்கு உன் மன ஆழத்தில் கவலையோ குழப்பமோ உண்டு. அதை இன்று சொல்லு.

இன்றே சொல்லுகிறேன் வெந்த புண்ணுக்கு மேல் வேல் பாய்ச்சுவது போல் என்ன சொல்ல?

அதுதாண்டி ஒரு ஆளுக்கு மேல மரம் விழுந்து இருக்கும் போது அதற்கு மேல மாடு மிதித்து நசுக்குவது போல்தான் செய்கிறான்க.

இவள் புரியாத புதிர் சொல்கிறாள். விபரமாகச் சொல்லச் சொன்னா அழுகிறா.

ஏன் அழுகிற?

என்னப்போல் எந்த பெண்களுக்கும் நடக்கக் கூடாது.

என்னடி எங்களக் குழப்புற?

உங்களை குழப்பவில்லை உண்மைதான் சொல்கிறேன். ஜாலியாக பேசிச் சிரிக்கிற உன்ன மாதிரி ஏன் இருக்கக் கூடாது? உள்ள அழுகிறேன் வெளியில் சந்தோசம்.

அப்படி என்னதாண்டி நடந்தது?

சக்தி என்னை பார்த்து I love you என்று சொன்னார். எனக்குப் பிடிக்கவில்லை கோபம் வந்து பேசி விட்டேன். நான் கோபத்தில பேசின ஒவ்வொரு வார்த்தையும் அவருக்கு நஞ்சு இல்லாமல் அமுதாக மாறிக் காதல் வளர்ந்ததாம்.

நீயும் செய்ய வேண்டியது தானே?

என்னடி சொன்ன?

காதல் பிடிக்காது. அது பழைய புத்தகம் பெற்றோர் பேசிச் செய்கிற திருமணம் தான் புதுப்புத்தகம் என்று எண்ணென்றேன். அவரை வெறுக்கிறதுக்கு நிறைய காரணம் சொல்கிறேன். சின்னத்தை மகன் ஆறு பெண்களுக்கு ஒரு பையன்.

என் மருமகள்.

அவதான் உங்க மருமகளா?

நீங்களும் மருமக்கள் தான். ஆனால் என் பையனுக்கு உரியவள் அவளே. அதனால் அவள் என் மருமகள்.

கனிபா வா விளையாடுவம்.

நான் வரவில்லை

அம்மா பாரம்மா மச்சான் கூப்பிடுகிறான்.

விளையாடப்போ. நீங்க சின்ன பிள்ளைகள் போய் விளையாடுங்க. என் மருமக தானே போய் விளையாடு. உன்னை விரும்பித்தான் கூப்பிடுகிறான்.

எனக்கு 9 வயது. அவனுக்கு 12 வயது. அவன் இறந்துவிட்டான். அவன் இறந்த பின்னும் மாமா அத்தை மச்சான்மார் எல்லோரும் கிண்டல் செய்வார்கள். அவர்கள் கவலையை மறக்க, எனக்கு வேதனை வேர் ஊன்றியது.

பின் அவற்றையும் மறந்து சந்தோசமாகத் திரிந்து வந்தேன். உதவி செய்து உவத்திரம் தொடங்கியது.

அம்மா பாவம் அந்தக் குடும்பத்திற்கு உதவி செய்வோம். தம்பி பிள்ளையை இங்க விட்டுட்டுப் போங்க ஆஸ்பத்திரிக்கு.

அழாதேங்க அம்மா தம்பியக் கொண்டு வருவா ஏன் அண்ணாஇறந்துட்டுதா?

ஆம் கனிபா.

அக்கா பாவம் கவனமாக பாருங்க. பிள்ளை இறந்த கவலையிலே உடம்புக்குப் பாதிப்பு ஏற்படக்கூடும்.

அவவை ஒரு அம்மா பார்க்கிறா. நீ எங்க மேலே அன்பு காட்டி உருகிற. ஆனா உன்னையும் என்னையும் கொச்சைப்படுத்துகிறா.

ஒருநாள் கனிபா ஏன் நீங்க முடிவு சொல்லவில்லை? என்ன மனதில் நினைக்கிறாய்? வெளிநாடு போகப் போகிறேன் முடிவு நாளை வேண்டும்.

இந்தக் கிழமை சொல்ல மாட்டேன். அடுத்த கிழமை சொல்கிறேன்.

நல்ல முடிவு வேண்டும்.

பாவம் சக்தி என் மனது அறிந்து விரும்புகிறாண்டி.

எல்லாம் சொன்னேன் அதற்கு முதல் அவனுக்கு தெரியுமாம். எல்லாம் தெரிந்துதான் காதலிக்கிறான்.

ஒருசில ஆம்பிளைகளால் எல்லோரையும் வெறுக்கிறேன். நேற்று முதல் என் மனது அவனையே நேசிக்கிறது என் மனது சுத்தம் என்று எனக்கும் அவனுக்கும் தெரிந்தால் போதும். இந்தக் கிழமை பூராவும் சிந்தித்து முடிவு O.K. சொல்லிவிட்டேன். இவ்வளவு நாளும் கோழையாக இருந்துட்டேன் ஐந்து விரலும் ஒரே மாதிரி இல்லை என்று புரிந்த பின் தான் முடிவு சொன்னேன். மொட்டு மலரும் என்று நினைத்தேன். இந்த மொட்டுகளுக்கு நன்னீர் வேண்டும்.

(15ம் பக்கம் பார்க்க)

## உணர்வு

ஈழம் என்னும்
இனிமைமொழி கேட்கும்
போது
உணர்ச்சிக் கொந்தளிப்பில்
உன் உடல்
சிலிர்க்கவில்லை என்றால்
நீ
ஈழத்தமிழனாய்ப் பிறந்ததில்
என்ன பெருமை?

சு சிவா
வாழவந்தான்கோட்டை.

தெ[illegible] ஆப்பிரிக்காவில்

## தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

தென் ஆப்பிரிக்காவில் உள்ள தமிழர்கள் இலங்கை இனப் படுகொலைகளை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தென் ஆப்பிரிக்காவில் உள்ள டர்பன் நகரில் இன வெறிக்கெதிரான உலக மாநாடுநடைபெற்றது தெரிந்ததே. இந்த மாநாடு நடைபெற்ற மண்டபம் அருகே நூற்றுக்கணக்கான தமிழர்கள் திரண்டனர்.

அவர்களில் பெண்கள் அதிகமாக இருந்தனர். பெண்கள் அனைவரும் வெள்ளை நிறச் சேலை அணிந்து காணப்பட்டனர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிரா்க நடைபெறும் இனப் படுகொலையை எதிர்த்து அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

ஆர்ப்பாட்டம் நடத்திய தமிழர்கள் கையில் அட்டைகளை பிடித்து இருந்தனர், இலங்கை அரசுக்கு எதிராக அவர்கள் கோஷமிட்டார்கள்.

## கடவுள் நம்பிக்கை

யோகி அரவிந்தரைப் பார்க்க ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்து ஒரு மனிதர் வந்தார்.

அவர் அரவிந்தரிடம், ''ஐயா! கடவுள் நம்பிக்கை பற்றி ஏதாவது கூறுங்களேன்!'' என்று கேட்டார்.

''எனக்கு கடவுள் நம்பிக்கை கிடையாது'' என்றார் அரவிந்தர்.

அதைக் கேட்டுத் திடுக்கிட்ட அம்மனிதர், ''ஐயா! தாங்கள் என்ன சொல்கிறீர்கள்? தங்களுக்குக் கடவுள் நம்பிக்கை கிடையாதா? இதனை அறியவா நான் இவ்வளவு தூரம் வந்தேன்!'' என்று வருத்தம் தோய்ந்த குரலில் சொன்னார்.

அதற்கு அரவிந்தர், 'நான் கடவுளை நன்கு அறிவேன். அதனால் நம்பிக்கை என்ற சொல்லிற்கு இடமில்லை!'' என்றார்.

அம்மனிதர் மெய்சிலிர்த்துப் போனார்!

கு. பன்னீர்ச்செல்வன்

# கவிதைச் சாரம்

சிவாவின்
சிந்தனைக் கதிர்கள்!

## தன்மானத் தமிழர்கள்

நாங்கள்
ஆதரவில்லா அகதிகள்தான்

தன்மானமுள்ள
தமிழர்களாய் வாழ்ந்ததனால்
அடிமை வாழ்வை
அடியோடு வெறுத்ததனால்
நாங்கள்
ஆதரவில்லா அகதிகள்தான்!

தமிழுக்குத்
தங்கத்தில் வீடு கட்ட
சொந்த வீடுகளை
இழந்து நிற்பதனால்
நாங்கள்
ஆதரவில்லா அகதிகள்தான்

தமிழினத்தின் மானம்காக்க
உயிர்கொடுத்துப் போராடிய
போது
உலகத்தமிழினம்
உதவிக்கு வராததால்
நாங்கள்
ஆதரவில்லா அகதிகள்தான்!

ஆனால்
அடிமைகள் அல்ல
யாரையா சொன்னது
எங்களை
இழிவான ஏதிலி என்று?

ஈழத்தைப்பிரிந்து
ஏதிலியாய் வாழ்ந்தாலும்
தன் உயிரை இழந்தேனும்
தன்மானம் காக்கும்
தமிழ்ப்பரம்பரை நாங்கள்

தமிழை அகதியாக்கித்
தன்வயிற்றை நிரப்பும்
தரங்கெட்ட தமிழர்களைவிட
தமிழுக்காகத்
தன்மான உணர்வுக்காக
அகதியான நாங்கள்
தன்மானத் தமிழர்கள்தான்!

## பெற்றோர் தந்த பெருமை

நான்
பசியில் இருந்து
உழைப்பைக் கற்ற
பாமரர்களின் பிள்ளை

என் தந்தை
கலப்பையால்
கவிதை எழுதும்
உழவன்

அவர்
ஏர்பிடித்துக்
கழனிகளின் வயிற்றில்
கிச்சு கிச்சு மூட்டும்போது
பூமித்தாய் பூரிப்படைந்து
புரண்டு புரண்டு சிரிப்பாள்

அவள் சிரிப்பே
நெல்மணிகளாய்ச்
செழித்து நிற்கும்

என்தாய்
தலையில் கூடைசுமந்து
தன் உழைப்பில் வாழ்ந்த
தன்மானத் தமிழச்சி

பாக்கறி அக்கா என்று
மற்றவர்கள் அழைக்க
உழைப்பே
உயராய் வாழ்ந்த
உத்தமி

அந்தப்
பெருமை மிக்க
பெற்றோரின்
பிள்ளை நான்

என்
தாய் தந்தையர்
எனக்குப்
பொருள் சேர்த்து
வைக்கவில்லை என்று
புறம்பேசும் உறவினரே

நான் என்ன
சொத்தைப் பயலா?
அவர்கள் எனக்குச்
சொத்துச் சேர்த்து
வைப்பதற்கு?

காக்கையின் கூட்டில்
முட்டையிட்டு விட்டு
இனிமையாகப் பாடித்திரியும்
சோம்பேறிக் குயிலல்ல நான்

கல்மலையில்
பாறையின்உறுதியைப்
பரிசோதித்துப் பார்க்கும்
வியர்வைத் தொழிலாளி

உழைப்பே
உயர்வாய் வாழ்ந்த
உத்தமர்களின் பிள்ளை

நான்
பெருமைப்படுகின்றேன்
எனக்குப்
பொருள்சேர்த்து வைக்காமல்
என்
உழைப்பின்மேல்
நம்பிக்கை வைத்து

எனக்குத்
தன்னம்பிக்கை தந்த
தாய் தந்தையை நினைத்து

சு. சிவானந்தன்
வாழவந்தான்கோட்டை.

## சங்கத் தமிழ் அமுதம்

கவிமாமணி டாக்டர்
ச. ஆறுமுகநாதன்

### 5. பொருநராற்றுப்படை

பொருநர் ஆற்றுப்
படையென்று
புகழநின்ற நூல்தன்னில்
இருநூற்று நாற்பத்தெட்டுவரி
இனிதாகவே கொண்டுதான்
பரிசில்பெறக் கருதியுள்ள
பாங்கான பொருநனைத்தான்
பரிசுபெற்ற ஒருபொருநன்
பகர்கரிகால் பெருவளத்தான்
இடங்கொண்டு ஆற்றுப்
படுத்த இனிதாய்
முடத்தாமக் கண்ணியர்தாம்
முத்துமுத்தாய்ப் பாடியுள்ளார்
இனியதிருவிழாக் காலத்தில்
இசைநயம் காட்டிச்செல்லும்
தனித்தன்மைப்
பொருநர்களின்
தனியியல்பு யாழமைப்பு
பாங்காகப் பண்பாடும்
பாடினியின் எழில்விளக்கும்
ஓங்கும் பெருவளத்தான்
உயரியதாம் கைவண்ணம்
அரசனின் பெருமைக்கேற்ப
அன்புடனே உணவூட்டி
திறம்படவே உபசரிக்கும்
திடமான பண்பாடும்
வெண்ணிப் போர்
பெருவெற்றி
வீரத்தின் தனிவிளக்கம்
எண்ணத்தின் உணர்ச்சிகளும்
எழில்பொருநர் விறலியர்க்கும்
பொற்றாமரை தன்னோடு
பொன்னரி மாலைகளை
நற்பரிசாய் நல்குவதும்
நாட்டினிலே நல்வளங்கள்
கொட்டிக் கிடப்பதுவும்
கோலமிகு காவிரியாள்
தட்டின்றி வெள்ளமதாய்த்
தான்பெருகி வருவதையும்
பட்டாடை நெய்தல்
பைந்தமிழர் கைகையென்னும்
கட்டாக அந்நூலில்
கவினுறவே
காண்போம்யாம்...
(தொடரும்)

## விடியலைத் தேடி

காலையில் தோன்றும் கதிரவன்
வெள்ளை மேகத்தைத் தனது
முகத்தில் பூசிக்கொண்டு
இளஞ் சிவப்போடு இருக்கும்
தனது மேனியில் மஞ்சளை அரைத்து தடவிக்கொண்டு...
விடியற்காலையில் பிரகாசமாய் எழுகின்றான்.
நான் வந்து விட்டேன். விடிந்து விட்டது
உறங்கியது போதும் விழித்துக் கொள்ளுங்கள்
என்கின்றான்

பறவைக் கூட்டங்களோ,
இதோ கதிரவன் வந்து விட்டான்
என்ற பரவசத்தில் தமது சிறகுகளை விரித்துக் கொண்டு
வானை நோக்கிப் பறக்கின்றன
சேவல் கூட்டங்களோ கதிரவனைக் கண்டதும்
கூவி ஆர்ப்பரிக்கின்றன!
இரவு முழுவதும் ஆழ்ந்த உறக்கத்தில்
கூம்பிக் கொண்டு இருந்த பூக்களும்
கதிரவனைக் கண்டதும் கண்களை
விரித்துக்கொண்டு புன்னகைக்கின்றன
இவ்வாறு ஒவ்வொரு பறவையும் வண்டினங்களும்,
பூக்களும், புல்களும், விலங்கினங்களும் அதிகாலையில்
கண் விழித்துக், காலைக் கதிரவனை நோக்கித் தமது
கடமைகளை நோக்கிப் போகின்றன...
ஆனால் மனிதா! நீ?

E நிக்சன்
லேணாவிளக்கு, புதுக்கோட்டை.

## விடை காணா வினா!

விடியலைத் தேடி ஏங்கும் விழிகளில்
விடுதலை காணும் நாள் எப்போது?
விடியலின் கீதங்கள் கேட்க மறந்த எம் காதுகள்
விடுதலை ராகங்கள் கேட்பது எப்போது?

விடிந்தும் விடியாத இரவுகளில்
விடிந்ததும் இடியாய் விழும் சோகங்கள்

விடுதலைக்கு நாடுகள் தடை-எம்
விடிவிற்கு விழும் சுமை-எம்
வினாவுக்கு என்று வரும் விடை ?

மகாதேவன் ஷர்மிலி
பவானிசாகர்

## மனச் சுமை குறைப்போம்

துயரை நாடிகள்:

மனத்தில் தாங்கொணா வேதனையே
இறக்கி ஆற்றவும் ஆளில்லையே

மனத்தில் தாங்கொணா வேதனையே பெருஞ்சோதனையே
இறக்கி ஆற்றவும் ஆளில்லையே தீரும் நாளில்லையே
தன் கவலை பெரிது என்பார் என்கவலை
கண்டு கொள்ளார் என்ன செய்வேன்

மனத்தில் தாங்கொணா வேதனையே பெருஞ்சோதனையே
இறக்கி ஆற்றவும் ஆளில்லையே தீரும் நாளில்லையே
தன் கவலை பெரிது என்பார் என்கவலை
கண்டு கொள்ளார் என்ன செய்வேன்
சொன்னாலோ தெரிந்தாலோ கேலி செய்வார் கூடிக்
கூடிப் பேசிடுவார்
மனத்தில் தாங்கொணா வேதனையே பெருஞ்சோதனையே

ஆற்றுநர்கள்:-

ஓ ஆற்றுநர் நாம் உம்கவலை உணர்கிறோம்
எம் கவலை போல அதை எண்ணி
நாம் இரகசியம் காத்திடுவோம் நம்பும்
மா தவறு செய்தோர் செய்யாதோர் யாவரும்
எம் மனதில் சமமாகத் தோன்றும்
ஆளும் அரசனென்ன ஆண்டியென்ன ஒன்றே
கவலை கூடினால் நோய்கள் சேருமே
தலைவலி வயிற்றுவலி வாந்தி வரும்
தொய்வு வரும் நடுக்கத்துடன் சோர்வு
இன்னும் பல வேதனையும் சேரும்
மனச்சுமைகள் பகிர்வதனால் தீரும்
தேவையின்றித் துருவிக் கேட்க மாட்டோம்
எமக்குச் சொன்னாலே சுமைபாதி குறைந்ததுபோல்
உணர்ந்திடுவீர் நீரே

மனத்தில் தாங்கொணா வேதனையோ பெருஞ்
சோதனையோ
இறக்கி ஆற்றிட நாங்களுள்ளோம் வழி தேடிடலாம்

உம் பிரச்சினையை விட நீர்தான் முக்கியம்
பயம் தவிர்த்து மனம் திறந்து கூறும்
உம் நிம்மதி தான் எமக்குச் செல்வம்

நாம் உதவ முடியாத நிலையெனில்
தகுந்தோரை வழிகாட்டி வைப்போம்
புது மனிதராய் நீர் வாழச் செய்வோம்

இறப்பால் அதிர்ச்சியா? இழப்பின் சோகமா?
குடிப்பழக்கத்தால் குடும்பச் சீரழிவா
கல்வி கற்கா மாணவரின் தேக்கம்
காலமற்ற காதலினால் வாட்டம்
சிறுபிள்ளைத் திருமணத்தால் தாக்கம்
வேறும் பல வேதனையின் கூட்டம்
கவலை நாம் கேட்போம் தீர்வு நீர்காணச் செய்வோம்

மனத்தில் தாங்கொணா வேதனையோ பெருஞ்
சோதனையோ
இறக்கி ஆற்றிட நாங்களுள்ளோம் வழி தேடிடலாம்
தாராளமாக உங்கள் வேதனையைக் கூறிடலாம்
தயக்கம் வேண்டாம்
தேவையின்றி யாரிடமும் உம்கதையைக் கூறமாட்டோம்
சத்தியமே
மனத்தில் தாங்கொணா வேதனையோ பெருஞ்
சோதனையோ

("சின்னப்பசங்க நாங்க" திரைப்படத்தின் "கொழந்த பாடுறன் கண்ணுமணி" என்ற பாட்டின் மெட்டுக்கமைய எழுதப்பட்டது)

திரும. ம. தனலெட்சுமி
சென்னை.

## அறிவியல் பகுதி

# திரைப்படத்துறையினர் நாடகத் துறையை பாதுகாக்க வேண்டும்

சிவாஜிகணேசன் பாராட்டு விழாவில் அமரர் அண்ணா சொன்னது.

''தம்பி சிவாஜி கணேசன் 125 படங்களில் நடித்து முடித்திருப்பதைப் பாராட்டி இங்கே விழா நடைபெறுகிறது. இந்த விழாவில் இந்தியத் துணைக் கண்டத்தின் உள்துறை அமைச்சர் மாண்புமிகு ஒய்.பி. சவான் அவர்களும், செய்தி ஒலி பரப்புத் துறை அமைச்சர் மாண்புமிகு கே.கே. ஷா அவர்களும் கலந்து கொண்டிருக்கின்றனர். இதைப் பார்க்கும் போது இந்தியத் துணைக்கண்டமே சிவாஜி கணேசனைப் பாராட்டுவதாகவே கருதுகிறேன்.

''திரைப்படங்களில் மின்னும் நட்சத்திரங்களுக்கு இருக்கும் புகழ் நமக்கு இல்லையே'' என்று உயர்திரு கே.கே. ஷா அவர்கள் வருத்தப்பட்டார். அதற்கு அவசியமே இல்லை.

சிவாஜி கணேசன்போன்ற அற்புதமான கலைஞர்கள் நம் காலத்தில் நமது ஆட்சியின் போது இருக்கிறார்கள் என்பதே நமக்குப் பெருமை அல்லவா? நம் நாட்டில் இப்படிப்பட்ட கலைஞர்கள் இருப்பது நமக்குக் கிடைத்த புகழ் அல்லவா? அந்த வகையிலே நாம் பெருமையும் பூரிப்பும் அடைய வேண்டும்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு இன்றுகலைஞர்களுக்கு மதிப்பு உயர்ந்திருக்கிறது. கலைஞர்களை ஒதுக்கப்பட்டவர்களாகக் கருதி, அவர்கள் இழிவு படுத்தப்பட்ட காலம் முதலே கலையுலகில் எனக்கு தொடர்பு உண்டு.

சிவாஜி கணேசன் சாதாரண நடிகராய் இருந்து, இன்று தலைசிறந்த திரைப்பட நடிகராகத் திகழும் காலம் வரை அவரை எனக்கு நன்கு தெரியும்.

தமிழ்த் திரையுலகம் இதுவரை எத்தனையோ தலைசிறந்த நடிகர்களை அறிந்திருக்கின்றது தமிழகத்தில் என்றுமே கலைஞர்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டதில்லை.

தியாகராச பாகவதர், பி.யூ. சின்னப்பா, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் போன்றவர்கள் நடித்த படங்கள் ஒரு காலத்தில் மக்களின் பாராட்டுதலைப் பெற்றன.

அந்த வரிசையிலே இன்று நம்முடைய சிவாஜி கணேசன் எம்.ஜி.ஆர்., கே.ஆர். இராமசாமி, எஸ்.எஸ். இராஜேந்திரன் போன்றவர்கள் வளர்ந்து வருகிறார்கள்.

நாடக நடிகராக சிவாஜி கணேசன் இருந்தபோது, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் மனமாரப் பாராட்டி ஊக்குவித்தார். அவரது நடிப்புத் திறனைப் பற்றி எடுத்துக் கூறினார்.



சிவாஜி கணேசன் அவ்வளவு சிறப்பாக நடிப்பார். உங்களில் பலர் நூர்ஜகானாக சிவாஜிகணேசன் நடித்ததைப் பார்த்திருக்க மாட்டீர்கள். ஆனால் அவர் வீர கர்ஜனைபுரியும் கட்டபொம்மனாக நடித்ததைக் கண்டிருக்கிறீர்கள். இன்று கட்டபொம்மனாகத் திகழும் இவர் ஒரு காலத்தில் நூர்ஜகானாக நடித்தவர்.

எந்தப் பாத்திரத்தை ஏற்று நடித்தாலும் சிறந்து விளங்கக்கூடிய கலைஞர்களைத் தமிழகம் பெற்றதாலே பெருமையடைகிறது.

எனது நாடகத்தில் நடித்தபோது அவர் எனக்குப் பொன்னாடை போர்த்தினார் இன்று இங்கே நான் அவருக்குப் பொன்னாடை போர்த்துகிறேன். இதை எண்ணி எண்ணிப் பூரிக்கிறேன்.

சிவாஜி கணேசன் நல்ல நடிப்புமட்டுமல்ல; துடிப்பும் கொண்டவர்.

மலர் ஒரே தோட்டத்தில் மட்டுமே மலர்ந்தால் போதாது. தோட்டத்துக்குத் தோட்டம் மலர்கள் பூக்க வேண்டும், நறுமணத்தைப் பரப்ப வேண்டும்.

அப்படித்தான் ஒருதுறையில் மட்டுமல்லாமல் பல துறைகளிலும் கலைஞர்கள் வல்லுநர்கள் உருவாகி இந்த நாட்டிற்குப் புகழைப் பரப்ப வேண்டும்

நமது திரைப்படத் துறைக்கு ஏராளமான கதாசிரியர்கள், இயக்குநர்கள் மற்றத் தொழில் துறைக் கலைஞர்கள், வல்லுநர்கள் தேவை. இந்தத்தேவையைப் பூர்த்தி செய்ய நாடகத் துறை வளர்ச்சி பெற வேண்டும்.

நாடகம் மூலம்தான் நல்ல கலைஞர்கள் உருவாக முடியும். நாடகத்தில் நடிக்கும் போது மக்களின் உணர்ச்சிகளை நேரடியாக அறிய முடிகிறது. நாடகத்தில் நடிக்காமல் நேரடியாகத் திரையுலகந்திற்கு வந்தால் இரசனையோடு நடித்து நிலைத்திருக்க முடியாது.

சிவாஜிகணேசன் 'இழந்த காதல்' நாடகத்தில் கிழவி வேடத்தில் நடித்தார். பெண் வேடத்தில் நடித்ததால் வெட்கமும், வயதானவர் என்பதால் பணிவும் காட்டி மிகச் சிறப்பாக நடித்தார். அப்படிப்பட்ட பாத்திரத்தில் நடித்ததால்தான் இன்று பல வேடங்களில் நடித்துப் பாராட்டப்படுகின்றார்;

நடிகர்களுக்கு எதைக் கண்டாலும் அதைப் பார்வையாலேயே படம் எடுத்து மனத்திலே பதிய வைத்துக் கொள்ளும் இரசிப்புத் தன்மையுண்டு. ஒரு சிலரால்தான் இப்படிக் கண்ணால் கண்டதை நடித்துக் காட்டமுடியும். நாம் காண்கிறோம் பின்னால் மறந்து விடுகிறோம்.

உண்மையான நடிகன், தான் கண்ணால் கண்டதைச் சந்தர்ப்பம் வரும் போது நடித்துக் காட்டித் திறமையினை வெளிப்படுத்த வேண்டும். அந்த வகையிலே சிவாஜி கணேசன் சிறந்து விளங்குகிறார்.

நாதசுரச் சக்கரவர்த்தி நாதசுரம் வாசிக்கும் அழகை 'தில்லானா மோகனாம்பாள்' படத்தில் சிவாஜி கணேசன் நடித்துக் காட்டினார். நாயனத்தைப் பிடித்த அழகு விரல்கள் அசைந்த அழகு, பார்வையில் இருந்த இனிமை எல்லாவற்றையும் நாதசுர வித்துவான் செய்வதைப் போலவே செய்து காட்டினார் அது தனித்திறமை அல்லவா?

நடிப்பவர்கள் பாத்திரங்களை ஏற்று நடிக்க வேண்டும். பாத்திரங்கள் ஆகிவிடக்கூடாது. சிவாஜி கணேசன் தமது வாழ்க்கையில் சந்தித்த பாத்திரங்களைத் தமது திறமையான நடிப்பால் திரையில் திருப்பித் தருகிறார். இது தான் அவருடைய தனித்திறமை.

வங்காளத்தில் ஒரு நாடகம் நடைபெற்றது. அதில் ஒரு நடிகர் பொல்லாதவராக நடித்தார் அவரது நடிப்பை கண்டு உணர்ச்சி வயப்பட்ட ஒருவர் தமது காலில் இருந்த செருப்பைக் கழற்றி அவர் மீது வீசினார். இதைக் கண்ட நடிகர் வருத்தப்படவில்லை. பெருமையும் பூரிப்பும் அடைந்தார். ஏற்று நடித்த பாத்திரத்தை இயற்கையாக நடித்து உணர்ச்சியூட்டிய மகிழ்ச்சி அவருக்கு ஏற்பட்டது.

தம் வாழ்நாளில் கிடைத்த பரிசுகளையெல்லாம் விட, அந்த செருப்பை மிகச் சிறந்த பரிசு என்கிறார், அந்த வங்காளக் கலைஞர்.

(8-ம்பக்கம் பார்க்க)

# புகை நமக்குப் பகை

டாக்டர் அ. இரபியுதின்

பொது இடங்களில் புகை பிடிக்கக் கூடாது என்று தமிழ்நாடு அரசு தடை விதிக்க இருக்கிறது. இது எல்லோரும் வரவேற்க வேண்டிய ஒன்று ஆகும்.

செல்வி ஜெயலலிதா அவர்களும், கலைஞர் கருணாநிதி அவர்களும் இரு துருவங்கள் என்பது ஊரறிந்த இரகசியம்! அப்படிப்பட்ட நிலையில் கலைஞர் அவர்களே இந்தத் திட்டத்தை வாழ்த்தி வரவேற்கிறார் என்றால், இது எவ்வளவு அவசியமான-அவசரமான திட்டம் என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

**ஒன்றரைக் கோடிப் பேர் சாவு**

சிகரெட்டுப் பிடிப்பதால், புற்றுநோய் ஏற்படுகிறது. இரத்தக் கொதிப்பு உண்டாகிறது. இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுகிறது. சிறுநீரகம் பாதிக்கப்படுகிறது. உடல் உறவும் தடைப்படுகிறது என்கிறார்கள்.

உலகில் புற்று நோயால் சாகிறவர்களில் பாதிப்பேர் சிகரெட்டுப் பிடிப்பவர்கள். அதைவிடப் பரிதாபம் என்னவென்றால், இவர்கள் சிகரெட்டுப் பிடிப்பதால் சிகரெட்டுப் பிடிக்காத ஒன்றரைக் கோடிச் சிறுவர் சிறுமிகள் மரணம் அடைகிறார்கள். வீட்டுக்குள் பெரியவர்கள் சிகரெட்டுப் பிடிப்பதால், உலகம் முழுவதும், வீட்டிலுள்ள 50 இலட்சம் குழந்தைகள் ஆண்டுதோறும் மரணம் அடைகிறார்கள்.

எப்படி என்கிறீர்களா? ஒருவர் சிகரெட்டுப் பிடித்து உள்ளிழுத்து வெளியே விடும் புகையைப் பக்கத்தில் இருப்பவர்கள் சுவாசிக்கிறார்கள்! காற்றுடன் கலந்து சிகரெட்டுப் புகையும் அவர்களின் ஈரலுக்குள் சென்று, இரத்தத்தின் வழியே உடல் முழுக்கப் பரவுகிறது! சிகரெட்டுப் பிடிப்பதால் என்னென்ன கேடு ஏற்படுகிறதோ, அத்தனை கேடும் அந்தப் புகையைச் சுவாசிப்பவர்களுக்கும் ஏற்படுகிறது.

இன்னும் சொல்லப்போனால், சிகரெட்டுப் புகையை சுவாசிப்பவர்களுக்கு அதிகக் கேடு என்றே கூறவேண்டும். எப்படியென்றால், சிகரெட்டுப் பிடிப்பவர்களுக்கு ஆஸ்துமா, டி.பி. போன்ற நோய்கள் இருக்கக்கூடும். அவர்கள் வெளியே விடும் புகையில் இந்த நோய்க்கிருமிகளும் வெளியேவரும். பக்கத்தில் இருப்பவர்கள் சுவாசிக்கும் போது புகையுடன் இந்த நோய்க் கிருமிகளும் உள்ளே சென்று, நோயைப் பரப்பும்!

இதனால்தான் பொது இடங்களில் புகை பிடிக்கக் கூடாது என்று தடைவிதிக்கப்படுகிறது. புகை பிடிப்பவர்களிடம் இருந்து அப்பாவி மக்களைக் காப்பாற்றவே இந்தத் தடை.

**வெளிநாடுகளில்**

வெளிநாடுகளில் இதுபோன்ற தடை பல நாடுகளில் இருக்கிறது. விமானத்தில் புகை பிடிக்கக்கூடாது; விமான நிலையங்களில், புகை பிடிக்கக்கூடாது; ஓட்டல்களில் புகை பிடிக்கக்கூடாது. பூங்காக்களில், பேருந்துகளில், திரை அரங்குகளில் புகைவண்டிகளில், ஏ/சி அறைகளில் புகை பிடிக்கக்கூடாது,

மேல்நாட்டுமக்கள் கட்டுப்பாட்டுடன் இந்தத்தடையை பின்பற்றுகிறார்கள். நம் மக்கள் பின்பற்றுவார்களா? விமானங்களில் பார்க்கிறேன். எழுந்து, கடைசியில் போய் நின்று கொண்டு புகை பிடிக்கிறார்கள். திரை அரங்குகளில், பேருந்துகளில் தலையைக் குனிந்து கொண்டு பீடி, சிகரெட்டு புகைக்கிறார்கள். ''புகை பிடிக்கக் கூடாது'' என்று நாம் சொன்னால், ''உன் வேலையைப் பார்'' என்பார்கள்! மேலே ஏதாவது பேசினால் சண்டை தான்!

புகை பிடிப்பவர்களால் ஒரு மணி நேரத்துக்கு மேல் சும்மா இருக்க முடிவது இல்லை. இதனால்தான் விமான நிலையங்கள், பெரிய ஓட்டல்களில் ''புகை அறை'' என்று தனியே கட்டி வைத்திருக்கிறார்கள். அங்கே போய்ப் புகை பிடிக்கலாம். இது போன்ற புகை அறைகளை நாமும் கட்ட வேண்டியிருக்கும்.

# சந்தன மரம் வளர்க்கலாம்

செய்தித் தாள்களில் தினமும் சந்தன வீரப்பன் பற்றிய செய்தியை ஆர்வமாகப் படிக்கிறோம், விவாதிக்கிறோம். இருபது ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து வரும் இப்பிரச்சினை இன்றைக்கு நாட்டின் மிகப்பெரிய அரசியல் பிரச்சினையாகவும் வளர்ந்துவிட்டது, மக்களின் வரிப்பணம் கோடி கோடியாய் அதற்காகச் செலவழிக்கப்படுகிறது.

இவ்வளவு முக்கியத்துவம் பெற்றுள்ள சந்தன மரம் எப்படிப்பட்ட இலை அமைப்புடன் இருக்கும்? அழகாக இருக்குமா? வளர்ப்பவர்கள் தண்டிக்கப்படுவார்களா? எங்கு வளர்க்கலாம்? எப்படி வளர்க்கலாம்? என்பது போன்ற விபரங்கள் பலருக்கும் தெரிவதில்லை.

இந்திய வனச்சட்டத்தின் படி இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் சந்தன மரங்களைவளர்க்க சுதந்திரம் உள்ளது. சந்தன மரங்களை வெட்டி விற்பனை செய்ய மட்டும் வனத்துறையிடம் அனுமதி பெற வேண்டும். வெட்டி விற்பனை செய்யப்படும் மரங்களின் வருவாயில் 25சதம் அரசுக்கு வரியாகவும் 75 சதம் வளர்ப்பவர்க்கும் பகிர்ந்து வழங்கப்படுகிறது. எனவே சந்தன மரங்கள் வளர்க்க அச்சப்படவேண்டிய அவசியம் இல்லை. அனைவரும் வளர்க்கலாம்.

சந்தன மரம் ஒரு தென்னிந்திய மரமாகும். கர்நாடகத்தில் மிகவும் அதிகமாக இம்மரம் உள்ளது. தமிழகத்தில் ஜாவடி, ஏல்கிரி, சேர்வராயன்மலை, கோவை, பெரியார் மாவட்டங்களில் அதிகமாகவும், மதுரை மற்றும் சில மாவட்டங்களில் ஓரளவும் வனப்பகுதிகளில் வளர்ந்துள்ளன. சந்தனம் 8 மீட்டர் உயரம் வரை வளரும் அழகிய மரமாகும். ஆண்டு முழுவதும் பூக்களுடன் காட்சி தரும். கனிகள் கறிவேப்பிலை பழம் போன்று இருக்கும். இனிப்புச் சுவையுள்ள இக்கனியை பறவைகள் விரும்பி உண்ணும். இதன் வேரிலிருந்தும், கட்டையில் இருந்தும் சந்தன எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. சந்தன மரம் வறட்சியிலும் வளமாக வளர்ந்து ஆண்டு முழுவதும் பூத்துக் குலுங்கும்.

நறுமணம் தரும்வாசனை தைலம், முகப்பவுடர், வாசனை சோப்புகள், அகர் பத்திகள் என அழகுசாதனத் தயாரிப்புகள் அனைத்திலும் இது பயன்படுத்தப்படுகிறது. இதன் கட்டையை முறையாக பக்குவப்படுத்தி உபயோகிப்பதன் மூலம், அழகும் அறிவும், ஒளியும் மகிழ்ச்சியும் காதல் உணர்வும் சிறப்புடன் பெறலாம் எனச் சித்தர்கள் ஆய்வு கூறுகிறது. இது அழகிய மணம் வீசும் சிற்பங்கள் செய்யவும் பயன்படுகிறது.

அன்னியச் செலவாணியை ஆண்டுக்கு பல கோடியாய் இந்திய நாட்டிற்கு அள்ளித் தருகிறது சந்தன மரம். ஒரு கிலோ சந்தனக்கட்டை 1000 ரூபாயிலிருந்து அதன் தரத்தைப் பொறுத்து 5000 ரூபாய் வரை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. எனவே விவசாயமாக செய்வதன் மூலம் தரிசு நிலங்களை தங்கம் விளையும் பூமி ஆக்கலாம்.

சந்தன மணம் பூச்சிகளை விரட்டும் தன்மை கொண்டது. உடலைத் தேற்றுதல், குளிர்ச்சி உண்டாக்குதல் என பல மருத்துவ குணங்களை உடைய சந்தன மரங்களை வீடுகளிலும், பூங்காக்களிலும், அழகுக்கும், அமைதிக்கும் வளர்க்கலாம். இதன் இலைகளை ஆடு மாடுகள் எதுவும் தின்பதில்லை. சாலையோரமாகவும் வளர்க்கலாம். ஆசனூரிலிருந்து கட்டுசால் வரையிலும் சாலையோர மரமாக வளர்க்கப்படுகிறது.

சந்தன மரம் பல்வேறு சூழ்நிலைகளிலும் வளரக் கூடியது. மற்ற மரங்களின் வேருடன் இணைந்துவளரும் தன்மை கொண்டது. இருபது வயதான சந்தன மரத்தின் விதைகள் மர வளர்ப்புக்கு ஏற்றதாக இருக்கும். விவசாயமாக செய்வதெனில் 3×3 மீட்டர் இடைவெளியில் 50×50×50 செ.மீ. அளவு குழி எடுத்து, அதேமண்ணை நிரப்பி குழிக்கு 5 விதைகளை 3 செ.மீ. ஆழத்தில் நடவேண்டும். நாற்றுகளாகவும் நட்டு வளர்க்கலாம். ஓரளவு ஈரப்பதம் இருக்கும் விதமாக நீர் ஊற்ற வேண்டும். மற்றபடி அதிக நீர்ப்பாசனம் தேவையில்லை. விதைகள் முளைக்க 15 நாட்கள் முதல் 2 மாதங்கள் வரை ஆகும்.

அதே குழியில் துணை மரமாக வேம்பு, சவுக்கு, முருங்கை போன்ற மரத்தின் விதை ஒன்றையும் நட்டு வளர்க்க வேண்டும், ஆறு மாதச்செடியாக வளரும்வரை ஓரளவு ஈரப்பதம் இருக்கும் விதத்தில் நீர் ஊற்ற வேண்டும். வறட்சியைத் தாங்கி வளரும் தன்மை கொண்டது. 10 ஆண்டு வளர்ந்த மரத்தில் வாசனை உருவாகும்.

சந்தன வளர்ச்சி ஆய்வகம் சந்தன வளர்ச்சி குறித்த சட்ட விதிமுறைகளையும் வளர்ப்பு முறைகளையும் பற்றிய விழிப்புணர்வுப் பிரச்சாரங்களைச் செய்து விதைகளையும், சந்தனக் கன்றுகளையும் வழங்கி வருகிறது. ஆய்வக பண்ணையில் நூற்றுக்கும் மேற்பட்ட சந்தன மரங்கள் வளர்க்கப்படுகின்றன.

நன்றி ''புதியகல்வி''

சந்தன மரம் வளர்க்க விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு தபால் மூலம் விதைகளையும் வளர்ப்பு விபரங்களையும் பெறலாம்.

ஏ. சந்தன மோகன்,
சந்தன வளர்ச்சி ஆய்வகம்,
காமநாயக்கன்பாளையம் (அ)
பல்லடம் தாலுகா,
கோவை மாவட்டம்-641658.

★ முகாம்களிலும் சந்தன மரம் வளர்க்க முயன்று பார்க்கலாமே!

## பணமா? குணமா?

ஒரு நீச்சல் குளம். அதில் தவறுதலாக ஒருவர் விழுந்துவிட்டார் அவருக்கு நீச்சல் தெரியாது. தண்ணீரில் தத்தளித்தா). இன்னொருத்தர் குதித்து அவரைக் காப்பாற்றினார்.

''என்னைக் காப்பாற்றும் எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது'' என்று கேட்டார் அவர்.

''அதோ அறிவிப்புப் பலகை இருக்கிறது பாருங்கள். அதைப் பார்த்ததும் தான் வந்தது என்றார்'' உதவியவர்.

''நீச்சல் தெரியாதவர்கள் தத்தளிக்கும்போது காப்பாற்றினால் 1000 உருடா பரிசு தரப்படும் என்று அந்தப் பலகையில் எழுதப்பட்டிருந்தது.

காப்பாற்றப்பட்டவர் சொன்னார், ''நானாக இருந்தால் கரப்பாற்ற இத்தனை அவசரப்பட்டிருக்க மாட்டேன்!'' என்றார்.

''ஏன் அப்படி?'' என்று கேட்டார் மற்றவர்.

''நீங்கள் அந்த அறிவிப்புப் பலகையில் கீழே எழுதி இருப்பதைச் சரியாகப் படிக்கவில்லை. படித்து இருந்தால் என்னைக் காப்பாற்றி இருக்க மாட்டீர்கள்'' என்றார்.

காப்பாற்றியவர் அந்தப் பலகையை நன்றாகப் படித்தார். அதில் கீழே எழுதியிருந்தது இதுதான்;

''இறந்தவரின் பிணத்தைத் தண்ணீரில் இருந்து வெளியே எடுத்துப் போட்டால் 2000 உருபா பரிசு தரப்படும்''.

## திரைப்படத்துறையினர்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவிலேயே இம்மாதிரி மிகச்சிறந்த கலைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களை இணைத்து இந்திய அரசே நல்ல படங்களைத் தயாரித்து அமெரிக்கா போன்ற உலக நாடுகளுக்கு அனுப்ப வேண்டும்.

இப்படி நம்முடைய நடிகர்களின் திறமை வெளிப்படுத்தப்பட்டால், மற்ற நாட்டு நடிகர்களை விட நம் நாட்டு நடிகர்கள் குறைந்தவர்கள் அல்லர் என்பதைக் காட்ட முடியும்.

நம்முடைய நடிகர்கள் எத்தனையோ தொல்லைகளுக்கு நடுவே நடிக்கின்றனர். பலர் தாங்க முடியாத கடன் பட்டிருக்கிறார்கள். இருப்பினும் சிறப்பாகவே நடிக்கிறார்கள்.

நமது திரைப்படக் கூடங்களுக்குத் தேவையான கருவிகளைத் தருவிப்பதற்கு அந்நியச் செலவாணி கிடைப்பதில்லை. மத்திய அமைச்சர்கள் இங்கு இருப்பதால் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், தயவு செய்து திரைப்பட உலகத்திற்குத் தேவையான கருவிகளை இறக்குமதி செய்யுங்கள். விஞ்ஞானம் வளர்ந்திருக்கிற இந்நாளில் போதிய வசதிகள் அளிக்கப்பட்டால் நமது கலைஞர்கள் இன்னும்சிறந்து விளங்குவார்கள்.

வருங்காலக் கலையுலகம் வளர, சிவாஜி கணேசன் போன்றகலைஞர்கள்தேவை. நாடக உலகிலே இருக்கிற கலைஞர்கள் கருகிய மொட்டுகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்ய எல்லோரும் சேர்ந்து திட்டம் வகுக்க வேண்டும். ஆனால், அரசு சொல்லும் திட்டங்களுக்குத் திரையுலகினர் ஆதரவு தருவதில்லை.

ஒரு படத்திற்குப் பத்தாயிரம்ரூபாய் வீதம் நாடகக் கலை வளர்ச்சிக்குத் தயாரிப்பாளர்கள் ஒதுக்க வேண்டும். நான் நீண்ட நாட்களாகக் கேட்டுவருகின்றேன் இந்தத் தொகை ஒரு பெரிய தொகை இல்லை; எத்தனையோ நாட்கள் படப்பிடிப்பு நிகழ்ச்சிநிரல் (கால்ஷீட்) போட்டுப் பணம் வீணாகவில்லையா?

மழைவரும் என்று தெரிந்தும் வெளிப்புறக் காட்சிக்குச் சென்று பணம் பாழாவதில்லையா? அது மாதிரி பணத்தைப் பாழாக்குவதைக் குறைத்துக் கொண்டுதயாரிப்பாளர்கள் நாடகக் கலை வளர்ச்சி நிதிக்கு உதவவேண்டும். தயாரிப்பாளர்கள் உதவ முன்வந்தால் தமிழக அரசும், அதன் பங்கைச் செலுத்தும் என உறுதியளிக்கிறேன். நம்முடைய நடிகர்கள் நலிந்து போகாமல் காப்பாற்றுவதற்கு இத்தகைய நிதிதேவை.

வைரம் கிடைப்பது கடினம். ஆனால் எவ்வளவு நாளானாலும்வைரம் மின்னாமல் இருக்காது.

அமெரிக்காவைக்கொலம்பஸ் கண்டுபிடிக்காமல் இருந்தால் அமெரிக்கா கிடைக்காதா என்ன?

அதே . போலத்தான் சிவாஜிகணேசன்!

அந்தக்காலத்தில் புதிய நடிகர்களை வைத்துப் படம் எடுப்பது கடினம். ஆனால் சிவாஜிகணேசனின் நடிப்பை ஆயிரம் இரண்டாயிரம் அடிகள் படமாக்கிய பின், அவருடைய திறமையறிந்து முதல் படத்தை வேகமாகத் தயாரித்து முடித்தார்கள்.

முப்பதாண்டுகளுக்குமுன்னால் சோகக் காட்சியில் நடிக்க வேண்டுமானால் ஐயோ...ஐயோ.. என்று பல முறை கூவவேண்டும். ஒரு படத்தில் ஒரு நடிகை சோகக் காட்சியில் இம்மாதிரி நீண்ட நேரம் அழுதார். நான் சந்தித்த போது 'இவ்வளவு நேரம் அழுதிருக்கிறீர்களே! என்றேன்.

அதைக்கேட்டு அவர், ''இது மட்டுமல்ல; இன்னும் நான் அழுததில் பாதியை வெட்டி விட்டார்கள்'' என்று கூறினார்.

சிவாஜிகணேசன் ஒரு படத்தில் சாமியாராக வருகிறார். அவர் ஒரு அலுத்துப் போன பக்தர். கையிலே பட்டாணியை வைத்துக் கொண்டிருக்கிறார்.

சாமியார் என்றால் பட்டாணி சாப்பிடக்கூடாதா? முருகனின் ஆறுபடை வீடுகளைச் சுற்றி வரும்போது அலுப்புத் தட்டாமல் இருக்குமா?

இம்மாதிரி நடிப்புக்கு இலக்கணம் வகுக்கும் சிவாஜி கணேசனைப் பாராட்டுகிறேன். இத்தகைய நடிகர்களே இன்று தேவை.

கலைஞர் டி.கே. சண்முகம் ஒளவையாராக நடிக்கும் போது பாராட்டாமல் இருக்கமுடியுமா?

அதேபோல் டி.எஸ். பாலையா, கே. சாரங்கபாணி போன்ற நல்ல கலைஞர்கள் நம்மிடையே இருக்கிறார்கள்

நமது கலையுலகம் ஒரு தலைசிறந்த கலைக்கூடம். இந்தக் குடும்பம் என்றும் சிறப்போடுவிளங்கவேண்டும்.

சிவாஜிகணேசன் ஒரு படத்தில் கர்ணன் வேடம் போட்டார். கர்ணன் பிறந்தது ஓர் இடம் வளர்ந்தது

(12ம் பக்கம் பார்க்க)

PUBLIC LIBRARY JAFFNA

ஈழத் தமிழர் வரலாறு

# யாழ்ப்பாண இராச்சியம்

கலாநிதி சி. க. சிற்றம்பலம்
(வரலாற்றுத்துறை - யாழ். பல்கலைக்கழகம்)

## கந்தரோடையும் - ஆனைக்கோட்டையும்

இச் சந்தர்ப்பத்தில் ஆனைக்கோட்டையில் கிடைத்துள்ள முதலாவது சடலத்திற்கும் (அ) மாந்தையில் 1950களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சடலத்துக்குமிடையே இழை விட்டோடும் ஒற்றுமை அவதானிக்கத்தக்கது.[33] இரண்டும் ஒரே அளவினதாகும். இவை இரண்டும் அரையிற் கையைக் கட்டிய நிலையிற் புதைக்கப்பட்டிருந்தமை இவற்றிடையே காணப்படும் மற்றுமோர் ஒற்றுமையாகும்.

எனினும் இவ்விரு பகுதிகளில் கிடைத்த சடலங்களின் காலத்தினைப் பொறுத்த மட்டில் சில வார்த்தைகள் கூறுவது அவசியமானது. இவை காணப்பட்ட படை அமைப்பு, இச்சடலங்களோடு கண்டெடுக்கப்பட்ட நிவேதனப் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டே இவற்றின் காலத்தினை நிர்ணயிக்க வேண்டியுள்ளது. இப்பொருட்களையோ, இவற்றுடன் காணப்பட்ட எலும்புகளையோ காலக் கணிப்புக்குள்ளாக்கும் வசதிகள் கிடைக்காததாலேயே இவ்வாறு காலத்தினை நிர்ணயிக்க வேண்டியுள்ளது.

மாந்தையிற் கிடைத்த சடலத்தின் காலம் வரலாற்றுக் காலத்தது எனக் கொள்ளப்பட்டாலுங்கூட, இது வரலாற்றுக்காலம் மலருவதற்குரிய காலத்திற்குரியதென்று கருதுவதிலே தவறில்லை என்று இதனை ஆராய்ந்த கென்னடி என்ற ஆய்வாளர் குறிப்பிடுகின்றார். இவ்வாறே தான் ஆனைக் கோட்டையிற் கிடைத்த முதலாவது சடலத்திற் காணப்படும் சிந்துவெளியை ஒத்த சித்திர வரிவடிவமும், பிராமி வரி வடிவமும் கலந்து எழுதப்பட்ட முத்திரையை நோக்கும்போது சித்திர எழுத்திற் பயிற்சி பெற்ற மக்கள் கூட்டம் ஒன்று இங்கு வாழ்ந்ததை எடுத்துக் காட்டியுள்ளது.

இதனால் இத்தகைய வரிவடிவம் இப்பகுதியில் வழக்கிலிருந்திருக்கலாமெனவும் உணர முடிகின்றது. இதனை உறுதிசெய்வதாக மட்பாண்டங்களிற் காணப்படும் சித்திர எழுத்துகள் (கிராபிடி) அமைகின்றன. இதனால் முதலாவது சடலத்தினை வரலாற்றுதய காலமும், வரலாற்றுக்காலமும் சங்கமிக்கும் காலத்துக்குரியதெனக் கொண்டோம்.

இரண்டாவது சடலம் (ஆ) முன்னையதைவிடக்காலத்தாற் பிந்தியது. இதனை இதனுடன் காணப்படும் உரோம ரவுலெற்றெற் மட்பாண்டங்களும், இலட்சுமி நாணயமும் எடுத்துக்காட்டுகின்றன. அண்மைக்கால ஆய்வுகள் ரவுலெற்றெற் மட்பாண்டங்களின் தோற்றத்தினை கி.மு. 200 ஆம் ஆண்டிற்கு எடுத்துச் செல்வதாலும், இலட்சுமி நாணயங்களும் ஏறக்குறைய இக்காலத்திலேயே தோன்றிவிட்டன என அறிஞர்கள் கருதுவதாலும் இச்சடலத்தினையும் இக்காலத்திற்குரியதெனக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும் கந்தரோடை போன்றே ஆனைக்கோட்டையிலும் வாழ்ந்த வரலாற்றுதயகால மக்கள் வரலாற்றுக் காலத்திற்குரிய வரிவடிவத்தினைப் பயன்படுத்தினர் என்பதை இங்கு கிடைத்துள்ள முத்திரையின் இரு வடிவங்களும் எடுத்துக்காட்டுகின்றன. எனினும் கந்தரோடையிற் கிடைத்துள்ள பிராமி வரிவடிவம் 'ததகபத' எனக் குறிப்பிடுவதை நோக்கும் போது அது பௌத்த மதகுருவுக்குரிய பிச்சாபாத்திரத்தினைக் குறித்திருக்கலாமெனக் கொள்ள இடமிருக்கின்றது. ஆனால் ஆனைக்கோட்டையில் கந்தரோடை போன்று பௌத்தம் அக்காலத்திற் செல்வாக்குடன் விளங்கவில்லை எனக் கொள்ளலாம்.

ஆனைக்கோட்டையில் நிலத்திலமைந்த குழிகளில் நீளக் கிடத்தி அடக்கஞ் செய்யும் மரபு காணப்பட்டாலுங்கூட, பிற ஈமச்சின்ன வகைகளும் இங்கே வழக்கிலிருந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இவற்றுள் முக்கியமானது உடைந்த பாகங்களுடன் காணப்பட்ட தாழியாகும்.[34] இதனுட் கறுப்புச் சிவப்பு நிற மட்பாண்ட ஓடுகள், சங்குகள், மிருக எலும்புகள் ஆகியனவும், இதற்கு வெளியே மைக்குச்சியாகப் பயன்படுத்தப்பட்ட வெண்கலத்தினாலான மைக்காம் பொன்றுங் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வீமக் காட்டிலுள்ள மண்மேடு சிதைந்து காணப்படுவதால் இதனை முற்றுமுழுதாக இனங்கண்டு கொள்ள முடியவில்லை.

ஆனைக்கோட்டை போன்றே தமிழகத்தின் தென்கோடியிற் குறிப்பாக, திருநெல்வேலி, இராமநாதபுர மாவட்டங்களில் நீளக்கிடத்தி அடக்கஞ் செய்தல், தாழி அடக்கம் ஆகியன விதந்து காணப்பட்டன. காரணம் இவை மணல் பிரதேசங்களாகக் காணப்பட்டதே. இவ்வாறே யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மணற் பகுதிகளிகளிலும், மன்னார் மாவட்டப் பகுதியிலும் இத்தகைய அடக்க முறை செல்வாக்குப் பெற்றிருந்தது எனக்கொள்ளலாம். ஆனைக்கோட்டை மண்மேட்டில் மண்ணை அகற்றுவோரின் நடவடிக்கை காரணமாக எருதின் எலும்புகளோடு சேர்ந்த கொம்புகளும் அதனைச் சுற்றிக் கறுப்புச் சிவப்பு மட்பாண்டங்களில் அளிக்கப்பட்டிருந்த நிவேதனப் பொருட்களும் இனங் காணப்பட்டுள்ளன.

இவை இப்பகுதியில் வழக்கிலிருந்த மிருகங்கள் இறக்கும்போது அவற்றை அடக்கஞ் செய்து அவற்றுக்கு நிவேதனப் பொருட்களை அளிக்கும் மரபை எடுத்துக் காட்டுகின்றனவா அல்லது இறந்த எசமானுக்கு நிவேதனமாக அளிக்கப்பட்ட மிருகத்தினை எடுத்துக்காட்டுகின்றதா என்று திட்டவட்டமாகக் கூற முடியாதுள்ளது. ஒரு சமயம் எசமானின் சடலத்தை இக்கும்பியை அகற்றியோர் மண்ணுடன் எடுத்துச்செல்ல, இம்மிருகத்தின் சடலம் மாத்திரம் எஞ்சியுமிருக்கலாம்.

### சத்திராந்தை

ஆனைக் கோட்டையைப் போன்று வரலாற்றுதயகாலத்திற்குரிய பெருங்கற்காலக் கலாசாரத் தடயங்கள் காரை நகரிலுள்ள சத்திராந்தையிலும் கிடைத்துள்ளன.[35] இவ்விடத்திலும் இக்கலாசாரத்திற்குரிய தடயங்கள் மண்மேட்டிலேதான் காணப்பட்டதோடு மண்கும்பியிலிருந்து மண்ணை அகற்றும் போது தான் இவை யாவும் வெளிவந்தன. இவ்விடத்தின் பெருங்கற்காலக் கலாச்சாரப் பாரம்பரியத்தினை இந்நூலாசிரியரும், பொ. இரகுபதியும் மேலாய்வின்போது இனங் கண்டனர்.

1981இல் ஜனவரி, அக்டோபர் மாதங்களில் இரு ஆய்வுக் குழிகள் இங்கே அமைக்கப்பட்டன. இவை முறையே அ ஆ குழிகள் எனப் பெயரிடப்பட்டன. இவற்றுள் குழி 'அ'வின் கனம் 5அடியாக இருந்தது. இதில் மூன்று மண்படைகள் காணப்பட்டன. இவற்றுள் இரண்டாவது படையிற்றான் இரு சடலங்கள் இனங்காணப்பட்டன. (படம்-17) இதனால் இங்கே முக்கியம் பெறுவது இச் சடலங்களை உள்ளடக்கிய இரண்டாவது படையாகும். இச் சடலங்கள் சுமார் 5 அடி நீளமுடையன. ஆனைக்கோட்டை, திருக்கேதீஸ்வரம் ஆகிய பகுதிகளிற் கண்டெடுக்கப்பட்ட சடலங்களைப்போல நீளக்கிடத்தியே இவையும் புதைக்கப்பட்டிருந்தன.

இச்சடலங்களைச் சுற்றி மட்பாண்டங்களோடு நிவேதனப் பொருட்களும் காணப்பட்டன. இந்நிவேதனப் பொருட்கள், கிண்ணங்கள், வட்டில்கள், பானைகள் ஆகியனவற்றுள் ஆனைக்கோட்டையிற் காணப்பட்டதைப் போன்று படைக்கப்பட்டிருந்தன.

இத்தகைய நிவேதனப் பொருட்களின் எச்சங்களாக மீன், மிருக எலும்புகள், நண்டின் கோதுகள், மாட்டுப்பல், மணிகள், பூனை போன்ற மிருகங்களின் எலும்புகள் என்பன காணப்பட்டன. பெருங்கற்காலக் கலாசாரத்திற்குரிய வட்டில்களிலும் இவை வைக்கப்பட்டிருந்தன. இந்நிவேதனப் பொருட்களிற் குறுணிக் காலக் கருவிகளை ஆக்குவதற்கு மூலப் பொருளாகப் பயன்படுத்தப்பட்ட 'குவாட்ஸ்' கல்லின வகையும் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

'ஆ' குழியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது இதன் படை அமைப்புப் பிற்காலச் சான்றுகளுடன் கலந்து குழம்பிய நிலையிற் காணப்பட்டதை எடுத்துக் காட்டியுள்ளது. இக்குழியிற் குறைந்தது எட்டுச் சடலங்கள் கிடைத்தாலுங்கூட, அமைப்புக் குழம்பிய நிலையிற் காணப்படுவதால் இவை வரலாற்றுதய காலத்திற்குரியனவா என்று திட்டவட்டமாகக் கூறமுடியாதுள்ளது. எனினும் இக் குழியிற் கறுப்புச் சிவப்புநிற மட்பாண்டங்கள், மணிவகைகள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒட்டுமொத்தமாக நோக்கும் போது சத்திராந்தையிற் கிடைத்துள்ள பெருங்கற்காலச் சின்னங்களைத் திட்டவட்டமாக வரலாற்றுதய காலத்திற்குரியனவாகக் கொள்ளமுடியாவிட்டாலுங்கூட இங்கு கிடைத்த சான்றுகள் வரலாற்றுதய காலத்திலேயே மக்கள் இவ்விடத்திற் குடியேறியிருக்கலாம் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக இங்கு கிடைத்த கறுப்புச்சிவப்பு மட்பாண்டங்களின் மண் சேர்க்கையை ஆராயும்போது கரடுமுரடான மண்ணினால்இவை ஆக்கப்பட்டமை தெரிகின்றது. இது ஒரு சமயம் இப்பகுதியிற் குடியேறியவர் ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்துக் காட்டலாம்.

இவ்வாறே இம்மட்பாண்டங்களிலுள்ள குறியீடுகளும் அமைந்துள்ளன. இவற்றுட் பிராமி வரி வடிவமாகிய 'ம', இரு அடைப்புகளிலுள்ள ஆங்கில 'எக்ஸ்' போன்ற குறியீடு, திரிசூலங்கள் என்பவை குறிப்பிடத்தக்கன. (படம்-19) வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே இத்தகைய குறியீடுகள் வழக்கிலிருந்தன என்பதும் ஈண்டு நினைவு கூரற்பாலது. மேலும் வரலாற்றுக் காலத்தின் முத்திரையாகிய ரவுலெற்றெற் மட்பாண்டங்கள் அகழ்வுக் குழிகளுக்கு வெளியே கண்டெடுக்கப்பட்டமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

## காலங்களின் மாற்றம்

காலங்கள் கட்டிடங்கள்
அல்ல
கலையாமல் இருப்பதற்கு?
காலங்கள் பிரமிடுகள்
அல்ல
சிதையாமல் இருப்பதற்கு?

காலங்கள் காற்றைப்
போன்றது
எவ்வாறு வேண்டுமானாலும்
மாற்றம் அடையலாம்
எப்பொழுது?...

காலம் என்ற
ஈழம் பிறக்கும்
வரையில்!...

K சிவா
எழுமப்பட்டி,
நாமக்கல்.

ஈழசுதந்திரன்

மாத இதழ் சந்தா விபரம்

இந்தியாவில் ஓராண்டுசந்தா ரூ. 30-00

வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10

அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6

ஈழசுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தா சேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளவும்.

ஈழசுதந்திரன்
4, சேக்காலனி முதல் தெரு.
மூன்றாம் மாடி,
எழும்பூர், சென்னை-600008.

## செய்திச் சரம்

**21-8-2001**

கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தப்படும் கப்பல்களுக்கு விதிக்கப்பட்டுள்ள போர் அபாய இன்சூரன்ஸ் பிரிமியத்துக்கு விதிக்கப்பட்டுள்ள கூடுதல் வரியைக் குறைத்துக் கொள்ள வெளிநாட்டைச் சேர்ந்த முன்னணி இன்சூரன்ஸ் கம்பெனிமுடிவு செய்துள்ளது.

(தினமலர்)

**22-8-2001**

இலங்கை கிழக்குப் பகுதியில் அம்பாறை என்ற இடத்திலுள்ள போலீஸ் நிலையம் மீது புலிகள் நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தினர். இதில் 15 போலீசார் உள்பட 17 பேர் கொல்லப்பட்டனர். 30 பேர் காயமடைந்தனர்.

(தினமணி, தினமலர், கதிரவன், தினகரன்)

இலங்கையில் காபினெட் அமைச்சர்கள் மூவர் தேதியிடப்படாத தங்களது பதவி விலகல் கடிதங்களை அதிபர் சந்திரிகாவிடம் அளித்துள்ளனர்.

(தினமணி)

அரசியல் சாசனத்தை மீறியதாகக் குற்றம் சாட்டி இலங்கை அதிபர் சந்திரிகா குமாரதுங்கா மீது எதிர்க் கட்சிகள் நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்துள்ளன.

(கதிரவன்)

**23-8-2001**

இலங்கையில் திருகோணமலை அருகே ஒரு தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று நேற்று கண்ணி வெடியில் சிக்கியதில் 8 பேர் காயமடைந்தனர் என்று இராணுவ அதிகாரி சனத் கருணாரத்னே தெரிவித்துள்ளார்.

(தினகரன், கதிரவன்)

சென்னை வளசரவாக்கத்தில் துப்பாக்கிகளுடன் நடமாடிய இலங்கையைச் சேர்ந்த ராகவன், சிவரூபன் என்ற 2 பேரை போலீசார் கைது செய்தனர்

(தினமலர்)

இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை சரியான தீர்வாகாது என்றும், இதனை பேச்சுவார்த்தை மூலம் தான் தீர்க்க முடியும் என்றும் வாசிங்டனில் அமெரிக்க உளவுத்துறை துணை அமைச்சர் பிலிப்ரீகர் நிருபர்களிடம் கூறியுள்ளார்.

(கதிரவன்)

**24-8-2001**

இலங்கையில் முல்லைத் தீவு அருகே உள்ள கொக்குத் தொடுவாய் ஜனகபுரா போன்ற இராணுவ முகாம் மீது புலிகள் நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தியதில் 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 11 பேர் காயமடைந்தனர்.

(தினமலர், தினகரன், கதிரவன்)

# ஈ.ஏ.ம. கழகத்தின் மாநில அளவிலான செப்டம்பர் மாத கல்விக் குழுக்கூட்டம்

ஈழஏதிலியர் மறுவாழ்வுக் கழகக் கல்விக் குழுவின் செப்டம்பர் மாத மாநில அளவிலான கூட்டம் 3-9-2001 மாலை 3.35 மணியளவில் சென்னைத் தலைமையகத்தில் நடந்தபோது பொருளாளர் சா. செ. சந்திகாசன், வண சாம் கோயில்பிள்ளை, திருமதி பிறிஜெட் றெக்ஸ், சு. நா. சு. முருகேசு மாஸ்டர், ஜே.எம். சாமுவேல், வை. குமாரசாமி, இரா. ஈஸ்வரன், மு. மகேஸ்வரன், எம். சக்காரியஸ், ச. நடேசலிங்கம், அ. நிக்சன் பிரான்சிஸ், எம். அமல்ராஜ், இளமுருகன், ம. இளங்கோவன், இரா. பத்மநாதன், செல்வி கு. சாந்தகுமாரி, செல்வி ஜே. ஜெலிந்திரா, செல்வி கோரா. தமிழரசி ஆகியோர் கலந்து கொண்டனர்.

வண சாம்கோயில்பிள்ளை தலைமை வகித்தார். தலைவர் தமது உரையில் சென்ற மாதக் கூட்டம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. குறிப்பாக அமெரிக்காவிலிருந்து வந்த அகிலன் கதிர்காமர் கூட்டத்தில் கலந்து கொண்டது சிறப்பம்சமாகும். அவர் ஆற்றிய உரை பயனுள்ளதாக இருந்தது அக்கூட்டத்தில் பலரும் கலந்து கொண்டு கருத்துக்களைப் பரிமாறியமை வரவேற்கத்தக்கதாகும் எனக் கூறினார்.

தொடர்ந்து சென்ற மாதக் கூட்ட றிக்கை பத்மநாதனால் வாசிக்கப்பட்டது. அறிக்கை சரியென இரா. ஈஸ்வரன் முன்மொழிய, அமல்ராஜ் வழிமொழிய அறிக்கை சரியென ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### கொட்டகைத் திருத்தம்

முகாம் கொட்டகைகள் திருத்தம் பற்றிப் பேசும்போது முகாம் மக்கள் தங்கள் பங்களிப்போடு நிரந்தரக் கொட்டகைகளாக அமைப்பது நல்லதுஎன்ற அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்கள் என்று கூறப்பட்டது. கொட்டகைகள் திருத்தம் செய்யப் பொறுப்பேற்றுள்ள தொண்டு நிறுவனங்கள் மழைக்காலம் என்பதால் துரிதமாக நிறைவேற்றுவதற்கு மண்டலப் பொறுப்பாளர்கள் திருத்த வேலைகள் தொடர்பான விபரங்களைச் சேகரித்து உரிய தொண்டு நிறுவனங்களிடம் சமர்ப்பித்து விட வேண்டுமென முடிவெடுக்கப்பட்டது.

அதற்கு முகாம்களில் உள்ள கொட்டகைகளின் திருத்த வேலை தொடர்பான விபரங்களை மண்டலங்கள் சேகரித்துள்ளீர்களா? எனப் பொருளாளர் கேட்டதற்கு, மண்டலப் பொறுப்பாளர்கள் முழு விபரங்களும் சேகரித்துள்ளதாக ஒப்புக் கொண்டார்கள். மேலும் பொருளாளர் கூறும்போது அவசர சேவையாக பள்ளிக் கொட்டகைக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் அதற்கு மக்கள் பங்களிப்பும் இருக்க வேண்டுமென்றும் கூறினார்.

கொட்டகைகள் அக்டோபர் மாதத்திலேயே பொருட்கள் வாங்கியதும் திருத்த வேலைகளைச் செய்ய வேண்டும் என ஒப்புக் கொள்ளப்பட்டது. நடேசலிங்கம் கூறும்போது ஆரணி, சின்னப்பள்ளிக்குப்பம் ஆகிய முகாம்களில் உடனடியாகத் திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். கரிதாஸ் நிறுவனத்தில் இருந்து நிதி வந்ததும் திருத்த வேலைகளைச் செய்யலாம் என ஏற்றுக் கொள்ளப்பட்டது. இருந்தும் மிக அவசியமான பள்ளிக் கொட்டகை திருத்த வேலைகளை மழைக்கு முன் கழகம் செய்யலாம் என முடிவானது.

### குறிப்பேடு வழங்கல்

குறிப்பேடுகள் வழங்கல் தொடர்பாக ஆராயப்பட்டபோது ஈரோடு மண்டலத்தைத் தவிர்த்த ஏனைய மண்டலங்களில் குறிப்பேடுகள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளதாகவும், நெல்லை மண்டலம் விபரங்களை முழுமையாகச் சமர்ப்பித்துள்ளதாகவும், சென்னை மற்றும் திருச்சி குறிப்பேடுகள் அறிக்கை விரைவாக அனுப்பி வைப்பதாகவும் கூறப்பட்டது. ஈரோடு மண்டலம் பவானிசாகர் முகாம் மட்டும் தான் வழங்க வேண்டியுள்ளது. வழங்கப்பட்டதும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. மண்டபம் முகாம் குறிப்பேடு வழங்கலுக்கான ஆயத்தங்கள் செய்யப்படுவதாகவும் சென்ற வருடம் போல் இம்முறையும் சென்னை மண்டலத்தில் எஞ்சியுள்ள குறிப்பேடுகள் வழங்கப்படும் எனவும் இதுதொடர்பாக அருட்தந்தை சிங்கராயர் அவர்கட்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் நடேசலிங்கம் கூறினார். மண்டபம் முகாம் குறிப்பேடுகள் வழங்கல் இம்மாதம் 15, 16ம் திகதிகளில் வழங்கலாமா என அருட்தந்தை சிங்கராயர் அவர்கட்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் முருகேசு மாஸ்டர் கூறினார்.

பத்மநாதன் கூறுகையில் திருவண்ணாமலையில் வழங்கப்பட்ட குறிப்பேடுகளிலும் பார்க்க திருச்சியில் வழங்கப்பட்ட குறிப்பேடுகள் தரமானவையும் அவற்றின் அட்டைகளும் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தஞ்சாவூர் அச்சகத்தில் முதல்முறையாக தயாரித்தமையால் அதனைச் சிறப்பாக செய்ய வேண்டும் என்ற விருப்பத்தினால் அச்சக நிர்வாகிகளே குறிப்பேடுகளை சிறப்பாகச் செய்துள்ளார்கள் என பொருளாளர் கூறினார். தொடர்ந்து, ஈரோட்டை தவிர்த்த ஏனைய மண்டலங்கள் குறிப்பேடுகள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளதாகவும், தங்களிடம் இருக்கும் கையிருப்பையும் பட்டியலிட்டுச் சமர்ப்பித்துள்ளதாகக் கூறப்பட்டது. ஈரோடு மண்டலம் பவானிசாகர் முகாமிற்கு குறிப்பேடு வழங்கியதும் முழுமையான பட்டியல் அனுப்பி வைப்பதாக செல்வி கு சாந்தகுமாரி ஏற்றுக் கொண்டார்.

### மாணவர்கள் புள்ளிவிவரம்

இம்முறை காலம் தாழ்த்தியதாலும் மாணவர்களின் புள்ளி விபரம் சரியான முறையில் எடுக்காமையினாலும் மேலதிகமான குறிப்பேடுகள் தயாரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக சக்காரியஸ் கூறினார். சென்ற வருடம் எஞ்சியுள்ள குறிப்பேடுகளைக் கழகத் தொண்டர்களின் பாவனைக்கு உபயோகிக்கலாம் என ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வருடம் மிகுதியாக உள்ள குறிப்பேடுகள் அந்தந்த மண்டலங்களில் சேகரித்துப் பாதுகாப்பில் வைக்க வேண்டும் என்றும் அவற்றின் விபரங்களைத் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம்முறை முழுமையாக வழங்கப்பட்ட குறிப்பேடுகளின் விபரங்களை கணினியில் உள்ளீடு செய்வதால் எதிர்வரும் ஆண்டுகளில் சரியான எண்ணிக்கையில், குறிப்பேடுகளின் தேவைகளை மதிப்பிடுவது இலகுவாக இருக்குமெனப் பொருளாளர் கூறினார். செயலாளர் கூறும்போது 1999-2000, 2000-2001ம் ஆண்டுகளில் எடுத்த குறிப்பேடுகள் ஆதாரவாக உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

கீழ்ப்புதுப்பட்டு முகாமில் போதனா மையத்தில் பயின்று வரும் வெளிமாணவர்கள் 62 மாணவர்களுக்கு குறிப்பேடுகள் வழங்கலாம் என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

### உயர்கல்வி உதவி நிதி

கழகம் உயர்கல்வி உதவிக்கு நிதி திரட்டுவது தொடர்பாக செல்வி கோ. தமிழரசி விளக்கம் கொடுத்து, இதுவரை கிடைத்துள்ள நிதி விபரங்களை விவரித்ததோடு எல்லோரிலும் பார்க்க அதிகளவு நிதிதிரட்டி அனுப்பி வைத்தது அகிலன் கதிர்காமர் தான் எனக் குறிப்பிட்டார். முதியவர்கள் எடுக்கும் முயற்சியிலும் பார்க்க இளைஞர்கள் இளைய சமுதாயத்திற்குச் செய்யும் சேவைகள் பாராட்டுக்குரியது எனப் பொருளாளர் குறிப்பிட்டார்.

நிதி திரட்டுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள படிவத்தினை தமிழாக்கம் செய்வது என ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்திய ரூபாவாக அன்பளிப்புச் செய்ய முன்வருபவர்கள் இவ் அன்பளிப்புச் சேவையில் இணைந்து கொள்வதற்கு வசதியாக மாதா மாதம் ரூபாய் 500,- வீதம் 12 மாதங்களுக்கும் விரும்பினால் ஒரு வருடத்திற்கு ரூபா 6000 - ஒரே வேளையில் செலுத்துவதற்கு வழிசெய்ய வேண்டும் என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கழகத் தலைமை அலுவலகத்தில் கல்வி தொடர்பான சேவைகளை தினக்குறிப்புத் தயாரித்து மண்டலங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டும்என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

96ம் ஆண்டிலிருந்து இற்றுவரை கல்லூரிக் கல்வியை நிறைவு செய்த மாணவர்களின் விபரங்களை திரட்டுவது எனவும், அவர்கள் தற்போது என்ன செய்கின்றார்கள் என்பதையும் அறியவேண்டும் எனவும், இதற்கு மண்டலங்கள் முயற்சி எடுத்து விபரங்களை சமர்பிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

### விபரத் திரட்டு

மாணவர் விபரத்திரட்டல் கல்வியை இடைநிறுத்தம் செய்தவர்கள், கல்லூரிக் கல்வியை நிறைவு செய்தவர்கள் ஆகியோரின் விபரங்களை கணினியில் புகுத்த வேண்டும் என்றும், கல்லூரிக் கல்வியை நிறைவு செய்தவர்கள் இலங்கைக்குத் திரும்பி வேலை தேடும் பட்சத்தில் பல்கலைக்கழகங்களில் வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கான சான்றிதழ் பத்திரங்கள் முழுமையாக உறுதி செய்வதற்கு கணினியில் புகுத்தப்பட்ட, மாணவர் விபரத்திரட்டில் அவர்களின் குறிப்பு உறுதுணையாக

(11 ம் பக்கம் பார்க்க)

PUBLIC LIBRARY JAFFNA

## ஈ.ஏ.ம.க. கல்விக்...

(10 ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும் எனப் பொருளாளர் கூறினார். மாணவர்களுக்கான விபரத்திரட்டினை தலைமையகத்தில் வைத்துப் பேணுவதென ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆசிரியர் நியமனம் பெறுபவர்கள் 10ம் வகுப்பிற்குக் குறையாமல் தகுதி இருக்க வேண்டும் என நாம் தீர்மானித்துள்ளோம். ஆனால் சில முகாம்களில் 10ம் வகுப்புப் படித்தவர்கள் இல்லாத முகாம்களில் என்ன செய்யலாம் என ஈஸ்வரன் கேட்டதிற்கு, முகாம் மக்களோடு கலந்தாலோசித்து ஆசிரியர் நியமனம் செய்யலாம் என ஏற்றுக்கொள்ளப்பட்டது. தகுதி வாய்ந்தவர்கள் இருக்க, தாரதரம் குறைந்தவர்களை நியமிப்பதைத் தவிர்க்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது.

10ம், 12ம் வகுப்புப் பரீட்சைகளில் சித்தியடையத் தவறியவர்கள் மீள் பரீட்சை எடுப்பதற்கு உதவிட வேண்டும் என்றும், அவர்கள் பரீட்சையில் சித்தியடையாத காரணங்களை அறிந்து அக்கருத்துக்களை முன்வைத்து JRS நிறுவனத்தோடு பேசவேண்டுமென ஏற்றுக்கொள்ளப் பட்டது. எதிர் காலங்களில் 10ம், 12ம் வகுப்பு மாணவர்களுக்கு அரசுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விசேடப் பயிற்சிக் கட்டணம் வழங்குவதறகு காலாண்டுப் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் 4 % மதிப்பெண்களுக்குக் குறையாமலும், அரையாண்டுப் பரீட்சையில் 55% மதிப்பெண்களுக்குக் குறையாமலும் பெற்றவர்களுக்கு மட்டுமே உதவிட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### கணினிப் பயிற்சி

கணினிப்பயிற்சி பற்றிப் பேசப்பட்டபோது ஆனையூரில் நடாத்தப்பட்டு வரும் கணினிப் பயிற்சியினை முகாமில் நடத்தாது, வெளியில் வீடு ஒன்றை ரூ. 250/-க்கு மேற்படாத வாடகையில் அமர்த்த வேண்டும் என்றும், தற்போது வழங்கிவரும் பயிற்சி போதாது எனவே தமிழ்நாடு அறக்கட்டளை நிறுவனம் வழங்கிவரும் பயிற்சியின் அடிப்படையில் பயிற்சிகள் வழங்குவது நன்று எனவும், அதற்கான சான்றிதழ்களை தமிழ்நாடு அறக்கட்டளை நிறுவனம் வழங்கச் சம்மதித்துள்ளது எனவும் பொருளாளர் கூறினார். இக்கணினிப் பயிற்சியை மண்டல வாரியாக விஸ்தரிக்கலாமா என ஆலோசிக்கப்பட்டபின் அதற்கான முடிவினை அறிவிக்கும்படி மண்டலப் பொறுப்பாளர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது. சென்னை மண்டலத்தைப் பொறுத்தமட்டில் இப்பயிற்சியினை தமிழ்நாடு அறக்கட்டளை மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தோடு டிசம்பர் மாதத்திற்கான பயிற்சிக்கு 20 மாணவர்களைத் தெரிவு செய்யுமாறு சென்னை மண்டலத்தைக் கேட்டுக்கொள்ளப் பட்டது.

இவ்வாண்டு தொழில்நுட்பக் கல்விக்கு 18 பேரும், வேளாண்துறைக்கு 4 பேரும் அரசு ஒதுக்கீடு இடங்களிலும் பார்க்க மிகக்குறைவாக அனுமதி பெற்றுள்ளனர். இதற்கு முக்கிய காரணம் அவர்களுக்குப் போதிய அறிவுரைகளும், வழிகாட்டலும் வழங்கப்படாமையே எனவும், இனிவரும் காலங்களில் முன்பு நடாத்தியதுபோல் மண்டலங்களில் மண்டலத் தொண்டர்கள், கல்லூரி மாணவர் பேரவை உறுப்பினர்கள் மற்றும் தலைமை அலுவலகக் கல்விப் பகுதியினர் இணைந்து ஆற்றுப்படுத்தல் மற்றும் அறிவுரை வழங்கல் சேவையினைச் செய்திட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

பொறியியல் கல்விக்கு இம்முறை அரசு ஒதுக்கீட்டில் 4 பேர் மட்டும்தான் முகாம்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டார்கள். அவர்களில் இருவர் மட்டும்தான் கல்லூரிகளில் சேர்ந்துள்ளார்கள் என்றும், மிகுதி இருவர் கல்லூரிக்கட்டணம் அதிகமாக உள்ளதெனக் கல்லூரியில் சேர முயற்சிஎடுக்காமல் உள்ளனர் என அறிவிக்கப்பட்டது. இம்மாணவர்களுக்குப்போதிய அறிவுரையும்வழிகாட்டலும் வழங்கப்படவில்லையென்றும், அவர்களைநேரில் சந்தித்து போதிய அறிவுரை வழங்கி, கல்லூரியில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பது விரும்பத்தக்கது என ஏற்றுக் கொள்ளப்பட்டது.

### ஆசிரியர் படியுயர்வு

ஆசிரியர்களின் வருடாந்த படியுயர்வு பற்றிப் பேசப்பட்டபோது சென்னை மண்டலத்தைத் தவிர்த்த ஏனைய மண்டலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று நடேசலிங்கம் கூறினார். அவர்களின் கோப்புகளை மண்டலங்களில் வைத்துப் பேணப்படவேண்டும் எனவும், படியுயர்வு மற்றும் பணிமுதிர்ச்சி ஆகியவற்றைக் கணிக்கும் பணியை மண்டலங்கள் செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டுமென வை. குமாரசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆசிரியர் நியமனங்களில் முகாம் தலைவர்களின் தலையீடு அதிகமென சக்காரியாஸ் கூறினார். ஆசிரியர்கள் நியமனங்கள் கழக நெறிமுறைகளுக்கு அமைவாகச் செய்யவேண்டும் எனவும், அவற்றை தலைமை அலுவலகத்திற்கு உடன் தெரியப்படுத்த வேண்டும் எனவும் செயலாளர் கூறினார். ஆசிரியர்களை நியமித்தபின் நெறிப்படுத்தல், கண்காணித்தல் ஆகியவற்றை மண்டலங்கள் செய்வதோடு வருடாந்த படியுயர்வு வழங்கு முன் அதற்கான படிவத்தினைப் பூர்த்தி செய்து அறிக்கையையும் தயாரித்த பின் வழங்கலாம் எனவும் கூறப்பட்டது. படி உயர்வு வழங்கிய பின் தலைமையலுவலகத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

குறிப்பெடுத்தவர்கள்:
திரு. ம. இளங்கோ
செல்வி. ஜெ. ஜெலித்திரா

தொகுப்பு
திரு எஸ்.என்.எஸ். முருகேசு

## ஈ.ஏ.ம.க. நலப்பணியாளர்களுக்கு லண்டன் 'மியோட்' சான்றிதழ்

ஈழ ஏதிலியர் மறுவாழ்வு கழகத்தினர் இடைநிலை நலப்பணியாளர் தேர்வுக்குத் தோற்றிச் சித்தியடைந்த நலப்பணியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா 9-8-2001 அன்று மாலை 4-13 மணியளவில் நல்லாயன் தாங்குநிலை மையத்தில் ஆரம்பமாகியது.

இவ்விழாவிற்கு, கழகத் தலைவர் முனைவர் அரு. கோபாலன், பொருளாளர் சா.செ. சந்திரகாசன், மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் டாக்டர் வி. சண்முகநாதன், டாக்டர் திருமதி இரா. சாந்தி, மனிதவள மேம்பாட்டு இயக்குநர் இரா. மாணிக்கவாசகர், திரு. சக்காரியாஸ் ஆகியோருடன் இங்கிலாந்திலிருந்து' MIOT நிறுவனத் தலைவர் டாக்டர் சந்திரகுமார் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மனிதவள மேம்பாட்டுத் துறை இயக்குநர் இரா. மாணிக்கவாசகர் வரவேற்புரை நிகழ்த்தினார். பின்னர் ஈ,ஏ ம. கழகத் தலைவர், முனைவர் அரு. கோபாலன் உரையாற்றும் போது தேவலோகத்தில் தேவர்கள் அமிழ்தம் உண்டதால், இளமையாக இருப்பது வியப்புக்குரியதல்ல, பூவுலகில் வாழும் தன்வந்திரி முனிவர், அமுதமில்லாத நிலையிலும் மக்களை ஆயுர்வேத வைத்தியத்தின் மூலம் இளமையாக இருந்திட வைப்பதே வியப்புக்குரியது எனப் புராணத்தில் கூறப்பட்ட செய்தியைக் குறிப்பிட்டு, அதேபோல், பல்வேறு பற்றாக்குறைகள் சிரமங்களுக்கு மத்தியிலும் முகாம்களில் நலச்சேவையை உயர்த்த நலப்பணியாளர் ஆற்றி வரும் சேவை பாராட்டுக்குரியது. அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிட லண்டனிலிருந்து டாக்டர் சந்திரகுமார் வந்திருப்பதும், கழக நிறுவனர் அவ்வாய்ப்பைத் தந்திருப்பதும் சிறப்புக்குரியதாகும் என்றார்.

தமிழர் மருத்துவ மையம் (இங்கிலாந்து) தலைவர் டாக்டர் சந்திரகுமார் பேசுகையில் தமது நிறுவனம் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகத்துடன் இணைந்து நடாத்தி வரும் நலப்பணிப்பயிற்சியில் 1999-ம் ஆண்டில் நலப்பணி நேர்காணல் தேர்வில் பங்கு பற்றியதை நினைவு கூர்ந்தார். இந்தத் தொடர்பு தொடர்ந்து நீடிக்கத் தன்னால் இயன்றதைச் செய்வதாயும், இங்கு மின்சாரம் நின்றாலும்சூரியசக்தியினால் இவர்களது வளத்தைப் பயன்படுத்தும் தொழில் நுட்பங்களை வளர்த்து வருவது மகிழ்ச்சியான செய்தி எனவும் குறிப்பிட்டார்.

பொருளாளர் சா.செ. சந்திரகாசன் தனதுரையின் போது, கழகத்தால் வழங்கப்படும் பயிற்சிகள் முகாம் நிலைமைகளில் பயன்படுத்துவதற்கு மட்டுமன்றி, நாடு திரும்பி, சிதைந்த நாட்டைக் கட்டி எழுப்பவும் உதவும். இதற்கு ஓர் உதாரணமாக, நல்லாயன் தாங்குநிலை மையத்தில் செயற்படுத்தப்படும் சாண எரிவாயுத்திட்டம் சூரியசக்திப் பயன்பாடு போன்றவற்றைக் குறிப்பிடலாம். இச்சான்றிதழ் பெறும் நலப்பணியாளர்கள் இதனை ஒரு ஊக்கப்படுத்தலாக ஏற்றுத் தமது பணியைத் திறம்படச் செய்யவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் டாக்டர் வி. சண்முகநாதன், மருத்துவக் கல்விப் பொறுப்பாளர் டாக்டர் திருமதி இரா. சாந்தி, கிருபாமூர்த்தி (நோர்வே) ஆகியோர் சான்றிதழ் பெறும் நலப்பணியாளர்களுக்கு வாழ்த்தும், அறிவுரையும் வழங்கினார்கள். பயிற்றுநர்கள் டாக்டர் பூங்குன்றன், டாக்டர் நடராஜா ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்பு சான்றிதழ்களை லண்டன் தமிழர் மருத்துவ மையத்தைச் சேர்ந்த சந்திரகுமார் வழங்கினார்.

இதன் பின்பு, நலப்பணியாளர்கள், சுகாதாரப் பிரச்சினைகளைப் பற்றிக் கலை நிகழ்ச்சிகள்நடாத்தினார்கள். அனைவரும் பங்கு கொண்ட இறுதிக் கலை நிகழ்ச்சியைத் ஜெகன் திறம்படத் தொகுத்தளித்தார்.

டாக்டர் சுபா. பூங்குன்றன் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவெய்தியது.

இவ்விழாவில் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்ற நலப்பணியாளர்கள் விபரம்: செல்வி பெ.சரோஜா குள்ளஞ்சாவடி, திருமதி வி. பாக்கியவதி- காட்டுமன்னார்குடி, செல்வி எஸ். தங்கேஸ்வரி- பாணாவரம், திருமதி எஸ். சந்திரபூரணம்- புளியம்பட்டி, திருமதி ஏ. ரோசரியம்மா- இரும்பூதிப்பட்டி, செல்வி கே. லோகேஸ்வரி- லேனாவிளக்கு, எஸ். ஜேசுதாஸ்- நாகவதிஅணை, வை. சிவசங்கர்- போகநல்லூர், எஸ். தங்கேஸ்வரன்போகநல்லூர், ஆர் இலங்கேஸ்வரன்-செட்டிமேடு, செல்வி ஏ. சாரதாதேவி- மல்லாங்கிணறு, எம். அமல்ராஜ்- களியக்காவிளை.

### ஆகஸ்டு 1999

திருமதி டி.சகாயநிற்றா- பூலுவப்பட்டி, திருமதி எஸ். ராஜி- தும்பளகள்ளி, எஸ் ஜோன்சன் - மூங்கிலூரணி, ஜெ. ஜெகன் - சின்னாறு அணை, திருமதி மெஜிற்றா- தாப்பாத்தி, கே சிவக்குமார்- எருமைப்பட்டி, செல்வி ஜி. ரஜனி-தும்பளகள்ளி, செல்வி குணசீலிவாஸ்-கோபாலசமுத்திரம், செல்வி இ. மல்காந்தி- தும்பளகள்ளி, திருமதி எஸ். மிக்கேலா-அரச்சலூர், செல்வி ஏ. சிவகௌரி-சிவகிரிப்பட்டி, செல்வி கே. ருக்மணிதேவி- தும்பளகள்ளி.

## யேமன் நாட்டுத் துறைமுகத்தில் 116 இலங்கையர் தடுத்துவைப்பு

116 இலங்கையர்களுடன் யெமன் நாட்டுக்கு பயணமான இரண்டு கப்பல்களை அதிகாரிகள் தடுத்து வைத்திருக்கின்றனர்.

உக்கிரேயின் நாட்டிலும் இலங்கையிலும் பதிவு செய்யப்பட்ட இந்த இரு கப்பல்களிலும் பயணம் செய்த 116 பேரில் 20 பேரிடம் கடவுச்சீட்டுக்கள் இருக்கவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். யேமன் நாட்டின் ஏடன் துறைமுகத்திற்குள் சட்ட விரோதமாக நுழைய முற்பட்டபோதே இரு கப்பல்களும் தடுத்து வைக்கப்பட்டன.

கப்பல்களில் இருக்கும் இலங்கையர்கள் கப்பலை விட்டு இறங்குவதற்கும் அதிகாரிகள் அனுமதி வழங்க மறுத்து விட்டனர். இரண்டு கப்பல்களின் காப்டென்களும் தாங்கள் எங்கு செல்கின்றோம் என்பதைத் தெரிவிக்க மறுத்து வருகின்றனர்.

இலங்கைத் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட இந்த இரு கப்பல்களும் இலங்கையரை யேமெனுக்குள் சட்ட

(12ம் பக்கம் பார்க்க)

## திரைப்படத்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

வேறு இடம். கர்ணனைப் பெற்ற குந்தி தொலைவில் இருந்து வாழ்த்தியனுப்புவதைப் போல ''வாழ்க! வளர்க!'' என்று கூறுகிறேன். குந்திபோலத் தூரத்தில் இருப்பவன் இல்லை நான். சிவாஜி கணேசன் என்றும் எனது உள்ளத்தில் இருக்கிறார். அவரை என்றும் நான் வாழ்த்திக் கொண்டிருக்கிறேன்.

அவர் இன்னும் இருநூறு முந்நூறு படங்களில் நடிக்க வேண்டும் என்று கூறினார்கள். அதுமட்டுமல்ல அறுபது எழுபது வயதுவரை நடிக்க வேண்டும்.

ஓடிப்பிடித்து 'டூயட்' பாடக்கூடாது. வயதுக்கேற்ற குணச்சித்திர வேடங்களில் நடிக்க வேண்டும். நல்ல குடும்பத் தலைவராக நடிக்கலாம். இந்தி நடிகர் அசோக் குமார் போல வயதுக்கு ஏற்ற பாத்திரங்களில் ஏற்று நடிக்கலாம்.

(அண்ணா சொன்னதைப் போலவே சிவாஜியும் வயதுக்கு ஏற்ற பாத்திரங்களை ஏற்றே நடித்திருக்கிறார் என்பதும் எழுபத்து மூன்று வயதுவரை நடித்தார் என்பதும் எண்ணி மகிழத்தக்கது)

சிவாஜி கணேசன் நடிப்பைப் பாராட்டிய நண்பர்கள் இங்கே கூடி மகிழ்கிறார்கள். அந்த மகிழ்ச்சியில் நானும் பங்கு கொள்கிறேன்.

அவர் அரும்பாக இருந்த போதே மலர் ஆவார் என்பதை அறிந்தவன் நான். ஆகவே எல்லோரையும் விட நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். சிவாஜிகணேசனுக்கு என் மனப்பூர்வமான வாழ்த்துக்களைக் கூறி முடிக்கிறேன்.

(சிவாஜி கணேசன் 125 ஆவது திரைப்படம் வெளிவந்தபோது 15-12-1968 அன்று சென்னையில் நடந்த பாராட்டு விழாவில் அன்றைய முதலமைச்சரான பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரை)

('நாடக உலகில் அண்ணா' என்னும் நூலிலிருந்து)

---

(11ம் பக்கத் தொடர்ச்சி)

விரோதமாக கடத்த முற்பட்டனவா? என்பது தெளிவாகவில்லை.

பயணிகளை வேறு வழியில் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகள் கப்பல் காப்டென்களை கேட்டிருக்கின்றனர். கப்பல் உரிமையாளர்களுடன் இவர்கள் தொடர்பு கொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

பயணிகளை பாதுகாப்பாக கொண்டு செல்வதற்கு இந்த இரு கப்பல்களும் தகுதியற்றவை என்று யெமன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சமூக மேம்பாடு ஒரு கண்ணோட்டம்

**சுபா. பூங்குன்றன்**
திட்டமிடல் பகுதி, ஈ.ஏ.ம.க.

ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகச் சேவை ஆரம்பித்த வேளைகளில் மக்கள் அகதிகளாக நாட்டை விட்டு வந்து கொண்டிருந்தனர். அப்பொழுது அவர்களிடம் கடமைகள் ஏதும் இருக்கவில்லை. அடிப்படை வசதிகளை நிறைவு செய்து கொள்ளும் அளவிற்கு வாய்ப்புகள் காணப்படவில்லை. இந்நிலையில் நிவாரணங்கள் (Relief) மூலம் தேவைகள் கிடைக்கக் கூடியதாக இருந்தது

காலப்போக்கில்ஓரளவுஅடிப்படைத்தேவைகள் கிட்டிய நிலையில் பல்வேறு அகதி முகாம்களில் இவ்வகதி மக்கள் வசிக்கத் தொடங்கினார்கள். எனினும் இவர்களது அனைத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்திடக் கூடிய அளவிற்கு வருவாய் வளங்கள் அமைந்திடவில்லை. மேலும் மாதர்களும், குழந்தைகளும் முதியோரும் மிகவும் பாதிக்கக்கூடிய பிரிவினராகக் காணப்பட்டனர். இவர்களை நலிவிலிருந்து பாதுகாக்கவும், சமுதாயத்தின் நிலையை மேம்படுத்தவும் மறுவாழ்வு (Rehabilitation) பணிகள் ஏற்படுத்தப்பட்டன.

இவ்வாறான தொடர் நிகழ்வு சமுதாயத்தினை ஒரு மந்த நிலைக்கு தள்ளுவதுடன் எதையும் எதிர்பார்க்கும் அகதிமக்களாக உருமாற வாய்ப்பளிக்கும். மேலும் இம்மக்களும் தமது சமுதாயப் பொறுப்புகளை உணரத் தலைப்பட மாட்டார்கள். ஆதலால் அகதி வாழ்வில் நாம் நிவாரணம், மறுவாழ்வு எனும் இரு படி நிலைகளையும் தாண்டி சமூக மேம்பாடு (அபிவிருத்தி) எனும் நிலைக்குச் செல்ல வேண்டியவர்களாகின்றோம், மேம்பாடு என்பது சமுதாயத்திலுள்ள கட்டமைப்புகளாகி, சுயமாகச் செயற்படுவதன் மூலம் சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக, கல்வி ரீதியாக, அறிவியல் ரீதியாக தமது தேவைகளைத் தாம் பெற வழி வகுத்தலாகும்.

சமூக மேம்பாட்டுப் (அபிவிருத்தி) பணிகளில் தொண்டர்கள் யாவரும் ஊக்குவிப்பாளராகச் செயற்படல் வேண்டும். இந்நிலையில் நாம் வெறும் வழங்குபவர்களாக அல்லது ஏட்டுக்கல்வியை எடுத்துரைப்பவர்களாக இருந்திட முடியாது. நாம் எதனையும் சாதிக்க முடியும் என்ற சாதகமான (Positive) சிந்தனை உடையவர்களாக இருக்க வேண்டும். மக்கள் மத்தியில் நல்லுறவுகளைக் கொண்டிருக்க வேண்டும். அப்பொழுது தான் இவ்வாறான பணிகளில் தன்னம்பிக்கையுடன் செயற்படலாம். தொண்டர்களாகிய நீங்கள் மக்கள் நாம் சொல்வதை ஒரு பொழுதும் கேட்கமாட்டார்கள். ஆதலால் இவ்வாறான காரியங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வது சாத்தியமல்ல என்பது போன்ற எதிர்மறை எண்ணங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

சீன சமூகவியலாளர் ஒய்.சி. ஜேம்ஸ் யென் (Y.C. James Yen) எம் போன்ற சமூகப் பணியாளர்களுக்கு அறைகூவல் ஒன்றை விடுத்தார்.

''மக்களிடம் செல்லுங்கள்
மக்களிடமே கற்றுக்கொள்ளுங்கள்
மக்களுடன் சேர்ந்து வசியுங்கள்
மக்களுடன் திட்டமிடுங்கள்
மக்களுடன் பணி செய்யுங்கள்''

இவ்வாறு எம்மால் செயற்பட முடியுமாயின் சமூக மேம்பாட்டிற்கான மனநிலையையும் (Mentality) வளங்களையும் (Resources) நடைமுறைப்படுத்தவும் (Implementation) முடியும்,

மேம்பாட்டுப் பணிகளில் மக்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்துவதே எமது முக்கிய பங்காகக் கருதலாம். ஆகவே இதனடிப்படையில் எம் சிந்தனைகள் அமைவதே நமது பணிகளுக்கு வழிகளைத் தேடித்தரும். அத்துடன் நாம் சமுதாயத்தின் எல்லாப் பிரிவினருடனும் நல்லுறவைக் கொண்டிருப்பதுடன் அவர்களது பிரச்சினைகளை அவர்களே உணரக்கூடியதாகவும், தம்மைக் கட்டமைக்கும் தகுதியுள்ளவர்களாகவும் எம்மால் மாற்றப்பட வேண்டும். மக்கள் மத்தியில் சமூக மேம்பாட்டிற்கான தாக்கத்தை ஏற்படுத்தத் தூண்டி விடுபவர்கள் (Animators) கீழ்க்காணும் திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

- சமூகத்தினைப் பகுப்பாய்வு செய்தல்
- மக்களின் பிரச்சினைகளைக் கண்டறிதல், அவற்றினை முதன்மைப்படுத்தல்
- பலம், பலவீனம், வளம், தேவைகளை அறிதல்
- மக்கள் கட்டமைப்புகளை உருவாக்கல்
- உறவுகளை வலுப்படுத்தல், தகவல் தொடர்பு, தலைமைப் பண்புகளை உருவாக்கல், மக்கள் பங்களிப்பினை ஏற்படுத்தல்

சமுதாயத்தில் தொண்டர்களுக்கும்மக்களுக்கும் உள்ள உறவு நிலைகள் வலுவடைய வேண்டில் எமது செயற்பாடுகள் வெளிப்படையாக இருப்பதுடன் நாம் மக்களை நம்புவதும் அவசியமானது.

மக்கள் மத்தியில் பல திறமைகள் கொட்டிக்கிடக்கின்றன. அவர்கள் அறிவுள்ளவர்கள் செயற்திறன் மிக்கவர்கள், படைப்பாற்றல் மிக்கவர்கள். ஆனால் அதனை வெளிப்படுத்தும் வாய்ப்புகள் அவர்களுக்கு இதுவரை கிட்டவில்லை. அதற்கான வழி வகைகள் (Facilitate) ஏற்படுத்தப்படுமாயின் அவர்களாலும் சாதிக்க முடியும். இவ்வெண்ணப்போக்கு எம்மிடையே தோன்றுமாயின் எம்மாலும் மக்களைச் சமமாக மதிக்கமுடியும், அவர்களை ஏற்றுக்கொள்ள முடியும், அவர்களுக்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

### சமூக மேம்பாடும் மாதர் தகைமையும்

சமூக மேம்பாட்டிற்கு மிகவும் அத்தியாவசியமானது. சமூகப் பொருளாதாரமாகும். இப்பொருளாதாரம் உயர்வடைய சமூகத்தின் பின்தங்கிய நிலையிலுள்ள குடும்பங்கள் முன்னேற வேண்டும். பொதுவாக குடும்பங்களில் மிகவும் நலிவடைந்த பிரிவினர் மாதர்களும், குழந்தைகளும்தான். ஏனெனில் பொதுவாக இவர்களின் நலன், அடிப்படைத்தேவைகள் சமுதாயத்தால் கண்டுகொள்ளப்படுவதில்லை. ஏனெனில் இவர்கள் சம்பந்தமான சமுதாய விழிப்புணர்வின்மை நிலவுவதும், குடும்ப நிதியாள்கை (Microfinance) சரியாக இல்லாததும் காரணங்களாகும். குடும்பங்களின் முக்கிய நடைமுறைகள் பெண்ணான அக்குடும்பத் தலைவியைச் சுற்றியே இயங்கிக்கொண்டிருக்கும். ஆகவே பெண் தகைமைப்படுத்தப்படுவதுடன், வாய்ப்புக்களைச் சமுதாயம் ஏற்படுத்திக்கொடுக்கும் அளவிலேயே மேற்படி சமூகத்தின் மேம்பாடும் அமைந்திடும்.

| |
|---|
| பெண் |
| குடும்பம் |
| முகாம் |
| அகதிச் சமூகம் |

பெண்கள் தகமைப்படுவது அவர்கள் மத்தியில் தன்னம்பிக்கை ஏற்படுவதிலும், சாராது இருக்கக்கூடிய திறன் ஏற்படுவதிலுமே உள்ளது. இவ்வாறு நடைபெற அவர்கள் குழுவாக்கப்பட்டால் தான் சாத்தியமாகும். ஏனெனில் குழுவாக்கல் பலத்தினையும், புதிய உத்வேகத்தையும், கருத்துப்பரிமாற்றத்தையும் ஏற்படுத்தும். நாம் பெண்களை ஒரு அமைப்பின் கீழ்க் கொண்டு வருவதுடன் அவர்களின் குடும்பப் பொருளாதாரத்தை மேம்படுத்த சேமிக்கும் பழக்கத்தையும் ஏற்படுத்த வேண்டும்.

சிறுசேமிப்பு என்பது எமது (தின, வார, மாத) வருமானத்தில் ஒரு சிறு பகுதியைக் கட்டாயமாக எடுத்துக் கொண்டு, மிகுதியைஎமது தேவைகளுக்காக செலவிடுதலே ஆகும். அவ்வாறில்லாமல் எமது செலவு போக மீதி இருந்தால் அதனைச் சேர்த்து வைப்பது சேமிப்பு என்பது தவறான கருதுகோளாகும். சிறுசேமிப்பு என்பது ஒரு திட்டமிட்ட நடவடிக்கை. என்னிடம் உழைப்பில் மீதி இல்லை எனவே என்னால் சேமிக்க முடியாது என எவரும் கூறமுடியாது.

நாம் செய்யும் எவ்வளவோ வீண் செலவுகளை (மதுபானம், புகைத்தல், கேளிக்கை, துணிமணிகள், திருவிழா) தவிர்த்து அத்தியாவசியத் தேவைகளுக்கான செலவு எவை என அறிந்து வருமானத்தைச் செலவு செய்வதுடன் சேமிக்கவும் பழக வேண்டும், இவ்வாறு நடைமுறைப்படுத்துவதால் அவசரத் தேவைகள் ஏற்படும் பொழுது (நோய், திடீர்ப் பயணம், கல்வித்தேவை) அநியாய வட்டிக்கு வெளியில் வாங்குவது தவிர்க்கப்படுகிறது. நாம் சேமிக்கும் போது குடும்பப் பொருளாதாரம் உயர்வதால் எமக்குச் சமூக அந்தஸ்து மற்றும் சுயகௌரவம் ஏற்படுகிறது. அத்துடன் வேறொரு நபரில் தங்கியிருக்கத் தேவையில்லை என்பதுடன் சமூகத்தில் நிதிப்புழக்கமும் அதிகரிக்கும்.

இவ்வாறாகச் செயற்படும் நோக்கிலேயே அகதி முகாம்களில் இவ்வாறான மாதர் முன்னேற்றச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இச்சங்கங்களில் முகாம்களிலுள்ள ஆர்வமுள்ள பெண்கள் அனைவரையும் உறுப்பினராகக் கொண்ட குழுவாக ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன்

(13ம் பக்கம் பார்க்க)

# சமூக மேம்பாடு ஒரு கண்ணோட்டம்...

(12ம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றில் தலைமைத்துவத் தன்மை உள்ளவர்களிடம் பங்கும் பொறுப்பும் கொடுக்கப்பட்டன, இவர்களே சங்கச் செயற்பாடுகளையும் கூட்டங்களையும் நடாத்தி வந்ததுடன் சங்கங்களையும் தமது ஆதிக்கத்திற்குள் நிலைநிறுத்தினார்கள். இதனால் இச்சங்கங்களில் இருந்த ஏனையப் பெண்கள் தமக்குச் சங்கச் செயற்பாட்டில் எந்தப் பொறுப்புமில்லை என்று எண்ணத்தலைப்பட்டனர். இதனால் பல சங்கங்சளில் நாளடைவில் பலர் பங்கேற்காது விலகியும், சிலர் பெயரளவில் உறுப்பினராகவும் இருக்கும் நிலையும் ஏற்புட்டது. தற்போது பல சங்கங்கள் இயங்காது, பொறுப்பாளர்கள் மாத்திரம் காணப்படும் செயற்றிறன் அற்ற பரிதாபநிலை ஏற்பட்டுள்ளது.

இவற்றை நோக்குமிடத்து பங்கும் பொறுப்பும் இருக்கக்கூடிய அனைவருக்கும் தலைமைப்பண்புகளை வழங்கக் கூடிய (அனைவருக்கும் வாய்ப்பளிக்கும்) முறையில் பெண்கள் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டால் சிறந்த விளைவுகளைத் தந்திடலாம். எனவே ஒத்த கருத்துள்ளவர்களை (Homogenous group) கொண்ட சிறு குழுக்கள் அதிக பயனுள்ளவையாக இருக்கும். இவ்வாறாக ஓர் இடத்தில் வசித்து, தமது தேவைகளைப் பூர்த்தி செய்திடத்தாமே செயற்படும் திறனுள்ள சிறு குழுக்களை, சுய உதவிக்குழுக்கள (Self help groups) என அழைக்கலாம். சுய உதவிக்குழுக்கள் பெண்களை மாத்திரம் கொண்டதாக இருக்க வேண்டியதில்லை. எனினும் மாதர் தகமை எனும் நோக்கில் பெண்களை மாத்திரம் கொண்ட கட்டமைப்புகளையே நாம் கருத்திற் கொள்கிறோம்.

பெண்கள் சுய உதவிக்குழுக்கள் தோன்றுவதால் பங்கேற்கும் அனைவரும் செயற்படும் நிலையும், ஒத்த கருத்துள்ளவர்களாதலால் ஒற்றுமை மேம்பாட்டுக் கட்டமைப்பு பலம் கொண்டதாகவும், திறன்கள் வெளிப்படவும், தலைமைத்துவப் பண்புகள் அதிகரிக்கவும் வழிவகை செய்யப்படுகிறது. இக்குழுக்கள் தம்மிடையே சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதுடன் அதிலிருந்தே தமது தேவை சிலவற்றையும் பூர்த்தி செய்ய முயலுகின்றன.

**சுய உதவிக்குழுக்கள் அமைவதன் அவசியம்**

| | |
|---|---|
| பொருளாதார மேம்பாடு | - தேவைகளை உணர்தல் |
| | - நிதியாள்கை (சேமிப்பு, கடன்) |
| பெண்கள் ஒன்றுடல் | - பலம் பெறல் |
| | - தன்னம்பிக்கை |
| | - உரிமைகளைப் பெற உதவல் |
| சமூகப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தல் அரசுடன் தொடர்பு கொள்ளல் | - திட்டங்கள், வசதிகள் கிடைக்கச் செய்தல். |

**சுய உதவிக்குழுக்களில் யார் உறுப்பினராகலாம்?**

- ஒரே கிராமத்தைச் சேர்ந்த 12-20 பேர்
- 18-60 வயதினர்
- திருமணமானவர்கள்
- கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்டோராயின் முன்னுரிமை
- வறுமைக் கோட்டின் கீழுள்ள குடும்பம்.

**சுய உதவிக்குழுக்களின் பண்பு :**

1. குழுவுக்கு தனித்துவமான பெயர் இருத்தல்
2. குழுப் பொறுப்புகள் வருடத்திற்கு 1 முறை நியமனம் செய்யப்படும்
3. வாரம் ஒரு கலந்துரையாடல் உறுப்பினர் ஒருவர் பங்கேற்று நடத்துதல்.
4. நிதிவளம் ஒழுங்குகளை கையாள்வதற்கு (வங்கியில் பணம் போடுவது, எடுப்பது) மாதம் ஒருவர் பொறுப்பேற்றல்.

**சுய உதவிக்குழுக்களின் செயற்பாடு**

★ வாரா வாரம் சேமிப்பு/கடன்/ பதிவுகள் தொடராகக் கூட்டம் நடாத்தப்படும்.

★ கூட்டத்திற்கு நேரம் தவறி வருபவர்கள், சரியாக மீளச்செலுத்தாதவர்கள் அபராதம் செலுத்தல் வேண்டும்,

★ கூட்டங்களுக்கு 3 தடவைக்கு மேல் வரத்தவறியவர்கள் குழுவிலிருந்து நீக்கப்படுவர்.

★ ஒவ்வொரு கூட்டத்திலும் பின்வருவன நடைமுறைப்படுத்தப்படும்.

★ குழுச்சேமிப்பினை முறையாகச் செயற்படுத்தல் சேமிப்பு, கடன், பராமரிப்புகளை ஏனையோருக்குத் தெரிவித்தல்.

★ வெளியிடங்களில் தாம் பெற்ற பயிற்சிகளைப் பகிர்ந்து கொள்ளல்.

★ கூட்ட நடவடிக்கை, தீர்மானங்கள் குறிப்புகளில் பதிவு செய்தல்.

★ கடன்களைத் தவணை முறையில் மீளச் செலுத்தவும், யாருக்கு எதனைக் கருதிக் கடனை வழங்குவது என முடிவு செய்தல். இம் முடிவுகள் கூட்டாகவே எடுக்கப்படும்.

★ முகாம் முன்னேற்றத்திற்குத் தேவையான திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

★ அனைத்துப் பணிகளுக்கும் தனித்தனிப் பதிவேடுகள் பராமரிப்பதன் மூலமும், ஒவ்வொரு வாரச் செயற்பாடுகளை மீளாய்வு செய்வதன் மூலமும் கண்காணிப்பினை மேற்கொள்ளல்.

மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளால் சுய உதவிக் குழுக்களின் தன்மை:

★ வெளிப்படையானதாகவும் (Transparency)

★ ஜனநாயக மரபுடையதாகவும் (Democracy)

★ உண்மையான பொறுப்பேற்பதாகவும் (Accountability)

★ முடிவு எடுப்பதாகவும் உருவாக்கப்படும் (Decision making)

| | |
|---|---|
| சுய உதவிக் குழுக்கள் (Self helping groups) | ஒரு இடத்தில் உள்ள 12 முதல் 20 உறுப்பினர் |
| வட்டாரக் குழுக்கள் (Clusters Body) | 5 இடத்தில் உள்ள SHG இன் ஒரு உறுப்பினர் |
| கூட்டமைப்பு (Federation) | வட்டாரக் குழுக்களின் 2 உறுப்பினர்கள் + தொண்டு நிறுவன திட்ட ஒருங்கிணைப்பாளர் + தொண்டு நிறுவன நிர்வாக உறுப்பினர் |

**வட்டாரக் குழுக்கள் ஏன்?**

★ சுய உதவிக் குழுக்களைத் தன்னிறைவு அடைய ஊக்குவிக்கும்

★ குழுக்களைத் தக்கவைத்துக் கொள்ளும்

★ குழுக்களைக் கண்காணிக்கவும் / செயற்படவும் வாய்ப்பளிக்கும்

**கூட்டமைப்பு ஏன்?**

மக்களின் பிரதிநிதிகள் இணைந்து தற்சார்பு நிலையில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணிகளைத் தாமே தொடரக்கூடிய அமைப்பினை ஏற்படுத்துகிறது.

**சுய உதவிக் குழுக்களின் செயற்பாட்டால் ஏற்படும் தாக்கம் (Impact)**

குடும்பங்களின் நிதியாள்கை (Micro frame) மேம்படும். மேலும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பப் பொருளாதாரம் இதனால் முன்னேற்றம் அடைகிறது. இவ்வாறு சமூகத்தின் பின்தங்கிய பிரிவினரின் பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கம் (Micro impact) சமூகத்தின் பொருளாதாரத்திலும் மேம்பாடு எனும் தாக்கத்தைத் தருவதால் சமூக மேம்பாடு எனும் இலக்கினை எட்ட உதவும் முக்கிய நோக்கமாக (Objective) உருவாகியுள்ளது.

**சுய உதவிக் குழுக்கள் அமைதலும் தொண்டு நிறுவனங்களின் பங்கும் பணிகளும்**

1வது படிநிலை முன்னெடுத்தல் (Promotion Stage)

இதில் தொண்டு நிறுவனப் பங்கு 50%, மக்கள் பங்கு 50%, நோக்கங்களை வெளிப்படுத்தல், மக்களின் தேவையென உணர்தல், இவற்றிற்கான விழிப்புணர்வை சமுதாயத்தில் உருவாக்கல், மக்கள் பங்களிப்புடன் கட்டமைத்தல், சட்ட திட்டங்களை உருவாக்கிச் செயற்படல்.

2வது படிநிலை பலப்படுத்தல் (Consolidation Stage)

இதில் தொண்டு நிறுவனப் பங்கு 25%, மக்கள் பங்கு 75%, செயற்படத் தேவையான பயிற்சிகள் வழங்கல், நடைமுறைகளைக் கண்காணித்தல், குழுக்களை மதிப்பீடு செய்தல், குழுச் செயற்பாடுகளுக்கு அதிக சுதந்திரம் வழங்கல்.

3வது படிநிலை விலகுதல் (வெளிப்படல்) (Withdrawal Stage)

மக்கள் பங்கு பெரும்பாலும் 100%, இந்நிலையில் தொண்டு நிறுவனங்களின் சில உறுப்பினர்கள் கூட்டமைப்பில் இணைந்து கொள்ள நிறுவனம் தன்னை விடுத்துக் கொள்ளும். இதனால் சமுதாயக் குழுக்கள் குழுச்செயற்பாட்டுடன் கூடிய கட்டமைப்புகளாலும் சுயச்சார்பு நிலையிலும் முழுமையாகத் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும்.

## செய்திச்சரம்

**25-8-2001**

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வரும் பொருட்டு எதிர்க்கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்த 6 அமைச்சர்கள் கொண்ட குழுவை அதிபர் சந்திரிகா குமாரதுங்கா அமைத்துள்ளார்.

(தினமலர்)

**26-8-2001**

தென்னாப்பிரிக்கா டர்பனில் நடைபெறவுள்ள இன வேறுபாடு பற்றிய மாநாட்டில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து விவாதிக்கப்படும் என்று தென்னாப்பிரிக்காவின் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் செய்தித் தொடர்பாளர் எஸ். பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

(தினமணி)

இலங்கையில்தேசியஅரசு அமைப்பது குறித்து ஆளும் கட்சியுடன் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட 5 கட்சிகள் நேற்று பேச்சுவார்த்தை நடத்தின.

(தினமலர், தினகரன், தினமணி)

**27-8-2001**

இலங்கை யாழ்ப்பாணத்தில் முகமலை மற்றும் கிளாலி பகுதியில் நேற்று விமானப் படையின் அதிரடித் தாக்குதலில் 6 புலிகள் கொல்லப்பட்டனர். 9 பேர் காயமடைந்தனர். இராணுவத் தரப்பில் 12 பேர் காயமடைந்தனர்.

(தினமலர்)

இலங்கையில் உள்ள தமிழ எம்.பி.க்கள் அனைவரும் உடனடியாக பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று 'சங்கிலியன்' என்ற இரகசியப் படை மிரட்டல் கடிதம் அனுப்பியுள்ளது.

(தினகரன், தினத்தந்தி)

**28-8-2001**

இந்தோனேசியா கப்பலில் பயணித்த இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் அகதிகளை நார்வே நாட்டு சரக்கு கப்பல் மீட்டு ஆஸ்திரேலியாவுக்கு அழைத்துச் சென்றது.

(தினமலர்)

புலிகள் தலைவர் பிரபாகரனை பஸ் எற்றிக் கொல்ல புறப்பட்ட எல். பியசேனா என்ற சிங்கள இளைஞரை போலீசார் கைது செய்தனர். அவர் மனம் நலம் சரியில்லாதவர் என்றுகூறப்பட்டுள்ளது.

(தினமணி, தினமலர்)

நாட்டின் அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காண எதிர்க்கட்சியுடன் அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளத் தாம் தயார் என்று நேற்று நிருபர்களிடத்தில் இலங்கை அதிபர் சந்திரிகா குமாரதுங்கா கூறியுள்ளார்.

(தினத்தந்தி)

# ஒரு குறளை உணர்வோம்

## பொறாமையும் பொறுமை இடத்து

-''அருகோ''-

''அழுக்கற்று அகன்றாரும் இல்லை அஃதில்லார்
பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்''

திருக்குறள் : 170

பரிமேலழகர் : அழுக்கற்று அகன்றாரும் இல்லை-அழுக்காற்றைச் செய்து பெரியர் ஆயினாரும் இல்லை; அஃது இல்லார் பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்-அச் செயலிலாதார் பெருக்கத்தின் நீங்கினாரும் இல்லை என்றவாறு.

பரிதியார் : மனத்தில் அழுக்குடையார் செல்வம் பெற்றதும் இல்லை. மனத்தில் அழுக்கில்லாதார் செல்வமாகிய இலட்சுமியை நீங்கியதும் இல்லை என்றவாறு.

டாக்டர் மு.வ. : பொறாமைப்பட்டுப் பெருமையுற்றவரும் உலகத்தில் இல்லை; பொறாமை இல்லாதவராய் மேம்பாட்டிலிருந்து நீங்கியவரும் இல்லை.

நாமக்கல் கவிஞர் : (எப்படித்தான் சிந்தித்துப் பார்த்தாலும்) பொறாமையினால் செல்வம் பெருகினவர்களும் இல்லை. பொறாமை இல்லாமல் செல்வப் பெருக்கம் இல்லாது போனவர்களும் இல்லை என்பது மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. அதனால் பொறாமையுள்ளவனிடத்தில் செல்வமிருப்பதற்கும், பொறாமை இல்லாதவனிடத்தில் வறுமை இருப்பதற்கும் வேறு காரணங்கள் இருக்க வேண்டும்.

தேவநேயப்பாவாணர் : பொறாமைப்பட்டுப் பெரியவர் ஆயினாரும் இல்லை; அக்குணம் இல்லாதவர் பேராக்கத்தினின்று நீங்கினாரும் இல்லை.

பேரா.பே.சு. கோவிந்தராசன் : பொறாமை என்னும் தீயபண்பு உடையவர்களாய் இருந்து பெருமைபெற்றவர்களும் இல்லை. பொறாமை என்பதை அறியாத நல்லவர்களாய் இருந்து பெருமை பெற்ற நிலைமாறித் தாழ்ந்தவர்களும் இல்லை.

அருகோ : இக்குறட்பாவின் முதல் சீரில் அழுக்கு, அற்று என இரு சொற்கள் உள்ளன. அழுக்கு என்றாலே பொறாமை என்ற பொருள் வந்து விடுகிறது. அதனால் 'அழுக்கற்று' எனவரும் இம்முதல் சீருக்கு பொறாமை அறவே அற்று-விட்டு என்று பொருள் வருகிறது. ஆனால், 'அற்று' என்பதைச் சாரியையாகக்கொண்டு 'பொறாமைப் பட்டு' என்றே உரையாசிரியர்கள் இதற்கு உரை எழுதியுள்ளனர்.

'அழுக்காறாமை' என்ற அதிகாரத்தின் கீழ் இக் குறட்பா வைக்கப் பட்டுள்ளதால், பிற்கால உரையாசிரியர்களும் அப்படியே உரை கண்டுள்ளனர். நம்மைப் பொறுத்தவரை பால், இயல், அதிகாரம் என்பவை திருக்குறளுக்குப் பின்னால் வகுத்துச் சேர்க்கப் பட்டதென்றே எண்ணுகிறோம். ஏனெனில், ஒவ்வொரு குறட்பாவுமே ஒரு தனி நீதியைக் கூறக் கூடியதாகவே வள்ளுவரால் இயற்றப்பட்டுள்ளது என்பதை நாம் இங்கே பலமுறை சுட்டிக் காட்டியுள்ளோம்.

அம்முறையில் இக்குறட்பாவையும் நோக்கும்பொழுது, அழுக்கு அற்று அகன்றாரும் இல்லை-செல்வம் பெருக்கினவர்கள் எல்லாம் பொறாமையை அறவே விட்டவர்களும் அல்லர். (கல்வி, திறமைகளை வளர்த்தல், கொடையளித்தல், உற்றுழி உதவுதல் போன்றவற்றில் பொறாமையும் வேண்டியதிருக்கிறது.) அஃது இல்லார்-(நல்லது செய்வதில், நல்ல திறமையை வளர்த்துக் கொள்வதில்) போட்டி போடும் குணம் இல்லாதார்; பெருக்கத்தில் 'தீர்ந்தாரும் இல்-செல்வத்தின் கண்ணும் தம் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொண்டவர்களும் அல்லர்.

அதாவது நல்லது செய்வதிலும், நல்ல திறமைகளை வளர்த்துக் கொள்வதிலும் மற்றவர்களிடத்தில் போட்டியிட்டு (பொறாமைகொண்டு) முன்னிற்காதவர்கள், கொண்ட கொள்கைகளை வென்றெடுக்கக் கூடிய செல்வமும், செல்வாக்கும் வாய்த்தவிடத்தும் அத்தாகத்தைத் தீர்த்துக் கொள்ள முடியாது என்பதே இக்குறட்பா மூலம் வள்ளுவர் சொல்லும் நீதியாகும். ஆம்; நல்லது செய்ய வேறு ஏது கிடைக்காதபோது பொய்மையும் வாய்மை இடத்து என ஒரு குறட்பாவில் கூறியது போல, நல்ல குறிக்கோள்களை நிறைவேற்ற இங்கு பொறாமையும் பொறுமை இடத்து என்று சொல்லாமல் சொல்கிறார் திருவள்ளுவர்.

# பயங்கரவாத ஜே.வி.பி.யுடன் பேசுவோர் புலிகளுடன் பேசக்கூடாதா?

### புரிந்துணர்வு அமைப்பு நிகழ்வில் பலர் கேள்வி

1998ம், 1999ம் ஆண்டுகளில் நாட்டில் நடைபெற்ற கொலை அச்சுறுத்தல் வன் செயல்களுக்குக் காரணமாய் இருந்த மக்கள் விடுதலை முன்னணியுடன் கைகோர்த்து காபந்து அரசாங்கமொன்றை அமைக்க முடியுமானால், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் பாதுகாப்புக்காக ஆயுதமேந்திப் போராட்டம் நடத்தும்புலிகள் இயக்கத்தை சமரசப் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து ஏன் பேசக்கூடாது என கொள்ளுப்பிட்டி சேலான் கட்டிடத்தில் நடைபெற்ற சிநேகா புரிந்துணர்வுக்கான அமைப்பு நடத்திய மனிதச் சங்கிலிப் போராட்ட வைபவத்தில் உரையாற்றிய பலரும் கேள்வி எழுப்பினார்கள்.

சிநேகா புரிந்துணர்வுக்கான அமைப்பின் ஸ்தாபகர் தேசமானிய வலிக்கொத்தலாவல தலைமை வகித்து பேசுகையில், நாட்டில் நடைபெறும் யுத்தத்திற்கு, முடிவு கண்டு நாட்டில் வாழும் சகல இனமக்களும் சமத்துவமாக அமைதி சமாதானத்துடன் வாழ வேண்டும் என நாம் அனைவரும் விருப்பம் கொண்டுள்ளோம்.

பலரும் சமாதானம், அமைதி பற்றி பேசுகின்றனர் ஆனால் யுத்தம் தொடர்கிறது. புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் நாட்டில் அமைதி சமாதானத்தை ஏற்படுத்த முடியாது. ஆகையால் கட்டாயம்புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். எமக்கு அரசியல் அமைப்புசட்டத்தைத் திருத்த அதிகாரமில்லை. அரசியல் தீர்வை முன்வைக்கவும் அதிகாரமில்லை.

### தமிழ்ச்செல்வன் சொன்னது...

நாம் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்திக்க அவகாசம் கேட்டு கடிதம் எழுதியுள்ளோம். அவரது விருப்பத்திற்கேற்ப உள்நாட்டிலோ அல்லது ஏதாவது ஒரு வெளிநாட்டிலோ அவரை சந்திக்க தயாராக இருக்கின்றோம்.

யுத்தம் தொடர்பாக தெற்கில் பிழையான கருத்துக்கள் நிலவுகின்றன. மொழி, கலாசாரம், சுயநிர்ணய உரிமை பாரம்பரிய நிலப்பரப்பைபாது காக்க ஆயுதம் எந்திப் போராட்டம் நடத்துகின்றேரம் எனத் தமிழ்செல்வன் எம்மிடம் கூறினார். யுத்தத்தை நாம் விரும்பவில்லை. யுத்தம் எம்மீது திணிக்கப்பட்டது என்றும் தமிழ்ச்செல்வன் கூறினார்.

உலகில் எந்த நாடும் யுத்தத்தினால் எதனையும் சாதிக்கவில்லை என்று நாணயக்கார சொன்னார்.

உடல் ஊனமுற்ற முன்னாள் படை வீரர்கள் சங்கத்தின் தலைவர் அசோக்கா தயாரத்னா பேசுகையில்:-

கடந்த 20 வருடங்களாக யுத்தம் தொடர்ந்து நடைபெற்ற பொழுதிலும் ஆட்சி பொறுப்பை ஏற்ற எந்த அரசாங்கமும் யுத்தத்தை நிறுத்த இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. அரசியல் காரணங்களுக்காகவே இப்பொழுது யுத்தம் நடைபெறுகிறது. நான் 1972ம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்து பல முக்கிய ராணுவ நடவடிக்கைகளில் கலந்துகொண்டேன். அதனால் எனது கையையும் இழந்து நிற்கின்றேன்.

### ஜே வி.பி.யின் பயங்கரவாதம்

1988, 1989ம் ஆண்டுகளில் நாட்டில் நடைபெற்ற கொலை, கொள்ளை உட்பட பல ஆயுத நடவடிக்கைகளுக்கு மக்கள் விடுதலை முன்னணி காரணமாய் இருந்தது. மக்கள் விடுதலை முன்னணியின் வன் செயல்களினால் பாதிக்கப்பட்ட படை வீரர்கள் எனது அமைப்பில் அங்கம் வகிக்கின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணி செய்த குற்றச் செயல்களை மன்னித்து அவர்களுடன் சேர்ந்து காபந்து அரசாங்கமொன்றைஅமைக்க முடியுமானால், புலிகள் இயக்கத்தை சமரசப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து நாட்டில் அமைதி சமாதானத்தை ஏற்படுத்த முடியாதா? எனவும் கேள்வி எழுப்பினார்.

காலத்திற்குக்காலம் சமரச பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன. ஆனால் காபந்து அரசாங்கம் அமைப்பதன் மூலம் சமரச முயற்சிகள் ஒரு வருட காலத்திற்கு பின் போடப்பட்டுள்ளது. அரசியல்வாதிகளினால் அமைதி சமாதானத்தை காணமுடியாவிட்டால் நாம் அதனை மேற்கொள்வோம்.

சமரச முயற்சிகளை ஒரு வருட காலத்திற்கு பின் போடும் நடவடிக்கையை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

### புலிகளை அழையுங்கள்

அரசியலமைப்பு சட்டத்தைத் திருத்தி அமைப்பதன் மூலம் நாட்டில் அமைதி சமாதானம் ஏற்படமாட்டாது. புலிகள் இயக்கத்துடன்பேச்சுவார்த்தை நடத்தாமல் அமைதி சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்றார்.

காணாமல் போன படைவீரர்களின் பெற்றோர், உறவினர் சங்கத்தின் தலைவர் நாணயக்கார உரையாற்றுகையில், தெரிவித்ததாவது:-

''1971ம் ஆண்டில் நாட்டில் முதன் முதலாக நடைபெற்ற கொலை கொள்ளை சம்பவங்களுடன் தொடர்பு உடைய மக்கள் விடுதலை முன்னணியுடன் கைகோர்த்து அரசு காபந்து அரசாங்கம் அமைக்க முடியுமானால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உடமைக்காக ஆயுதம் ஏந்திப் போராட்டம் நடத்தும் புலிகள் இயக்கத்தை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து சமரசத்தை ஏற்படுத்த முடியாதா? அந்த நடவடிக்கையில் அரசாங்கம் இறங்க வேண்டும்.

### பயன் இல்லாத சந்திப்பு

அரசாங்கத்தின் அனுமதியோ அல்லது செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் வழித்துணையோ இல்லாமல் நாம் வன்னிக்குச் சென்று புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகளை சத்தித்து பேச்சுவார்த்தை நடத்தினோம்.

கடந்த இரண்டரை வருடங்களுக்கு முன் காணாமல் போன படைவீரர்களின் பெற்றோர்கள் ஜனாதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஆனால் ஒருவித பலனும் ஏற்படவில்லை என்றார்.

## இப்படி நடந்திருக்குமோ

இலங்கையில்
ஈழத்தமிழர்களுக்கு
இழைக்கப்பட்ட
கொடுமைகள் கேட்டு
மாரடைப்பு வந்து
மாண்டு போனதோ
மனித நேயம்

சு. சிவா

# தந்தை செல்வா

த. சபாரத்தினம்

## சர். ஒலிவர் செய்த அரசியல் சதி

தந்தை அத்துடன் நிறுத்தவில்லை.

பல இன, பல மொழி பேசும் மக்கள் வாழும் நாடுகளில் சிறுபான்மை மக்கள் வாழும் பகுதிகளில் பெரும்பான்மை மக்களைக் குடியேற்றும் பலக்கமில்லை ஆனால் இலங்கையில் சாதாரண வழக்கத்துக்கு மாறாகத் தான் எல்லாம் நடக்கிறது என்று சொன்னார்.

அதற்கு டட்லி பதில் சொல்லவில்லை.

தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு முரண்பாடான தாக இருப்பதாக மட்டும் திரும்பவும் சொன்னார்.

ஆனால், கொழும்புத் தமிழர்கள் டட்லியை ஆதரிக்கு மாறு தமிழரசுக் கட்சியைத் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருந்தனர்.

டட்லி 'நல்லவர். அவரை நம்புங்கள்' என்பதே அவர்களின் வாதமாக இருந்தது.

'டி.எஸ். சேனநாயக்காவும் நல்லவர் தான். ஆனால் அவர் தான் தமிழினத்துக்கு குழி தோண்டியவர். நல்லவரான தந்தை தமிழினத் துக்கு இவ்வளவு துரோகம் செய்த பின்பு அவரின் மகனை நம்பச் சொல்லுகின்றீர்களா' என்று அவர்களுக்குப் பதில் சொன்னார் தந்தை செல்வா.

பாராளுமன்றத் திறப்பு விழா ஏப்ரல் 19ம் திகதி நடந்தது.

20ம் திகதி முதல் சிம்மாசனப் பிரசங்கம் விவாதிக் கப்பட்டது.

தந்தை செல்வா 22ம் திகதி பேசினார். அவர் யு.என்.பி.யைக் கடுமையாக தாக்கினார்.

கண்டி யாத்திரையை ஒழுங்கு செய்து மக்களைத் தவறான வழியில் இட்டுச் சென்றமைக்காக ஜே.ஆர். ஜெயவர்த்தனவைக் கண்டித்தார்.

தமிழ் பேசும் மக்களின் உண்மையான, எதிரி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யல்ல. யு.என்.பி.தான். ஒப்பந்தத்தைக் கிழித்து வீசு மாறு யு.என்.பி.க்குள் தான் திரு. பண்டார நாயக்காவை நிர்ப்பந்தித்தனர் என்றார் தந்தை. வாக்கெடுப்பின் போது டட்லி சேனநாயக்கா அரசாங்கம் தோற்கடிக்கப் பட்டது.

### அங்கம்-36

மந்திரி சபையின் அவசர கூட்டம் ஒன்றை டட்லி கூட்டினார். பிரதமர் பாராளு மன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தல் நடத்தப் போவதாக டட்லி சேன நாயக்கா கூறினார். சில அமைச்சர்கள் அம் முடிவை எதிர்த்தனர். தமிழரசுக்கட்சி யின் ஆதரவுடன் அரசாங் கத்தை அமைக்க சுதந்திரக் கட்சிக்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் எனவும், அவ் அர சாங்கம் நீடிக்க மாட்டாது எனவும் அது கவிழ்ந்ததும் நடத்தப்படும் தேர்தலில் பதவிக்கு வரமுடியும் என் பதையும் அமைச்சர்கள் வாதிட்டனர்.

ஆனால், கவர்னர் ஜென ரல் சர் ஜோன் கொத்தலா வலையைச் சந்தித்த டட்லி பாராளு மன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்து வதற்கே சிபார்சு செய்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் அரசாங்கத்தை அமைக்கக் கூடிய நிலையில் தாங்கள் இருப்பதாகவும் அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்றும் கவர்னர் ஜெனரலிடம் கேட்டனர்.

#### சர் ஒலிவர் சரியான குள்ள நரி

சனநாயக மரபுகளைத் தான் கடைப்பிடிக்கப் போவதாக அவர் அறிவித்தார். தங்களால் அரசாங்கம் அமைக்க முடியும் என்பதை நிரூபிக்கும் படி சொன்னார்.

ஏப்ரல் 24ம் திகதி எதிர்க் கட்சியினரைத் தனித் தனியாக வந்து தன்னை இராணி மாளிகையில் சந்திக்குமாறு சொன்னார்.

இராணி மாளிகைக்குப் போகும் வழியில் தந்தை செல்வா கொள்ளுப் பிட்டியிலுள்ள பீலிக்சின் வீட்டுக்குப் போனார். அங்கே சி.பி.டி. சில்வா, செனட்டர் ஏ.பி. ஜெயசூரிய ஆகியோரும் வேறு சில சுதந்திரக் கட்சித் தலைவர்களும் இருந்தனர்.

'நான் உங்களை ஆதரிப் பதாக சர் ஒலிவரிடம் சொல் லப்போகிறேன். நீங்கள் பதவிக்கு வந்தால் பி.சி. ஒப்பந் தத்தை முழுமையாக அமுல் செய்வீர்களா என்பதை அறிந்து கொள்வதற்காகவே வந்தேன்' என்றார் தந்தை.

சி.பி.டி. சில்வாவையும் ஜெயசூரியாவையும் பார்த்து 'இங்கே நீங்கள் இருவரும் இருக்கிறீர்கள். பீலிக்சின் வாக்குறுதியை ஏற்றுக்கொள் கிறீர்களா? என்று கேட்டார்.

இரண்டு பேருமே இணக் கம் தெரிவித்தனர்.

'நீங்கள் கொடுத்துள்ள உறுதி மொழியின் அடிப் படையில் சி.பி.டி. சில்வா சொன்ன பதில் இது. 'நான் மிகவும் கறாராகப் பேரம் பேசுபவன். ஓர் உடன்படிக் கைக்கு வந்து விட்டால் அதைப் பேணுபவன்.'

சாதியின் விளையாட்டு

திருப்தியடைந்த தந்தை செல்வா இராணிமாளிகைக்கு போனார்.

சர் ஒலிவர் தன் நிலைப் பாட்டை விளக்கினார்.

''பாராளு மன்றத்தைக் கலைத்துத் தேர்தல் நடத் தும் படி டட்லி சிபாரிசு செய்துள்ளார். அந்தச் சிபா ரிசை ஏற்பதற்கு முன்பு மாற்று அரசாங்கமொன்று அமைக்க முடியுமா என்று ஆராய்வது என் அரசியல் சட்டக் கடமை, தமிழரசுக் கட்சியினர் ஆதரவின்றி எதிர்க் கட்சியினரால் அரசாங் கத்தை அமைக்க முடியாது.

அதனால் நான் சுதந்திரக் கட்சியின் தலைமையிலான அரசாங்கத்தை ஆதரிக்க நீங் கள் தயாரா என்பதை அறிந்து கொள்வதற்காக உங்களை அழைத்திருக்கின் றேன்.

பீடிகை முடிந்ததும்அந்த முக்கிய கேள்வியை 'சர் ஒலி வர் கேட்டார்.

'சி.பி டி. சில்வா தலை மையிலான அரசாங்கத்தைக் குறைந்தது இரண்டு ஆண்டு களுக்கு ஆதரிப்பீரா?'

தந்தை அளித்த பதில் இது-'எனது கட்சி எஸ்.எல். எப்.பி.யுடன் ஓர் உடன் பாட்டுக்கு வந்துள்ளது. எனவே, நாங்கள் சி.பி டி. சில்வா தலைமையிலான அர சாங்கத்தை இரண்டு ஆண்டு களுக்கு மட்டுமல்ல, பாராளு மன்றத்தின் ஆயுட்காலம் முடியும் வரை ஆதரிப்போம்'.

தந்தை வீடு திரும்பிய சொற்ப நேரத்தில் பாராளு மன்றம் கலைக்கப்பட்ட, பொதுத் தேர்தலை ஜூலை மாதம் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்ட, அதற்கான பிரகடனம் வெளியிடப்பட்டு விட்ட செய்தி கிடைத்தது.

அம்முடிவுக்குச் சர் ஒலி வர் கொடுத்த காரணம் இது தான் ''தமிழரசுக் கட்சியினர் கொடுத்த ஆதரவு நிபந் தனையுடன் கூடியது. எனவே ஸ்திரமான மாற்று அரசாங்கத்தை சி.பி.டி. சில்வாவினால் அமைக்க முடியுமென நான் எண்ண வில்லை''.

சர் ஒலிவர் கொடுத்த காரணம் வெறும் வெளிப் பூச்சுத்தான்.

சி.பி.டி. சில்வா அரசாங் கம் அமைக்க அனுமதிக்கப் படாதமைக்கான உண்மைக் காரணம் வேறு.

அவருடைய சதிதான் அது.

(தொடரும்)

## மொட்டு மலரும்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அக்கா என்னை புரிந்து கொள்ளுவா எப் நான் உன்னை பிரம்புகிறேன்.

என்ன சொல்கிறீர்கள்?

எக்கத்தில் அவ்விடம் கிடைக்காத ஆறு உன்னிடம் கிடைக்கிறது.

அன்பு மட்டும்தானா? தயவு செய்து என்னை குழப் பாதீர்கள். வீட்டுக்கு வர வேண்டாம். எங்க வீட்டுக்கு போறன். மாமி மாத்திரை சாப்பிட வேண்டும். உடம் புக்கு முடியவில்லை.

நான் உன்னைக் கூட்டி கொண்டு போகத்தான் வந் தேன்.

நான் வரவில்லை மாமா வுடன் போகிறேன்.

அண்ணாவுடனே போங்க மாமா வேலைக்குப் போக வேண்டும்.

உன்னை கடத்திக் கொண்டுபோகிறேன். என்ன செய்வ?

முடிந்தால் செய்து பாருங்க.

உனக்கு இடம் தெரியாது நான் எங்க கூட்டிட்டு போனாலும் யாருக்கும் தெரியாது.

வீட்டுக்கு போய் கனிபா இன்னும் வரவில்லையா?''

இல்லை. அண்ணா கனிபாவையும் கூட்டி வந் திருக்கலாம் தானே?

அவ நேற்று ராசு கூடவே வந்துட்டா. அவன் காலை இங்கு வந்துட்டு எங்கோ போறதா சொன்னான்.

எங்க மக எங்க?

ஆ!...வந்து எனக்கு தெரிஞ்ச வீட்டில நிக்குறா.

என்னடா உதவி செய்த குடும்பத்திற்கு துரோகம் செய்த நீ நல்லா இருக்க மாட்ட.

அவன் பொறுக்கி அம்மா நாம வாடகை வீடு குடுக்காம அவனை ஊருக்கு அனுப்பி விடுவோம்.

அம்மா கடிதம் வந் திருக்கு அந்த பொறுக்கி போட்டுள்ளான்.

''அன்புள்ள கனிபா நான் உன் வாழ்க்கையில் குறுக்கிட மாட்டேன். உன் குணங் களை மட்டும் காதலிக்கிறேன் அது தப்பில்லை தானே?...''

கடிதத்தைப் படித்த கனிபா சிலையானாள். மொட்டு மலர்ந்தது. ஆனால் மாலையில் தொடுக்கப்பட வில்லை.

(இக்கதையை அனுப்பிய வர் பெயர் போடவில்லை.)

- ஆசிரியர்

## செல்வன் யோகராசா சபாரத்தினம்

### பள்ளி முதல் மாணவராகச் சாதனை

திருவண்ணாமலை மாவட்டம் கொண்டம் இலங்கை அகதிமுகாமில் வசிக்கும் மாணவர் செல்வன் யோகராசா சபாரத்தினம், இம்முறை கொண்டம் மருத்துவம்பாடி புனித மரியன்னை உயர்நிலைப்பள்ளியில் 2000/2001 கல்வியாண்டில் 10ம் வகுப்புத் தேர்வில் 409 மதிப்பெண் கள் பெற்று, முதல் மாணவராகத் தேர்வு பெற்றுள்ளார். இவரை பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டிக் கவுரவித்துள்ளனர்.

மேலும், இவரைப் பாராட்டி யேலூர் மறைமாவட்ட சபையினரால் ஒரு மிதிவண்டி இவருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

முகாம் மாணவர்களும், ஆசிரியர்களும் மற்றும் மாணவர் மன்றமும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

தகவல் : ஆர். கிருஷ்ணபிள்ளை

## மகனைத் தேடும்

### பெற்றோரின் கண்ணீர்ச் செய்தி

இலங்கை வவுனிக்குளம் 5ம் கட்டையைச் சேர்ந்த B. லோரன்ஸ் காந்திமதி இவர்களின் மகன் L. மதியழகன் (வயது 20) என்பவர் கிளிநொச்சி காய்கறிச் சந்தையில் வியாபாரம் செய்த சவரி சந்தியோகு என்பவருடன் 1998ல் இந்தியா வந்து மண்டபம் முகாமில் S.P 12ல் இருந்தவர் தற்போது எங்கு உள்ளார் என்று தெரியவில்லை. இவரை பற்றிப் பல முகாம்களில் தேடியும் விபரம் கிடைக்க வில்லை. இவரைக் காணாமல் இவரின் பெற்றோர் (இலங்கை-வெள்ளாங்குளம்) அங்கு தவிக்கிறார்கள். இவரைப்பற்றி தகவல் தெரிந்தவர்கள் தயவு செய்து எங்களோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள் கிறோம்.

தகவல் தரவேண்டிய முகவரி ;

B. ஜெரோம் சில்வேஸ்டர்

இலங்கை அகதிகள் முகாம், கோபால்பட்டி, வேம்பார்பட்டி (Post), திண்டுக்கல்-624001 (DT)

# இலங்கையை அழிப்பாரா சந்திரிகா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த இந்தியாவைக் கடுமையாக எதிர்ப்பவர்கள் ஜே.வி.பி.யினர். அவர்களுடைய ஆதரவுக்காக அந்த ஆதரவின் மூலம் பதவியில் நீடிப்பதற்காக சந்திரிகா, இலங்கையின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கியுள்ளார்.

ஏனெனில், நார்வே நாட்டின் மத்தியஸ்த முயற்சி காரணமாக பேச்சுவார்த்தை மூலம் சமாதானம் சாத்தியமாகும் என்கிற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருந்தது.

விடுதலைப் புலிகள் தாமாகவே முன் வந்து 3 மாதங்கள் தன்னிச்சையாகப் போர்நிறுத்தத்தை அறிவித்து அதை அரசாங்கம் ஒப்புக் கொண்டு, தானும் போர் நிறுத்தம் செய்திட முன் வராதபோதும் கூடக் கடைப் பிடித்தனர்.

ஆனால், நார்வேயின் மத்தியஸ்தமுயற்சியை அவர்கள் விடுதலைப் புலிகளுக்குச் சார்பாக இருக்கிறார்கள் என்று கொச்சைப்படுத்தி, அதை சிங்கள மக்கள் எதிர்க்கும்படி இனவாத புத்தபிக்குகளும், ஜே.வி.பி.யினரும் தூண்டிவிட்டனர்.

இதனிடையே சந்திரிகாவின் ஆளுங்கூட்டணியில் இடம்பெற்றிருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிகார மட்டத்தில் தங்களுக்கு உரிய மரியாதை தரப்படவில்லை என முறைத்துக் கொள்ள, ‘‘முஸ்லிம்கள் தமிழர்களைப் போலவே முக்கியத்துவம் பெற முயற்சிக்கிறார்கள்’’ என சிங்கள அரசியல்வாதிகள் தங்களுக்கேயுரிய இயல்புபடி அதற்கு இனவாத முலாம் பூச, முஸ்லிம் காங்கிரஸ் அரசிலிருந்து விலகியதால் பிரதான எதிர்க்கட்சியாகிய ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூடி தேசியஅரசு, உடைத்து சொல்வதாயின் சிங்களதேசிய அரசு அமைக்கலாம் என்று சந்திரிகாவை முயன்று பார்க்கச் செய்தது.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியோ நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, சந்திரிகா அரசைக் கவிழச் செய்வதன் மூலம் அதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசைச் சேர்த்துக் கொண்டு, தானே ஆட்சி அமைக்க வாய்ப்புள்ளது என்று தெரிந்ததால் ‘தேசிய அரசு’ என்று சந்திரிகா விரித்த வலையில் சிக்கவில்லை.

அதையடுத்து, தனது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றச் செய்வதற்காக மக்களிடம் நேரிடையாக வாக்குக் கணிப்பு நடத்தப்போவதாக அறிவித்தார் சந்திரிகா.

உள்ளபடி தனது அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள சந்திரிகா மேற்கொண்ட ஒரு உத்திதான் அது என்றாலும், தமிழர் பிரச்சினையைத் தீர்க்கவே அதை மேற்கொள்வதாக அவர் கூறியதால், தமிழ் மக்களுக்கு எதையும் கொடுக்கக் கூடாது என்பதில் தீவிரமாக உள்ள ஜே.வி.பி.யினர்,

1. யுத்தத்தை நிறுத்தக் கூடாது.

2. இலங்கையை சுதந்திரத்தின் பெயராலோ, சுயாட்சியின் பெயராலோ, ஒற்றையாட்சி முறையிலிருந்து மாற்றக்கூடாது. வாக்குக் கணிப்பைக் கைவிட வேண்டும்.

3. ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு சரணடைந்தாலன்றி, விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த உடன்படக் கூடாது.

என்கிற 3 முக்கிய நிபந்தனைகளின் பேரில் அரசில் பங்கு பெறாமலே சந்திரிகா அரசுக்கு ஆதரவு தருவதாக ஜே.வி.பி. அறிவித்து, தற்போதைக்குத்தன் ஆட்சியைக் கவிழாமல் காப்பாற்றினால் போதும் என்கிற முடிவுடன் சந்திரிகாவும் அதற்கு உடன்பட்டு விட்டார்.

இதனால், சமாதான முயற்சிகள் பின்னுக்குப்போய் விட்டன. அமெரிக்காவில் பயங்கரவாதிகள் மேற்கொண்ட தாக்குதல்கள் காரணமாக உலகமே குழப்பமடைந்திருந்தாலும், போர் நிறுத்தம் அறிவிக்கப்படாததால், பொருளாதாரத் தடைகள் அகற்றப்படாததால் விலைவாசிகள் சாதாரண மக்கள் தாங்க முடியாத அளவுக்கு விஷம் போல் உயர்ந்து விட்டன. தொழில்துறை சீர் குலைந்து வியாபாரம் படுத்து விட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது.

மேலும், இலங்கையின் பொருளாதாரம் பெரும்பாலும் சுற்றுலாப் பயணிகளையே சார்ந்திருப்பதால், போர்நிலை காரணமாக வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகளின் வருகை அறவே குறைந்து இலங்கையில் பணப்புழக்கமே படுத்து விட்டது. வேளாண்மையும், தொழிலும் வீழ்ச்சியடைந்து விட்டன.

உலகப் பொருளாதாரத்தையே தன் சுட்டுவிரல் அசைவில் ஆட்டி வைத்த அமெரிக்காவே நியூயார்க் உலக வர்த்தக மையம் தகர்க்கப் பட்டதாலும், பெண்டகன் இராணுவத் தலைமையகம் தாக்கப்பட்டதாலும் நிலைகுலைந்து நிற்கிறதென்றால் இலங்கை நிலை பற்றி என்ன சொல்ல?

ஆம்; அமெரிக்கத் தொழில் நிறுவனங்கள் ஒன்று மாற்றி ஒன்று தன் ஊழியர்களை ஆயிரக்கணக்கில், ஏன்; இலட்சக்கணக்கிலே கூட வேலையை விட்டு நீக்கி வருகின்றன. இதனால் அமெரிக்க மக்களிடம் ஏற்படும் பீதியை மாற்ற அமெரிக்க அரசு போர் நடவடிக்கைகளைப் பெரிதுபடுத்திக் காட்டிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அப்போரின் விளைவாக உலகப் பொருளாதாரமே உருக்குலைந்து போய்விடுமோ என்ற அச்சம் அனைத்து நாடுகளிலும் தோன்றியுள்ளன.

அத்தகைய சூழ்நிலையில் ஆட்சியதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகவும், ஜே.வி.பி.யின் ஆதரவுக்காகவும் சந்திரிகா போர் நிறுத்தத்தை அறிவிக்காமல், பொருளாதாரத் தடைகளையகற்றாமல், சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடங்காமல், அரசியல் நாடகத்தை நடத்திக் கொண்டிருப்பது, இலங்கைத் தமிழ் மக்களை மட்டுமல்ல, சிங்கள மக்களையும் படுகுழியில் தள்ளுவதேயாகும்.

புலிகளும் தமிழ் மக்களிடையே உள்ள சனநாயக சக்திகளைத் தாராளமாக இயங்க அனுமதித்து, சமாதான முயற்சிகளின் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முன் வராமல், ஆயுதப் போராட்டத்தை மட்டும் நம்பிக் கொண்டிருப்பது அழிவுக்கே வழிவகுப்பதாகும்.

இந்தியாவும் முன்பு நேர்ந்த கசப்பான அனுபவங்களை மட்டுமே மனத்தில் இருத்திக்கொண்டு, இலங்கையில் ஒரு சுமூகத்தீர்வு ஏற்பட இரு தரப்பையும் நிர்ப்பந்திக்காமல் பாராமுகமாக இருக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு, ஈழத்தமிழர் பாதுகாப்புக்கழகம் அந்த அறிக்கையில் கூறியுள்ளது.

---

### முகாம் மக்கள் பெண் குழந்தைகளிடம் விழிப்பாய் இருக்கத் தூண்டும் நிகழ்வு

## பெருமாள்புரம் முகாம் சிறுமி கற்பழித்துக் கொலை: இருவருக்கு ஆயுள் சிறைத் தண்டனை!

கன்னியாகுமரி மாவட்டம் பெருமாள்புரம் இலங்கை அகதி முகாமில் வசித்து வருபவர் ரெங்கநாதன் (வயது 47) இவருக்கு சந்திரகலா (வயது 15) சசிகலா (வயது 9) ஜெகன் குமார் (வயது 7) ஆகிய மூன்று மக்கள்.

முகாமுக்குப் பக்கத்தில் காசிநாடார் என்பவர் வசித்து வருகிறார். பள்ளி விடுமுறை நாட்களில் ரங்கநாதனின் மூன்று குழந்தைகளும் காசி நாடார் வீட்டுக்குத் தொலைக் காட்சி பார்க்கச் செல்வாராம்.

இந்நிலையில் கடந்த 31-3-98 அன்று தொலைக் காட்சி பார்க்கச் சென்ற ரங்கநாதனின் 2வது மகளான சசிகலா வீடு திரும்பாததால், காசிநாடார் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது யாரும் அங்கு இருக்கவில்லை.

மறுநாள் காலை சரவணம் சேரி செல்லும் சாலையில் உள்ள ஒரு பாலத்தின் அடியில் ஒரு குழந்தையின் பிணம் எரிந்த நிலையில் கிடப்பதாகத் தகவல்வர சென்று பார்த்தால் சசிகலா சடலம். இதுபற்றி கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் போலீசார் நடத்திய விசாரணையில் காசிநாடாரின் மகன் ஐயாசிவம் (வயது 29) அவரது நண்பர் அர்ஜுன் (வயது 29) ஆகிய இருவரும் சசிகலாவைக் கற்பழித்துக் கொன்று, சாககுமூட்டையில் கட்டிக் கொண்டுபோய் எரித்திருப்பது தெரியவந்தது.

இது சம்பந்தமான வழக்கு நாகர்கோவில் கூடுதல் செசன்ஸ் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. வழக்கை விசாரித்த நீதியரசர் சொக்கலிங்கம் குற்றவாளிகள் இருவருக்கும் ஆயுள்தண்டனையும், தலா ரூ.3ஆயிரம்அபராதமும் விதித்துத் தீர்ப்புக் கூறினார்.

இதை ஒரு படிப்பினையாகக் கொண்டு முகாம் வாழ் பெற்றோர்கள் தங்களின் பெண்குழந்தைகள் விடயத்தில் மிக விழிப்பாக நடந்து கொள்வது இன்றியமையாததாகும்.

---

## வெப். தளத்தில் யாழ். இந்துக் கல்லூரி

யாழ். இந்து மகளிர் கல்லூரி தொடர்பான விடயங்கள் அண்மையில் வெப் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக் கிளையின் விடா முயற்சியின் பயனாகவே இந்நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இது இக் கல்லூரியின் வளர்ச்சியில் ஒரு பாரிய முன்னேற்றமாகும். உலகளாவிய ரீதியில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் கல்லூரியின்பழைய மாணவிகளுக்கும் நலன் விரும்பிகளுக்கும், கல்லூரி தொடர்பான விடயங்களை அவ்வப்போது தெரியப்படுத்துவதற்கும் அவர்களின் கருத்துக்கள் உதவிகள் துரிதமாகப் பெற்று இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு மேலும் உதவுவதற்கும், வெப் தளம் ஒரு அடித் தளமாக விளங்கும் என்பது மேற்படி பழைய மாணவிகள் சங்கத்தினரின் நம்பிக்கையாகும்.

இக்கல்லூரி தொடங்கிய காலத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் இந்து மாணவிகளுக்கென்று ஒரு கல்லூரி இல்லையே என்ற குறையை நிரப்பியது. அன்றிலிருந்து தொடர்ச்சியாகக் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் ஆர்வமுள்ள பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரும் இணைந்து ஆற்றிய பணிகளினால் கல்லூரி ஸ்தாபகர்களின் கனவை நனவாக்கி யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் இந்து மாணவிகளுக்கு அளப்பரிய சேவை செய்யும் ஒரு ஸ்தாபனமாக இப்போது வளர்ந்துள்ளது.

---

### தொழிற்கல்வி பெற அரிய வாய்ப்பு

இலங்கை அகதி முகாம்களில் 10ம் வகுப்பு நிறைவு செய்வோர், 12ம் வகுப்பு சித்தியடையாத மாணவர்கள் தொழிற்கல்வி (ITI) கற்றுக்கொள்ள அரிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஓசூர், சென் ஜோசப் ITI நிறுவனத்தில் மாணவர்கள் சேர்ந்து படிக்க அந்நிறுவனம் வாய்ப்பளித்துள்ளது. இவ்வரிய வாய்ப்பு எமது அகதி மாணவர்களுக்கு மட்டுமே. இப்பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் விரைவில் சென்று சேருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இங்கு சேர்வோருக்கு (அகதிகளுக்கு மட்டும்) கல்லூரிக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. விடுதிக் கட்டணம் மாதம் 550 ஆகும். இதில் அரைவாசியை JRS வழங்கும். கல்லூரி அனுமதிக் கட்டணம் ரூ. 610 மட்டும் செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட இடங்கள் மட்டும் இருப்பதால், விரைவில் சென்று சேரவும்.

கல்லூரி முகவரி:
சென் ஜோசப் தொழிற் கல்லூரி
ஓசூர், தருமபுரி மாவட்டம்

தகவல் : கல்விப் பகுதி ஈ.ஏ.ம.க.

Edited, Printed, Pubished and Owned by ARUNACHALAM GOPALAN, APT. F-17, 5th Floor, P.A. Towers, 33, Halls Road, Egmore, Chennai-8.
Printed at Kuraneri Achagam, 4/77, Subethar Garden, Choolaimedu, Chennai-94.

சனநாயகம்-சமதர்மம்-சமய சார்பின்மை-நமது பாதை